கொள்கை விளக்கக் குறிப்பு

மானியக் கோரிக்கை 17—கல்வி

(1991-92)

©
தமிழ்நாடு அரசு
1991

...ரசினருக்காக தமிழ்நாடு எழுதுபொருள்
...ற இயக்குநரால் அச்சிடப்பெற்றது

T (X713). 211'N91
N91
168931

உள்ளடக்கம்

இயல்		க்க
I	முகப்புரை	
II	பள்ளிக் கல்வி	
	(i) தொடக்கக் கல்வி	1
	(ii) உயர்நிலைப் பள்ளிக் கல்வி	1
	(iii) மேல்நிலைப் பள்ளிக் கல்வி	2
III	கல்லூரிக் கல்வி	3
IV	தொழில் நுட்பக் கல்வி	4
V	பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி	62
VI	விளையாட்டு உடற்பயிற்சி மற்றும் இளைஞர் நலன்	67
VII	ஆசிரியர் தேர்வு வாரியம்	73
VIII	தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம்	74
IX	நூலகங்களும் ஆவணக் காப்பகங்களும்	75
X	அரசுத் தேர்வுகள்	81
XI	அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்	82

1 முகப்புரை

நாம் வாழும் சமுதாயத்தில் மாற்றத்தையும், மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தவல்ல ஆற்றல் வாய்ந்த பொருண்மையாக ஒரு மாநிலத்தில் வழங்கப்படும் கல்வித்திறனே அமைகிறது. ஒரு சமுதாயத்தின் தேவைகள், முன்னுரிமைகள், விழுமிய கோட்பாடுகள் கல்விப் பயிரின் விளைவாகத் தழைப்பனவாகும். ஒரு துறையில் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கு வழிவகை செய்வதோடு, மாணவர்கள் தாமே சிந்திக்கும் திறமையை அவர்களுக்கு வழங்கத் தகுதிவாய்ந்த முழுமையை ஊக்குவிக்கும் திறப்பாட்டையும் கல்வித் திட்டமே வழங்க வேண்டும். எதிர்காலத் தேவைக்கு ஏற்பத் தன்னை உரிய வகையில் உருவாக்கிக் கொள்ளும் மனப்பாங்கு கல்வியால் மலர்வதாகும். கல்வி வாழ்க்கையே நாகரீக வாழ்வாகும். தொல்பழங்காலத்திலேயே கல்வியின் பெருமை நம் நாட்டவரால் உணரப்பட்டது. வளரும் சிறுவரின் உள்ளத்தில் மறைந்து கிடக்கும் அறிவாற்றலையும், செயலாற்றலையும் மேலும், மேலும் கற்பதின் பயனாகவே கல்வியொளி பரவுகிறது. கல்வி என்னும் சொல்லிலேயே இப்பொருள் அடங்கியுள்ளது. இக்காலத்தில் கல்வியின் வகைகள் பலவாகிவிட்டன. '' கல்வி கரையில '' என்பது முதுமொழி.

2. கல்வி என்பது ஒரு தனிப் பொருளோ, ஏதோ ஒன்றை நமக்குப் புதிதாக ஊட்டுவதோ அல்ல. மனித ஆற்றலை—திறமையை—தேர்ச்சியை வளப்படுத்தும் முறைமைக்குத் தான் கல்வித் திட்டம் என்று பெயர். பிறக்கும் ஒவ்வொருவரும் ஆற்றலோடுதான் பிறக்கிறார்கள். ஆற்றலோடு பிறந்த மக்கள் அனைவருக்குமாக அறிவொளி மலர கல்வி பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பது நமது இலட்சியமாகும். ஒரு மனிதனுடைய ஆற்றல் ஒரு கணங்கூட வீணாகலாகாது என்பது அரசின் கருத்து. ''நம்மிடையே புதைந்துள்ள சிறந்தவற்றை உடல், மனம் ஆன்மா ஆகியவற்றில் படிந்துள்ள சிறந்த கூறுகளைச் சீர்பட வெளிக் கொணர்வதே கல்வியின் நோக்கமாகும்'' என்று அண்ணல் காந்தியடிகள் கருதினார். தொடக்கக் கல்வி நிலையிலேயே குழந்தைகளுக்கு 1, அறிவுத்திறமூட்டல் 2. பயிற்சி நல்குதல், 3. சமுதாய நோக்கைப் புகட்டுதல், 4. மனவெழுச்சியைத் தோற்றுவித்தல் என்ற நிலையில் முழுமையான கல்வியை வழங்க நாம் கருதுகிறோம்.

3. இளஞ்சிறார்களுக்குக் கல்விப் பயிற்சியைத் தொடங்கும் போதே தாம் எதிர்கொள்ளவிருக்கும் வாழ்க்கைப் புதுமைகளையும் ஒரு தகுதி நிலைக்குத்தம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ளும் திறங்களையும் பயிற்றுவிக்கின்றோம். அறிவு பெறுதல், அறிவு பெறுவதற்கான ஆர்வத்தைத் தூண்டுதல் என்பது கல்வியின் அடிப்படை நோக்கமாகும். பள்ளிக்குச் செல்லத் தொடங்கும் சிறுவர்களின் மனம், விரிந்த சிந்தனைக்கு வயப்படுவதற்கு அடிப்படை ஊற்றுக்கண்ணாக அமைவது தாய்மொழிக் கல்வியாகும். தாய் மொழி என்பது ஊனோடும், உயிரோடும் ஒன்றிக் கலந்ததாகும். எனவேதான், தொடக்கக் கல்வி முழுவதிலும் தாய் மொழியான தமிழ்மொழியே பயிற்சி மொழியாகஅமைய வேண்டும் என்பதைப் பேரறிஞர் அண்ணா அவர்களும், புரட்சித் தலைவர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களும் பலமுறை வலியுறுத்தினார்கள்.

4. இந்த உயரிய இலட்சியத்தை நோக்கித்தான் புரட்சித் தலைவர் அரசை மக்களின் பேராதரவோடு மீண்டும் அமைத்து தமிழக அரசின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கல்வி வளர்ச்சிக்கான திட்டங்களை அறிவித்து செயற்படுத்த முனைந்துள்ளார்கள். இதனை ஒட்டித் தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்த இரு மொழித் திட்டத்தை தமிழும் ஆங்கிலமும் இரண்டு கண்களைப் போல இளஞ்சிறார்களுக்கு கட்டாயமாகக் கற்பிக்க வழிவகை காணப்படும் என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளார்கள்.

5. வயிற்றுக்குச் சோறிட வேண்டும் அதே நேரத்தில் பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரினை உயர்த்திட வேண்டும் என்ற பாரதியாரின் நோக்கின்படி வயிற்றுக்கு உணவும், வாழ்க்கைக்குக் கல்வியும் ஒருசேரப் பள்ளிகளிலேயே வழங்கவேண்டும் என்னும் உன்னதத் திட்டத்தை—உணவுத் திட்டமாக—உணர்வுத் திட்டமாக உருவாக்கியபெருமை மாண்புமிகு அமரர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களையே சாரும்.

6. "சத்துணவு வழங்கியதால் விளைந்த சாதனை என்ன ? என்று கேட்டவர்களுக்கு , உணவுச் சத்து மட்டுமல்ல, உண்மையான கல்விச் சத்தும் மாணவரிடையே உயர்ந்துள்ளது என்பதைப் பள்ளிக்குச் செல்லாமல் இடைநின்ற எளிய சிறுவர்களின் எண்ணிக்கை இத்திட்டத்தின் விளைவாக அளவால் குறைந்ததோடு, பள்ளிக்குச் சேர்வோர் அளவால் மிகுந்தும் காணப்படுகிறார்கள் என்று கல்வித் துறையின் ஆய்வுப் பிரிவு வழங்கிய புள்ளி விவரங்கள் புலப்படுத்திக் காட்டியதையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை முதல்வராகக் கொண்ட அரசின் கல்வி அமைச்சர் என்ற முறையில் நான் இப்போது பெருமிதத்தோடு குறிப்பிட

விரும்புகிறேன். 1981-82ஆம் ஆண்டில் 30.62 என்ற விழுக்காட்டில் மாணவர்கள் பள்ளிப் படிப்பைத் தொடர்வதை இடையில் விட்டுவிட்டனர். இந்த அவலம் 1990-91ஆம் ஆண்டில் 20.32 என்ற அளவுக்குக் குறைந்தது. மாணவருடைய எண்ணிக்கையின் அளவு மிகுந்தது என்றால் இது சத்துணவுத் திட்டத்தால் விளைந்த சாதனை என்பதைக் கல்வி நிபுணர்கள் இன்று ஒப்புக் கொள்கின்றனர்.

7. கல்வித்துறையில் கடந்த பல ஆண்டுகளாக நமது மாநிலம் வளர்நிலையிலேயே அமைந்துள்ளது. கடுமையான நிதி நெருக்கடி நிலவிய போதும், கல்வித் துறைக்கு நிதியொதுக்குவதில் தலையாய முன்னுரிமையை அரசு வழங்குகிறது. 1991-92ஆம் ஆண்டில் கல்விக்குரிய ஒதுக்கீடு ரூ.1,299 கோடியாகும். இது இம்மாநில மொத்தச் செலவில் 21 விழுக்காடாகும். 1991இல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை 63.72 விழுக்காடாகும். கேரள மாநிலத்திற்கு அடுத்த நிலையில் நமது மாநிலம் இந்தியாவில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது என்பது குறிக்கத்தக்கதாகும். எனினும் முதனிலையை எட்டிப் பிடிப்பதே நமது இடையறாத முயற்சியாகும்.

8. தொடக்கக் கல்வி நிலையில் மாணவர்களின் சேர்க்கையில் தமிழ்நாடு 100 விழுக்காடு நிறைவு செய்துள்ளது. நாட்டின் சமூகப் பொருளாதார, அரசியல் பண்பாட்டு முன்னேற்ற நடவடிக்கைகளில் கல்வி முதன்மையாகப் பங்கு பெறுகிறது என்பதை முன்னரே குறித்தோம். எனவே, மக்கள் அனைவரும் கல்வி வாய்ப்பைப் பெறுவதற்கான அடிப்படை வசதிகளை வழங்குவது மக்களாட்சியின் முதற்பெருங் கடமையாக மிளிர்கிறது. இளவயது முதற்கொண்டே மாணவர்கள் தம் திறமைகளையும், விரிந்த மனப்பான்மையையும் வளர்க்கும் வகையில் தற்போதைய கல்விமுறையைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 1978-ம் ஆண்டில் புரட்சித் தலைவர் ஆட்சியில் மேனிலைப் பள்ளி உருவாக்கப் பெற்று தொழிற்கல்வி முறை 709 பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது கல்வித் துறையில் நிகழ்ந்த மாபெரும் மாற்றமாகும். இன்றைய நிலையில் 1375 பள்ளிகளில் 86 ஆயிரம் மாணவர்கள் இத்தொழிற் கல்வியால் பயன்பெறுகின்றனர். அனைத்திந்திய நிலையில் மொத்த மாணவர்களில் 5 சதவீத விழுக்காட்டினரே தொழிற் கல்வி பயிலும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். ஆனால் தமிழகத்தில் 18 விழுக்காட்டினர் இவ்வரிய வாய்ப்பைப் பெற்றுள்ளனர். உண்மையான கல்வி முறையை வளர்க்கும் அதே நேரத்தில் உடல் உழைப்பையும் இணைத்து அறிவும் உழைப்பும் சேர்வது தான் தொழிற்கல்வியின் அடிப்படை என்ற நிலையில் 1978 ஆம் ஆண்டில் புரட்சித் தலைவர் ஏற்றிய பொன் விளக்கின் ஒளிச்சுடர்தான் இப்பொழுதும் மங்காமல் நாடெங்கும் சுடர் வீசுகின்றது என்பதும் நம்மை நெகிழ வைக்கின்றது. மாண

வர்கள் தமக்கேற்ற அடிப்படைத் திறமைகளை வளர்க்க இத்தொழிற்கல்வி பெரிதும் உதவியது. அந்த வகையில் தொழிற்கல்வியை மேலும் விரிவுபடுத்த உரியகவனம் செலுத்தப்படும்.

9. அனைவருக்கும் எழுத்தறிவு வழங்கப் படிப்படியாகத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1991—92 ஆம் ஆண்டில் இத்திட்டம் 7 மாவட்டங்களில் செயற்படுத்தப்படும். மகளிர் கல்வியை மேம்படுத்தத் தனி முயற்சி மேற்கொள்ளப்படும். கல்வித்துறை அனைத்திலும் மாணவியரின் செயற்பாடு நமக்குப் பேருக்கத்தைத் தருகிறது. 'அச்சமும் மடமையும் இல்லாத பெண்கள் அழகிய தமிழ்நாட்டின் கண்கள்' என்று ஆர்வத்தோடு நாம் முழங்கும்வண்ணம் மகளிர் கல்வி உயர்ந்த நிலையினை எய்தி வருகிறது.

10. ஆசிரியப் பணிக்குப் போதிய திறமும், அறிவார்வமும், ஆற்றலும் தேவைப்படுகின்றன. ஆசிரியர் வழிகாட்டியாகவும், சிறந்த குறிக்கோள் கொண்டவராகவும், மதிப்பீட்டாளராகவும் விளங்குவதால் ஆசிரியர் பயிற்சிக்கும், நலனுக்குமாக அரசால் தனிக் கவனம் செலுத்தப்படும்.

11. தேசியப் படிப்புதவித் திட்டத்தின்படி உதவித்தொகை வழங்குவதுபோலவே கிராமப்புறங்களில் உள்ள மாணவ மாணவியரை ஊக்குவிப்பதற்காகத் தகுதிப் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால், ஒவ்வொரு மாவட்டத்திலும் 50 மாணவர்கள், 50 மாணவியர்கள் பயன்பெறுவார்கள்.

12. தொழில்நுட்பக் கல்வியைப் பெரிய அளவில் விரிவுபடுத்தவும், தரத்தை மேம்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கென உலக வங்கி நிதியுதவியுடன் ரூ. 76 கோடி செலவில் பல்தொழில் பயிலகங்களை நவீனப்படுத்திச் சீரமைக்கும் திட்டம் செயற்பாட்டில் உள்ளது.

13. கூடுதல் பள்ளிக் கட்டிடங்கள் கட்டவேண்டியதன் அவசியம் பன்மடங்காகப் பெருகியுள்ளது. 1991—92 ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகளுக்கும், மேனிலைப் பள்ளிகளுக்கும் கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு ரூ. 75 இலட்சம் ஒதுக்கியுள்ளது. பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்காக அட்கோ மற்றும் உலக வங்கியின் நிதியுதவிகளைப் பெறவும் முயற்சி மேற்கொள்ளப்படும். தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1000 தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்படவுள்ளன. நமது முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கல்விப் பெருக்கத்தைக் கருத்திற்கொண்டு தனியார் தொழிற்கல்வி நிறுவனங்களைத்

தொடங்கியதையும், அத்தொடக்கத்தின் விளைவாகப் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இன்று தொழிலியற் கல்விபட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்றிருப்பதையும் நாம் மறப்பதற்கில்லை.

14. கல்வி வளர்ச்சி ஒரு நாட்டின் முழு மலர்ச்சிக்கும் துணை நிற்பது. இந்நிலையில் வளம் படைத்தவர்கள் செல்வந்தர்கள் என்றில்லாமல் அனைத்து நிலையினரும் தத்தம் நிலையில் கல்வி வளர்ச்சிக்கு நிதியுதவி வழங்க வேண்டியது வரவேற்கத்தக்கதாகும்.

15. மாவட்டந்தோறும் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகளை நடத்துவதன் வழியாக ஆங்காங்கே அமைந்துள்ள பள்ளிகளின் அடிப்படைத் தேவைகள், வசதிகள் வாய்ப்புக்களை மேலும் விரிவாகப் பெருக்கும் வகையில் அந்தந்த மாவட்ட மக்கள் கல்விப் பணியில் ஆர்வத்தோடு ஈடுபடுகின்றனர். கொடையுள்ளம் கொண்ட பெருமக்கள் அனைத்து வழிகளிலும் துணைநின்று உதவவும் இம்மாநாடுகள் அவர்களுக்குத் தூண்டுகோலாக அமையும்.

16. மகாகவி பாரதியார் நினைவூட்டிய கருத்தையே நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கல்விப் பணியில் அனைவரும் பங்கு பெறுவோம் என்ற நிலையில்

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
　　இனிய நீர்த்தண் சுனைக ளியற்றல்,
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்,
　　ஆல யம்பதி னாயிர நாட்டல்,
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
　　பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்;
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
　　ஆங்கோ ரேழைக் கெழுத்தறி வித்தல்.

நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர் !
　　நிதிகு றைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச்சொ லருளீர்!
　　ஆண்மை யாள ருழைப்பினை நல்கீர்!
மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்
　　வாணி பூசைக் குரியன பேசீர்!
எதுவு நல்கியிங் கெவ்வகை யானும்
　　இப்பெ ருந்தொழில் நாட்டுதும் வாரீர்!

17. கல்விப் பணியை நாட்டின் கண் திறக்கும் பணியாக மாணவர்கள், ஆசிரியர்கள், மக்கள் அனைவருமே கருதும் பொற்காலம் இப்போது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் காலத்தில் பூத்துள்ளது.

18. கல்விச் செலவும் மாநில வரவு-செலவுத் திட்டமும்:

(i) கல்விக்காக 1991–92ஆம் ஆண்டில் "மானியக் கோரிக்கை 17-கல்வி"-ன் கீழ் ஒதுக்கியுள்ள ரூபாய் 1,299 கோடி. அவ்வாண்டு வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்த செலவான ரூ. 6,250 கோடியில் சுமார் 21 விழுக்காடாகும். கல்வி மானியக் கோரிக்கையின் கீழ் 1991-92ஆம் ஆண்டின் வரவு-செலவு மதிப்பீட்டில் பல்வேறு நிலைக் கல்விப் பணிகளுக்கும் செய்துள்ள நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு :—

அட்டவணை—1.

கணக்குத் தலைப்பு.	1991-92ஆம் ஆண்டு வரவு–செலவு மதிப்பீடு.		
	திட்டமில்லாச் செலவினம்.	திட்டச் செலவினம்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்)		
2059. அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றின் கட்டட பராமரிப்பு செலவு ..	4,62	..	4,62
2202. பொதுக் கல்வி—			
01. தொடக்கக் கல்வி ..	5,20,89	23,04	5,43,93
02. உயர்நிலைப் பள்ளிக் கல்வி	3,70,71	2,82	3,73,53
03. கல்லூரிக் கல்வி	1,28,90	3,53	1,32,43
04. வயதுவந்தோர் கல்வி ..	1,85	11,63	13,48
05. மொழி வளர்ச்சி ..	1,31	15	1,46
80. பொது-ஏனைய செலவு ..	1,45,93	..	1,45,93
கூட்டுக—திருப்பி வசூலிப்பவை ..	10,10	..	10,10
பொதுக் கல்வி மொத்தம் ..	11,79,69	41,17	12,20,86

(1)	திட்ட மில்லாச் செலவினம். (2)	திட்டச் செலவினம். (3)	மொத்தம் (4)
	1991-92 வரவு-செலவு மதிப்பீடு.		
	(ரூபாய் இலட்சத்தில்)		
2203. தொழில் நுட்பக் கல்வி ..	40,64	4,47	45,11
2204. விளையாட்டும், இளைஞர் நலனும்	7,42	2,28	9,70
2205. கலை, பண்பாடு நூலகங்கள்	8,88	17	90,5
ஆவண காப்பகங்கள் ..	59	21	80
நுண்கலைக் கல்வி-கலை—			
கைத்தொழில் கல்லூரிகள் ..	55	1	56
இசைப் பயிற்சி மையங்கள் ..	18	10	28
பிற செலவுகள்	1,41	..	1,41
கூட்டுக—திருப்பி வசூலிப்பவை	6	..	6
கலை, பண்பாடு—மொத்தம்.	11,67	49	12,16
2225. தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் பிற பிற்படுத்தப்பட்டோர்கள் நலன் ..	..	4,00	4,00
2235. சமூக பாதுகாப்பும் நலனும்	11	..	11
3425. ஏனைய அறிவியல் பணிகள்	..	2,26	2,26
3454. மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் பள்ளி விவரங்கள்—மாவட்ட விவரச் சுவடிகள்	1	7	8
பெரு மொத்தம்—மானியக் கோரிக்கை 17 கல்வி '' ..	12,44,16	54,74	12,98,90

மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர பள்ளி, கல்லூரிக் கட்டடங்கள், கடன்கள் முதலியவற்றிற்காகப் பிற மானியக் கோரிக்கைகளின் கீழ் 1991-92-ல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் வருமாறு :—

கணக்குத் தலைப்பு.	1991-92 வரவு-செலவு மதிப்பீடு. திட்டமல்லாத செலவினம்.	திட்டச் செலவினம்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
(அ) வருவாய்க் கணக்கில் செலவு :			
மானியக் கோரிக்கை 28—			
சமுதாய வளர்ச்சி—			
சமூகக் கல்வி ...	...	15	15
மானியக் கோரிக்கை 37—			
பொதுப்பணி— அரசுப் பள்ளி—கல்லூரிக் கட்டிடங்கள் சிறு பணிகள் ...	9	4	13
2071. தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் ..	78,00	..	78,00
2236. சத்துணவுத் திட்டம்	1,73,87	95	1,73,65
(அ) உணவுப் பொருட்கள் செலவு—			
(ஆ) வருவாய்க் கணக்கின் கீழ் வராத செலவு—			
4202. கல்வி, கலைகள், பண்பாடு ஆகியவற்றிற்கான மூலதனச் செலவு—அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றிற்கான கட்டிடங்கள்	24	6,77	7,01

(1)	(2)	(3)	(4)
கடன்கள்—			
4515. ஊரகத் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள்	..	5,00	5,00
6202. தேசிய கடன், படிப்பு உதவித் தொகைகள்	..	30	30
தொழில் நுட்பக் கல்வி. மாணவர்களுக்குக் கடன்	0.39	..	0.39
7615. தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களுக்குக் கடன்கள்	12	..	12
மொத்தம்	36.39	12,07	12,43.39

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்களையும் கணக்கில் கொண்டால் 1991-92ஆம் ஆண்டில் கல்விக்காக செலவிட இருக்கும் தொகை ரூபாய் 1,311 கோடிக்குச் சற்று கூடுதலாகும்.

19. இவ்விடத்தில் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியது பின்வருவதாகும்—அதாவது ஆதிதிராவிடர் மற்றும் பின்தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள், ஆதிதிராவிடர் பழங்குடி வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் முதலியவற்றிற்கானச் செலவு, சீர்திருத்தப் பள்ளிகள், தொழில் பயிற்சி நிறுவனங்கள், ஊனமுற்றோர்களுக்கான பள்ளிகள் போன்றவற்றிற்காக ஆகும் செலவு, மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகிய வகைக் கல்விகளுக்கு ஆகும் செலவு ஆகிய செலவினங்கள் கல்விச் செலவு பற்றிய மேற்கண்ட புள்ளி விவரங்கள் எவற்றிலும் இடம் பெறவில்லை.

1991-92ஆம் ஆண்டு கல்வித் திட்டப் பணி செலவு விவரம்.

20. எல்லாத் தலைப்புகளின் கீழும் (2202. கல்வி 4202. கல்விப் பணி குறித்த கட்டச் செலவு, 6202. கடன் முதலியன) கல்விக்காக 1991-92ஆம் ஆண்டில் திட்டப் பணிகளில் செலவு விவரம் வருமாறு ('' + '') குறிக்குப் பின்னர் உள்ள இலக்கங்கள் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவினைக் குறிக்கும்.

அட்டவணை—2

கணக்குத் தலைப்பு.	பொறுப் பேற்ற செலவினம்.	1991-92-ல் புதியதாக ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள்.	மொத்த
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
I. பொதுக் கல்வி—			
(1) தொடக்கக் கல்வி	23,28	58	23,8
	+ 5,67	..	+ 5,6
(2) பள்ளிக் கல்வி ..	2,59	1,40	3,9
	+ 2,04	..	+ 2,0
(3) வயதுவந்தோர் கல்வி	5,44	..	5,4
	+ 5,53	..	+ 5,3
(4) கல்லூரிக் கல்வி	5,40	1,04	6,4
	+ 30	..	+ 3
(5) மொழி வளர்ச்சி	11	..	1
	+ 4	..	+
மொத்தம்	36,82	3,02	39,8
	+ 13,58	..	+ 13,5
II. தொழில்நுட்பக் கல்வி	4,57	32	4,8
	+ 26	..	+ 2
III. விளையாட்டு, இளைஞர் நலன்	1,30	..	1,30
	+ 1,97	..	+ 1,97
IV. கலைப் பணிகள்—கல்வித்துறை	70	..	70
V. ஏனைய அறிவியல் ஆராய்ச்சி	82	..	82
பெருமொத்தம் ...	44,21	3,34	47,55
	+ 15,81	.	+ 15,81

II. பள்ளிக் கல்வி

(i) தொடக்கக் கல்வி.

1. எல்லோருக்கும் தொடக்கக் கல்வி :

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் வழிகாட்டும் கொள்கையின்படி மாநில அரசு 14 வயது வரையிலுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிக்க வழிவகை செய்ய வேண்டும். இந்திய நாடு சுதந்திரமடைந்ததிலிருந்து இந்தக் குறிக்கோளினை அடைய திட்டமிட்ட உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கல்வியின் முழுப் பலனை அடைய அடித்தளத்திலிருந்தே ஒரு தரமான கல்வித் திட்டத்தை உருவாக்குவதே மாநில அரசின் முயற்சியாகும். ஏற்றத்தாழ்வின்றி சமுதாயத்திலுள்ள அனைத்து பிரிவினருக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை நீக்குவதும், குறிப்பாக ஏழை மற்றும் நலிந்த பிரிவினருக்குத் தரமான கல்வியை அவரவர் வாழும் பகுதியிலேயே அரசு பள்ளிகள் மூலம் அளிப்பது அனைவருக்கும் தொடக்கக் கல்வி வலியுறுத்தும் கோட்பாடாகும். இந்தக் கோட்பாட்டை நோக்கி மாநிலத்திலுள்ள எல்லா கல்வி நிறுவனங்களும் வேகத்துடனும், உறுதியுடனும் செயல் பட வேண்டும் என்பதே அரசின் நோக்கமாகும். ‘‘அனைவருக்கும் தொடக்கக் கல்வி’’ என்ற கோட்பாட்டிற்கு இவ்வரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. தொடக்கக் கல்வியில் வலியுறுத்தப் படுவன:—

(அ) அனைத்து பள்ளி செல்லும் வயதுக் குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்தல், அவ்வாறு சேர்த்த குழந்தைகளை 14 வயது வரை தொடர்ந்து படிக்கச் செய்தல் மற்றும் (ஆ) கல்வியின் தரத்தில் நிறைவான முன்னேற்றத்தை அடைதல் ஆகும்.

2. மாணவர் சேர்க்கை :

1982 ஆம் ஆண்டு கல்வி வளர்ச்சியில் ஒரு திருப்புமுனை வாய்ந்ததாகும். ஏனெனில், இந்த ஆண்டில்தான் மாணவர்கள் பெருமளவில் பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர். இதற்குக் காரணம் இந்த ஆண்டில்தான் அப்போதைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பள்ளி மாணவர்களுக்கென வரலாறு படைத்த சத்துணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

1982-83 ஆம் ஆண்டிற்கு முன்னால், தொடக்கப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை 44 இலட்சத்திற்கும் குறைவாகவே இருந்தது. சத்துணவுத் திட்டம் தொடங்கப்பட்டதால் ஒவ்வொரு ஆண்டும் மாணவர் சேர்க்கை விதம் கணிசமான அளவில் உயர்ந்தது. இது இன்று 55.50 இலட்சம் என்ற நிலையை எய்தியுள்ளது. இது பள்ளியிலிருந்து மாணவர் நின்றுவிடும்

வீதத்தை வெகுவாகக் குறைத்து படிப்பறிவு பெற்றவர்கள் எண்ணிக்கையை உயர்த்தித் தரமான கல்வியை அளிக்க வழி வகுத்திருக்கிறது. இதன் மூலம் கிராமப் புறங்களில் வாழும் ஏழை மற்றும் வசதியற்ற மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது.

அட்டவணை—3

தொடக்கப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை பின்வருமாறு:—

வரிசை எண்ணும், ஆண்டும்.	மாணவர்கள் சேர்க்கை (இலட்சங்களில்).
(1)	(2)
1. 1981-82	44.72
2. 1982-83	46.73
3. 1983-84	48.06
4. 1984-85	48.92
5. 1985-86	50.42
6. 1986-87	51.77
7. 1987-88	52.72
8. 1988-89	53.62
9. 1989-90	54.46
10. 1990-91	55.50

பொதுவாக மாநிலத்தில் ஏற்பட்டுள்ள மக்கள் தொகை பெருக்கத்திற்கேற்ப 6—11 வயது பிரிவிலும் மற்றும் 11—14 வயது பிரிவிலும் அதற்கேற்றவாறு மாணவர் சேர்க்கை அதிகமாகி அரசுக்கு கூடுதலான சுமையை ஏற்படுத்தியுள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் தொடக்கத்தில் 6—14 வயது மாணவர் சேர்க்கை நிலை மற்றும் 1989-90, 1990-91—ம் ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மாணவர் சேர்க்கை படிப்படியாக உயர்ந்துள்ளதைக் காட்டுகின்றது.

அட்டவணை—4

வயது.	1984-85	1989-90	1990-91
(1)	(2)	(3)	(4)
	(இலட்சங்களில்.)		
6—11	70.44	76.78	77.64
11—14	23.19	30.33	31.59
மொத்தம்	93.63	107.11	109.23

மேற்கண்டவற்றிலிருந்து 7 ஆண்டுகள் இடைவெளியில் 6—14 வயது பிரிவில் சேர்க்கை 18 சதவீதம் உயர்ந்துள்ளது என்பதை காணலாம். 6—14 வயது பிரிவில் மாணவர் சேர்க்கையினை 100 சதவீதமாக உயர்த்துவது, மாணவர் பள்ளியிலிருந்து நின்று விடும் வீதத்தைக் குறைத்து, படிப்பறிவு நிலையினை உயர்த்து வதும் இவ்வரசின் சீரிய முயற்சியாக இருக்கும்.

அரசு ஏற்கனவே, படித்து வேலையில்லாத இளைஞர்களை ஈடு படுத்தி ஓர் ஆண்டில் தலா 10 குழந்தைகளுக்கு தொடக்கக் கல்வி யளித்திட 'மாநில பள்ளிசாராக் கல்வித் திட்டம்' என்னும் சிறப்பு திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் படிப்பை தொடராத சுமார் 15 இலட்சம் மாணவர்கள் கல்வி யறிவு பெறுவர்.

இத்திட்டத்தில் படித்து வேலையில்லாதிருக்கும் சுமார் 1.5 இலட்சம் இளைஞர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள். ஒவ்வொரு வருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 1000 வழங்கப்படும் (அதாவது ஒரு குழந்தைக்கு ரூ. 100 வீதம்) இது தவிர புத்தகங்கள் மற்றும் பயிற்றுவிப்பு சாதனங்கள் இலவசமாக வழங்கப்படும்.

3. மாநிலத்தில் தொடக்கக் கல்வியின் வளர்ச்சி :

அனைவருக்கும் தொடக்கக் கல்வியளித்தல் என்ற கோட் பாட்டினை எய்த, மாநிலத்தின் தொடக்கக் கல்வியில் ஒரு சீரான வளர்ச்சி இன்றியமையாததாகும். இந்த நிலை ஏற்படு வதற்கு பள்ளிகள் மாணவர்களின் இருப்பிடங்களுக்கு அருகாமை யிலிருக்க வேண்டும்.

அட்டவணை 5.

பல்வேறு மக்கள் தொகை உள்ள வாழுமிடங்கள் மற்றும் அங்குள்ள தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை விவரங்களை கீழ்க்கண்ட பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது.

(1986 ஆம் ஆண்டின் அகில இந்திய கல்விப் புள்ளியில் கணப்கெடுப்பு அறிக்கையின்படி).

மக்கட்தொகை.	குடியிருப்புகள்.	பள்ளிகள் குடியிருப்புகளுக் கேற்ப. 1 கி.மீ. கீழ். எண்ணிக்கை	சத வீதம்.
(1)	(2)	(3)	(4)
5,000 மற்றும் அதற்கு மேலும்.	340	340	100.02
2,000—4,999	2,906	2,792	96.1
1,000—1,999	7,624	7,105	93.2
500—999	12,361	10,204	82.5
400—499	396	2,653	66.0
300—399	4,873	2,610	53.6
200—299	5,641	1,589	28.2
100—199	6,268	648	10.3
100-க்கு கீழ்	3,412	164	4.8
மொத்தம்	47,392	28,105	59.3

மக்கட் தொகை.	பள்ளிகள் குடியிருப்புகளுக் கேற்ப. 1 கி.மீ. வரை. எண்ணிக்கை.	பள்ளிகள் குடியிருப்புகளுக் கேற்ப. 1 கி.மீ. வரை. சதவீதம்.	ஜனத்தொகைக் கேற்ப சதவீதம். 1 கி.மீ. கீழ்.	ஜனத்தொகைக் கேற்ப சதவீதம். 1 கி.மீ. வரை.
(1)	(5)	(6)	(7)	(8)
5,000 மற்றும் அதற்கு மேலும்.	340	100.0	100.0	100.0
2,000—4,999	2,895	99.6	96.2	99.7
1,000—1,999	7,542	98.9	93.1	98.9
500—999	11,960	96.8	84.0	97.0
400—499	3,680	92.8	67.6	92.9
300—399	4,193	86.0	55.9	85.9
200—299	4,429	78.5	28.9	77.8
100—199	4.417	70.5	10.7	70.5
100-க்கு கீழ்	2,178	63.7	6.8	64.3
மொத்தம்	41,629	87.8	83.9	96.0

5,000 மற்றும் அதற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 340 குடியிருப்புகளிலும் தொடக்கப்பள்ளிகள் அமைந்துள்ளன. 2,000 முதல் 4,999 வரை மக்கள் தொகை கொண்ட 2,906 குடியிருப்புகளில் 2,792-ல் குடியிருப்புக்குள்ளாகவே தொடக்கப் பள்ளிகள் உள்ளன. 1 கிலோ மீட்டர் தொலைவில் 2,895 குடியிருப்புகளில் தொடக்கப்பள்ளிகள் உள்ளன. இது குடியிருப்புகளில் 99.6 சதவிகிதமும், இக்குடியிருப்புகளிலுள்ள மக்கள் தொகையில் 99.7 சதவீதமும் ஆகும். 1,000 முதல் 1,999 மக்கள் தொகைக்கு 98.9 சதவீதமும் தொடக்கப்பள்ளிகள் உள்ளன. மக்கள் தொகை குறைய இச்சதவீதமும் குறைந்து கொண்டே வருகிறது. 500 மற்றும் அதற்கு மேல் மக்கள் தொகை கொண்டதும் 1.5 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளானது மான பள்ளிகளில்லாத 439 குடியிருப்புகளில் புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றில் 70 தொடக்கப் பள்ளிகள் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்கள் பரவலாக வாழும் பகுதிகளில் தொடங்கப்பட்டுள்ளன. 300 மற்றும் அதற்கு மேல் மக்கள் வாழும் குடியிருப்புகளில் 1 கிலோ மீட்டர் தூரத்திற்குள் புதிய தொடக்கப்பள்ளிகள் ஆரம்பிப்பது அரசின் கொள்கையாகும். 1981–82 முதல் தொடக்கப்பள்ளிகளின் எண்ணிக்கையில் தொடர்ந்து முன்னேற்றம் காணப்படுகிறது. அதாவது 27,767 பள்ளிகளிலிருந்து 1990–91-ல் 29,997 பள்ளிகளாக உயர்ந்துள்ளது. தொடக்கப்பள்ளிகளின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக உயர்ந்து வருவதை கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

தமிழ்நாட்டில் தொடக்கப் பள்ளிகளின் வளர்ச்சி (1981–1991)

அட்டவணை-6.

வரிசை எண்.	ஆண்டு.	தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1	1981–82	27,767
2	1982–83	28,290
3	1983–84	28,548
4	1984–85	28,847
5	1985–86	29,118
6	1986–87	29,268
7	1987–88	29,319
8	1988–89	29,359
9	1989–90	29,491
10	1990–91	29,997

மாணவர்கள் பள்ளிகளிலிருந்து அதிக அளவில் இடையில் நின்று போவதற்கு பின் வருபவை பெரிதும் காரணமாக அமைகின்றன.

1. மாணவர்களின் குடும்பங்களின் ஏழ்மையும் பொருளாதார சூழ்நிலையும்.

2. குடும்ப வருமானத்தை பெருக்க வேலைக்குச் சென்று பொருளீட்ட வேண்டிய நிலை.

3. வீட்டிலுள்ள சிறு குழந்தைகளை பராமரிக்க வேண்டிய சூழ்நிலை.

1990—91 ஆம் ஆண்டில் தொடக்கப்பள்ளியிலிருந்து இடையில் நின்றுபோன மாணவர் சதவீதம் பின்வருமாறு :—

வகுப்புகள்.	ஆண்கள்.	பெண்கள்.	மொத்தம்
1 முதல் 5 வரை	18.27	22.68	20.32
1 முதல் 8 வரை	40.17	49.43	44.48

பள்ளிப் படிப்பை இடையில் விட்டுச் செல்லும் மாணவிகளின் எண்ணிக்கை மாணவர்கள் எண்ணிக்கையை விட அதிகமாக உள்ளது. ஆதலால் 6—14 வயதுள்ள 1 முதல் 8 வகுப்புவரை பயிலும் மாணவிகளின் சேர்க்கையில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என அரசு கருதுகிறது.

மாநிலத்தில் பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்திவிடும் மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்க ஏற்கனவே செயல் படுத்தப்பட்டு வரும் கீழ்வரும் பல்வேறு நலத் திட்டங்கள் தீவிரமாக்கப்படும்.

1. புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்.

2. இலவசப் பாட புத்தகங்கள் வழங்கும் திட்டம்.

3. இலவச சீருடை வழங்கும் திட்டம்.

4. இலவசக் காலணிகள் வழங்கும் திட்டம்.

5. பள்ளி செல்லும் மாணவர்களுக்கு இலவச பஸ்பாஸ் வழங்கும் திட்டம்.

6. 1-ம் வகுப்பில் படிக்கும் குழந்தைகளுக்கு இலவசப் பலகைகள் வழங்கும் திட்டம்.

கல்வியின் தரத்தை உயர்த்தவும் பள்ளியில் இடையில் நின்றுவிடும் மாணவர்களின் வீதத்தை குறைக்கவும் அரசு தீவிர முயற்சிகள் மேற்கொள்ளும்.

(ii) உயர்நிலைப் பள்ளிக் கல்வி.

1. இடைநிலைக் கல்வி, கல்வித் தொடரில் மையப் பகுதியாக அமைகிறது. இது ஒரு முனையில் தொடக்கக் கல்வியையும், மறு முனையில் உயர் கல்வியையும் இணைக்கிறது. பயிற்சி பெற்ற மனித ஆற்றல், அறிவார்ந்த ஒழுக்க மேம்பாடு, உடற்கல்வி ஆகியவற்றை அளிக்கும் வகையிலும், மாணவர்களுடைய ஒருங்கிணைந்த கூட்டு நடவடிக்கைகளை உற்சாகப்படுத்தும் வகையிலும், அறிவு செயல் இரண்டையும் இணைக்கும் வகையில் பள்ளிக் கல்வித் திட்ட சேர்க்கை வற்புறுத்தப்பட வேண்டும். இடைநிலைக் கல்வி, மாணவனின் மிகவுயர்ந்த உள்ளாற்றல், அவனுடைய செயல் திறன்கள் மனப்பான்மைகள், விருப்பங்கள், பண்பு நலன்கள் ஆகியவற்றை வளர்க்கிறது. மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தில் இடைநிலைக் கல்வி மிக முக்கியமானதாகும். ஏனெனில் இங்கிருந்துதான் பலதிறப்பட்ட தனித்துறைகளுக்கு மாணவர் பிரிந்து செல்ல வேண்டும்.

2. தமிழ்நாடு பள்ளிக் கல்விக்கு எப்பொழுதும் மிக முக்கியத்துவம் வழங்கிவருகிறது. இந்தியாவின் கல்வியறிவு பெற்றோர் சதவிதத்துடன் ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் எழுத்தறிவு பெற்ற ஆண் மற்றும் பெண் சதவீதம் அதிகமாகும். இதுதவிர எழுத்தறிவு நிலையில், தமிழ்நாடு (கேரளாவுக்கு அடுத்தபடியாக) இரண்டாம் இடத்தினை வகிக்கிறது.

அட்டவணை-7.

	தமிழ்நாடு.		அகில இந்தியா.	
	மக்கள் தொகை.	எழுத்தறிவு சதவிதம்.	மக்கள் தொகை.	எழுத்தறிவு. சதவிதம்.
(1)	(2)	(3)	(4)	(5)
	(கோடியில்.)		(கோடியில்.)	
ஆண்	2.82	74.9	43.76	63.9
பெண்	2.74	52.3	40.63	39.4
மொத்தம்	5.56	63.7	84.39	52.1

3. இடைநிலைப் பள்ளிக் கல்வியில் தற்போது ஒரு பள்ளிக்கு 780 மாணவர்கள் வீதம் மொத்தம் 5,144 பள்ளிகளில் 40 லட்சம் மாணவர்கள் பயில்கின்றனர். ஆசிரியர் மாணவர் விகிதம் 1 : 35 ஆகும்,

அட்டவணை-8.

(1)	பள்ளிகள் எண்ணிக்கை. (2)	மாணவர்கள் எண்ணிக்கை. (3) (லட்சத்தில்)	ஆசிரியர்கள் எண்ணிக்கை. (4)
உயர்நிலைப் பள்ளிகள்.	3,136	15.75	42,565
மேல்நிலைப் பள்ளிகள்	2,008	24.37	72,816

தமிழ்நாட்டில் 14—16 வயது தொகுதியினரான 19.48 லட்சம் குழந்தைகளில் 11.57 லட்சம் பேர் 9, 10 ஆம் வகுப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது 59.4 சதவீதமாகும். இந்த வயது தொகுதியில் ஆண்டுக்கு 50,000 மாணவர்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட வேண்டும் என்ற இலக்கு, நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த வயது தொகுதியினர் கூடுதலாக பள்ளிகளில் சேர்க்கப்படுவதற்காகப் பள்ளி வசதிகள் விரிவுபடுத்தப்பட வேண்டும் எனும் நோக்குடன், ஆண்டுதோறும் கூடுதல் எண்ணிக்கையில் உயர்நிலை பள்ளிகள் திறக்கப்படுகின்றன. மலைப்பகுதி, பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழும் பகுதி, ஆதி திராவிடர்/பழங்குடியினர் அதிகமாய் வாழும் பகுதி ஆகியவைகளுக்கு சிறப்பு முன்னுரிமை அளித்து 1991–92 ஆம் ஆண்டில் 27 உயர்நிலைப் பள்ளிகள் கூடுதலாகத் திறக்கப்பட அரசு அனுமதித்துள்ளது.

<u>தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள்</u> :

4. இடைநிலைப் பள்ளிகளில் அளிக்கப்படும் கல்வியின் தரத்தினை மேம்படுத்தும் நோக்கத்துடன், பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1986-ம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கையின் எதிர்பார்ப்புகளின்படி உயர்மட்டக் குழுவின் வழிகாட்டலுடன் பல்வேறு துணைக் குழுக்களால் 1—12 வகுப்புகளுக்குரிய திருத்தப்பட்ட கலைத் திட்டமும், பாடத் திட்டமும் தயாரிக்கப்பட்டன. திருத்தப்பட்ட கலைத் திட்டத்தையும், பாடத் திட்டத்தையும் 1988–89 ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்டவாறு படிப்படியாக நடைமுறைப்படுத்திட அரசு அனுமதி வழங்கியது:

ஆண்டு.	வகுப்புகள்.
1988—89	1, 3, 6
1989—90	2, 4, 7, 9, 11
1990—91	5, 8, 10 மற்றும் 12

(ii) 1—8 வகுப்பு ஆசிரியர்கள் அனைவருக்கும் புதிய பாடத் திட்டத்தின்படி பணியிடைப் பயிற்சி வழங்கப்பட்டது. 9—12 வகுப்பு ஆசிரியர்கள் அனைவருக்கும் படிப்படியாக பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

(iii) கல்வித் தொழில்நுட்ப செயல்பாடு விரிவாக்கத் திட்டத்தின்கீழ் சென்னையில் உள்ள பள்ளிக் கல்வி இயக்கக வளாகத்தில், ரூ. 72.20 இலட்சம் செலவில் கல்வித் தொலைக் காட்சிப்பட நிலையம் ஒன்றைக் கட்டுவதற்கு நடுவண் அரசு அனுமதி அளித்துள்ளது. இதன் கட்டுமானப் பணி முடியும் தருவாயில் உள்ளது.

இப்பட நிலையத்தையும் கல்வித் தொழில்நுட்பப் பிரிவையும் இணைத்து "மாநிலக் கல்வித் தொழில்நுட்ப நிறுவனம்" என மறு பெயரிடப்பட்டுள்ளது. தொலைக்காட்சி மற்றும் வானொலிக்காக கல்வி சம்பந்தமான ஒலி, ஒளிப் பதிவு நாடாக்களை தயாரிக்கும் பணி கல்வித் தொழில்நுட்பப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையத்தினர் இவ்வகையான கல்வி ஒலி, ஒளிப் பதிவு நாடாக்களைத் தயாரிக்கும் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர். பட நிலையத்தின் கட்டுமானப் பணி முடிவடைந்தவுடன், ஒலி/ஒளி நாடாக்களின் தயாரிப்புப் பணி முழுவதும் கல்வித் துறையினால் மேற்கொள்ளப்படும். வானொலி தொலைக்காட்சி நிலையங்கள் மாநில கல்வித் தொழில்நுட்ப நிறுவனம் தயாரித்துத் தரும் நிகழ்ச்சிகளை ஒலி, ஒளி பரப்பும் டணியை மட்டும் மேற்கொள்ளும்.

(iv) பள்ளியிறுதித் தேர்வில் தேர்ச்சிபெறாத மாணவர் களுக்கு சிறப்புப் பயிற்சித் திட்டம்: பள்ளியிறுதித் தேர்வில் வெற்றி பெறாத மாணவர்களுக்கு உயர்நிலைப் பள்ளிகளில் சிறப்புப் பயிற்சி தரும் திட்டம் ஒன்று செயல்படுகிறது. ஒவ்வொரு மையத்திலும் இரண்டு முழுநேர பி.டி. ஆசிரியர்கள் மூன்று மாதங்கள் பயிற்றுவிக்கின்றனர். அந்தந்த இடத்திலுள்ள தேவை மற்றும் வசதிக்கேற்ப பள்ளி நேரத்திற்கு அப்பாற்பட்ட நேரத்திலோ அல்லது பகல் வேளையிலோ இம்மையங்கள் இயங்குகின்றன. 18 வயதுள்ள மாணவர்கள் இத் திட்டத்தின்கீழ் பயனடையலாம். 1990-91-ல் 813 மாணவர்கள் இதன் மூலம் பயனடைந்துள்ளனர்.

(v) பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு, ஓரியண்டல் பள்ளியிறுதித் தேர்வு, மெட்ரிகுலேஷன் தேர்வு, மேல்நிலைப் பள்ளித் தேர்வு ஆகியவைகளில் மாநில அளவில் சிறப்பாக தேர்வுபெறும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. அதேபோல பள்ளியிறுதித் தேர்வில் ஆதி திராவிடர்/பழங்குடியினர்வகுப்பைச் சார்ந்த மாணவர்களில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பெறும் மாணவர்களுக்கும் பரிசுகள் அளிக்கப்படுகின்றன. மேல்நிலைப் பள்ளித் தேர்வில், தொழிற்கல்வி பாடங்களில் அதிக மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கும் பரிசுகள் அளிக்கப்படுகின்றன.

(vi) பொறியியல், மருத்துவம் மற்றும் வேளாண்மை போன்ற தொழில் சார்ந்த வகுப்புகளில் சேர்வதற்குரிய நுழைவுத் தேர்வுக்கான சிறப்புப் பயிற்சித் திட்டம், தமிழ்நாடு பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் மூலம் குறிப்பிட்ட சில பள்ளிகளில் இலவசமாக நடத்தப்படுகின்றன. 1991–92 ஆம் ஆண்டில் 5,000 மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கு ஏற்ப இந்த மையங்களை 100 ஆக உயர்த்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது. சிறப்பு பயிற்சியளிக்கப்பட்ட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

அட்டவணை—9.

ஆண்டு.	மையங்கள் எண்ணிக்கை.	பயன்பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை.
1986	20	400
1987	20	864
1988	20	910
1989	56	2418
1990	56	3387

(vii) 6—18 வயது தொகுதியினரின் கூடுதல் மாணவர் சேர்க்கை காரணமாகக் கூடுதலாகத் தேவைப்படும் ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு அரசு கீழ்க்கண்டவாறு 1485 பணி இடங்களை அனுமதித்துள்ளது;

1.	இடைநிலை ஆசிரியர்கள்—தற்போது உள்ள பள்ளிகளுக்கு (முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ரூ. 800 மாத தொகுப்பு ஊதியத்தில்)	1200
2.	உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்	20
3.	பட்டதாரி ஆசிரியர்கள் (இளநிலை)/ தமிழாசிரியர்கள் (இளநிலை) (ரூ. 1,400 தொகுப்பு ஊதியத்தில்)	145
4.	முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் (இளநிலை) (ரூ. 1,750 மாத தொகுப்பு ஊதியத்தில்)	120

5. பெண்கள் கல்வி :

(i) மேல்நிலைப் பள்ளி நிலை வரை —12 ஆம் வகுப்பு வரை எல்லோருக்கும் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. எல்லோருக்கும் பள்ளி வசதி அளிப்பதற்காகப் பள்ளிகள் கிராமப் புறங்களில், குறிப்பாக ஆதி திராவிடர்/மலைசாதியினர் அதிக மாக வாழும் பகுதிகளில் திறக்கப்படுகின்றன. பள்ளிகளில் பெண் களைச் சேர்ப்பதில் ஊக்கமளிப்பதற்கும், பெண்கள் தொடர்ந்து கல்வி கற்பதற்கு வசதியாகவும் அரசு பல சலுகைகளை வழங்கி வருகிறது.

(1) இலவசச் சீருடை வழங்கல்

(2) இலவசப் பாடநூல் வழங்கல்

(3) சத்துணவு வழங்கல்

(4) காலணிகள் வழங்குதல்

(5) முதல் வகுப்பு குழந்தைகளுக்குக் கல்பலகைகள் வழங்குதல்.

(ii) பள்ளியில் சேருவதற்குரிய தகுதிபெற்ற பள்ளி வயது அடைந்த பெண்களின் மக்கள் தொகை விவரமும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ள பெண் குழந்தைகளின் சதவீதமும் பின் வருமாறு :—

அட்டவணை-10.

வயது தொகுதி.	பள்ளியில்சேரும் வயதுடைய பெண் குழந்தைகள்.	பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ள பெண் குழந்தைகள்.	சேர்க்கை சதவீதம்.
	(லட்சத்தில்)		
6—11	37.92	35.81	94.46
11—14	17.23	13.44	78.02
14—16	9.63	5.00	46.69
16—18	9.08	1.99	21.88

(iii) இளைய குழந்தைகளைக் கவனித்துக்கொள்ளவேண்டிய பொறுப்பினின்றும் பெண் குழந்தைகள் விடுபடவும், அவர்கள் படிப்பில் கவனம் செலுத்தவும் குழந்தைகள் காப்பகம் ஒவ்வொன்றிலும் தற்போது மழலையர் பிரிவு (நர்சரி பிரிவு)

ஒன்றுசெயல்படுகிறது. மேலும், பெண்கள், தம் பள்ளிப் படிப்பை இடையில்விட்டுச் செல்லும் போக்கைத் தடுத்திட'' வளர்ப்புப் பெற்றோர் திட்டம்'' எனும் திட்டம் தமிழகத்தில் தொடங்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, கொடையுள்ளம் வாய்ந்தோர் 1—8 வகுப்புகளில் பயிலும் பெண் குழந்தைகளைத் தத்து எடுத்துக்கொண்டு, அவர்களின் பெற்றோருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 250 வழங்கி வருகின்றனர். இத்திட்டத்தின் நோக்கம் 6—14 வயது பெண்கள் பள்ளிப் படிப்பை இடையில் விட்டுச்செல்லும் போக்கைத் தடுப்பதாகும்.

(iv) பள்ளிகளில் முதல் 12 வகுப்புகளில் மொத்த மாணவர் சேர்க்கையான 125.59 லட்சத்தில் 55.74 லட்சத்தினர் பெண் குழந்தைகள். இது 44.38 சதவீதம் ஆகும். இதேபோல எல்லாப் பள்ளிகளிலும் பணியாற்றும் மொத்த ஆசிரியர்களில் 3,00,857 பேரில் 1,27,841 பேர் பெண் ஆசிரியைகள் ஆவார்கள். இது 42.49 சதவீதம் ஆகும். எல்லாப் பள்ளிகளிலும் 1 முதல் 5 வகுப்பு வரை பெண் ஆசிரியைகள் மட்டுமே நியமனம் செய்யப் படுகின்றனர். இவை தவிர, அரசுப் பணியில் காலியாகவுள்ள பணியிடங்களில் 30 சதவீத இடங்கள் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இந்த அனைத்து முயற்சிகளின் மொத்த விளைவாக கல்விப் பணியில் பெண்களின் ஈடுபாடு அதிகமாகும். அவை, சமுதாயத்தில் பெண்களின் மதிப்பை நிலைநாட்டுவது மட்டுமின்றி அவர்களின் உரிமையையும் காக்கும்.

6. அறிவியல் கல்வி :

(i) அறிவியல் கல்வி, நாட்டின் முன்னேற்றம், நலம், வளர்ச்சி ஆகியவற்றின் திறவுகோலாகும். இதன் காரணமாக 1986ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கையில் உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகளில் போதிக்கப்படும் அறிவியல் கல்வியின் தர மேம்பாடு சிறப்பாய் வலியுறுத்தப்படுகிறது. ஆகையால், மாண வர்கள் தகவல் அறியும் உணர்வை வளர்த்துக்கொள்ளவும், சோதித்து அறியவும், பகுத்தாயும் திறமையைப் பெருக்கிடவும், சிக்கலைத் தீர்க்கும் ஆற்றல் பெற உதவும் வகையில் அறிவியல் பாடங்களைக் கற்பித்தலின் தரம் குறிப்பிடத்தக்க அளவு உயர்த்தப்பட வேண்டும். மேற்கண்டவைகளின் அடிப்படையில் எல்லா உயர்நிலைப் பள்ளிகளும் அறிவியல் சோதனைக் கூடங்களைப் பெறுவதற்காக தமிழ்நாட்டில் ஒரு திட்டம் நடை முறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி இதுவரை 2,361 உயர்நிலைப் பள்ளிகளில் 1,163 பள்ளிகள் அறிவியல் கூடங் களைப் பெற்றுள்ளன. ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ. 1 இலட்சம் செலவில் அறிவியல் கூடக் கட்டடமும் ரூ. 25,000 செலவில் அறி வியல் கருவிகளும் அளிக்கப்படுகின்றன. இவற்றோடு கூடுதலாக தமிழ்நாட்டிலுள்ள அனைத்து 56 கல்வி மாவட்டங்களுக்கும் இயங்கும் அறிவியல் ஊர்திகள் அளிக்கப்பட்டுள்ளன. இவற்றின் உதவியால் அறிவியல் கூட வசதிகள் கிடைக்கப்பெறாத தொலை வான கிராமப்புறங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் பாட செய்முறை விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன.

(ii) பெங்களூரில் உள்ள விசுவேசுவரய்யா தொழில் மற்றும் தொழில்நுட்ப அருங்காட்சியகம் தென் மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு, பாண்டிச்சேரி ஆகியவற்றிற்கு தென் இந்திய அறிவியல் கண்காட்சி ஒன்றை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. இதில் தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளிலிருந்து மாணவர்கள் கலந்து கொள்கின்றனர். 1990-91 தென் இந்திய அறிவியல் கண்காட்சி கோட்டயத்தில் நடைபெற்றது. இதில் தமிழகத்திலிருந்து 55 பள்ளிகளைச் சேர்ந்த 55 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

(iii) அறிவியல் கருத்தரங்குகள் ஒவ்வோர் ஆண்டும் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் நடத்தப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டில் 1990 ஆகஸ்டில் மாநில அளவிலான அறிவியல் கருத்தரங்கு சென்னையில் நடத்தப்பட்டது.

(iv) மாநில அளவிலான அறிவியல் கண்காட்சி ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்படுகிறது. 1991-ல் மாநில அளவிலான அறிவியல் கண்காட்சி வேலூரில் நடைபெற்றது. இதில் மாநிலம் முழுவதிலும் உள்ள 150 பள்ளிகள் பங்கு பெற்றன.

7. மருத்துவ உதவித் திட்டம் :

வருவாய் மாவட்டங்கள் 16-ல் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும், மாணவ/மாணவியர்களை மருத்துவப் பரிசோதனை செய்து, அவர்களுக்குத் தொடர் சிகிச்சை அளித்திட தன்னிச்சையான ''மருத்துவ உதவித் திட்டம்'' ஒன்று செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் செயல்படும் பள்ளிகளில் 6–12 வகுப்புகளில் பயிலும் மாணவர்களிடமிருந்து ஆண்டுக்கு ரூபாய் ஒன்று மட்டும் ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் மருத்துவ ஆய்வுக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

8. ஆதி திராவிடர்/பழங்குடியினர், சிறுபான்மையினர், இதர நலிந்த பிரிவினருக்குக் கல்வி வசதி :

(i) ஆதி திராவிடர்/பழங்குடியினர், சிறுபான்மை இனத்தவர் ஆகியோருடைய முன்னேற்றம் குறித்துப்பல்வேறு வகைப்பட்ட நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. கல்விக்காகச் செலவிடப்படும் மொத்தச் செலவினத்திலிருந்து 19 சதவீதம் பயன்கள் ஆதி திராவிடர்/பழங்குடியினருக்குக் கிடைப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு தமிழ்நாடு, கடந்தபல பத்தாண்டுகளாக அரசு வேலை வாய்ப்பில் மட்டுமல்லாமல், எல்லாவகைக் கல்வி நிறுவனங்களிலும் எல்லா நிலைகளிலும், எல்லாப் பயிற்சிகளிலும் சேர்க்கைக்கும் கூட இட ஒதுக்கீட்டினை நடைமுறைப்படுத்தி வருகிறது.

மேற்பார்வைப் படிப்பு :

(ii) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு அவர்களுக்கு ஆங்கிலம், கணிதம், அறிவியல் ஆகிய பாடங்களில் பள்ளி நேரத்திற்குப் பின்னர், நாள்தோறும் ஆசிரியர்களின் நேரடிப் பொறுப்பில் சிறப்புப் பயிற்சியளிக்கும் மேற்பார்வைப் படிப்புத் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. 625 தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளில் 8, 9, 10 ஆம் வகுப்புகளில் பயிலும் இச்சமுதாயத்தைச் சார்ந்த 66,822 மாணவர்கள் பயன்பெறுகின்றனர். 375 மேல்நிலைப் பள்ளி களில் ஏறத்தாழ 22,844 மாணவர்களுக்கும் இத்திட்டம் பயனளித்து வருகிறது

(iii) 6—10 வகுப்பு ஆதி திராவிடர்/பழங்குடியினர் மாணவ, மாணவியரிடையே பள்ளிப் படிப்பை இடையில் விடும் போக்கைத் தடுப்பதற்காக தலைமையாசிரியர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இதன்படி, ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் 6—8 வகுப்பில் அதிக எண்ணிக்கையில் பெண் குழந்தைகளைச் சேர்த்தும், தொடர்ந்து பள்ளியில் இருத்தியும் வைத்துள்ள தலைமையாசிரியர்களுக்கும், அதேபோல் 9, 10ஆம் வகுப்புகளிலும் பராமரிக்கும் தலைமையாசிரியர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. மொத்தம் ரூ. 1.12 இலட்சம் செலவில் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் மூன்று பரிசுகள் முதல் பரிசு ரூ. 500, இரண்டாம் பரிசு ரூ. 300, மூன்றாம் பரிசு ரூ. 200 வீதம் அளிக்கப்படுகின்றன.

9. புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணத் திட்டம் :

(i) புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். கூறினார் :—

'' உடல் நலத்திற்கேற்ற சத்துணவினை, எளிய குழந்தைகளுக்கு வழங்கவேண்டும் எனும் எண்ணம் என்னுடைய குழந்தைப் பருவத்தில் நேர்ந்த வறுமையின் அனுபவத்தால் எழுந்ததாகும். என்னுடைய வீட்டை பசி அடிக்கடி வறுத்தியபோது, அடுத்த வீட்டில் இருந்த பெண்மணி எங்களுக்குக் கிண்ணத்தில் கஞ்சி கொடுத்து வறுமையின் கொடிய சாவிலிருந்து எங்களைக் காப்பாற்றினார். அந்த அம்மையாரைப் போன்ற கருணையுள்ளம் கொண்ட கிராமப்புறப் பெண்கள், என்மீது பெருமளவில் நம்பிக்கை வைத்து, தமிழ்நாட்டின் முதலமைச்சராய்த் தேர்ந்தெடுத்துள்ளனர். அதனால், உதவியற்ற அந்தத் தாய்மார்களின் துன்பங்களைப் போக்கும் வகையில், ஏழைக் குழந்தைகளுக்குக் குறைந்தது ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவையேனும் அளிக்க வேண்டும் என்பது என்னுடைய முக்கிய கடமை என்று கருதுகிறேன். '' 1—7—1982 முதல், இப்படித் தோன்றிய மிகப் பெரிய சத்துணவுத் திட்டம், தற்போது தமிழ்நாடு முழுவதிலும் 66,000 மையங்கள் மூலம் ஏறத்தாழ 85 இலட்சம் குழந்தைகளுக்கும் மேலாகப் பயனளித்து வருகிறது.

(ii) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டம் தமிழகத்தில் உள்ள குழந்தைகளின் முழு வளர்ச்சியையும் கருதி, முக்கிய பணியாக மேற்கொள்ளப்பட்டது. அத்திட்டத்தின் நோக்கங்கள், (1) குழந்தைகளுக்குத் தேவைப்படும் சத்துகளில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேல் அளிப்பது, அதன் மூலம் உடல் நலத்தை வளர்ப்பது, உடல் வளர்ச்சிக்கு உதவுவது, கற்றல் திறன்களை வளர்ப்பது, (2) பள்ளி செல்ல குழந்தைகளிடம் ஆர்வத்தை வளர்ப்பது; பள்ளியில் தங்க வைப்பது; பள்ளி வருகையை அதிகரிப்பது, (3) குழந்தைகளிடையே நல்ல சமூக பழக்க வழக்கங்களை வளர்ப்பது; பல்வேறு சாதி இன வேறுபாட்டு உணர்வுகளை அகற்றுவது, (4) நல்ல உணவுப் பழக்கங்களையும், தன் சுத்தத்தைப் பேண வைப்பது, சுற்றுப்புறச் சுத்தத்தின் அவசியத்தை உணரச் செய்வது, (5) சத்துணவு பற்றிய கல்வியை குழந்தைகளுக்கும் பெற்றோருக்கும், சமுதாயத்திற்கும் அளிப்பது, (6) பள்ளிப்படிப்பை இடையில் விடும் போக்கைத் தடுப்பது, (7) வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள பெண்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவது, (8) கிராமப்புறங்களில் வாழும் நலிந்த பிரிவினரிடையே படிப்படியாக சமூக, பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவது.

(iii) உலக வங்கி போன்ற அமைப்புகள் தமிழ்நாட்டில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள இத்திட்டம் கிராமப்புற மக்களைப் பெரிதும் கவர்ந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளன. சத்துணவுக் குறைவும், எழுத்தறிவின்மையும், கேடுவிளைவிக்கிற சூழலை உருவாக்குகின்றன. அவை களையப்பட வேண்டும்; சத்துணவுத் திட்டம் அத்திசையில், ஓர் இணக்கமான செய்து முடிக்கிற வேட்கையுடன் செல்கிறது. காந்திகிராம் கிராமிய நிறுவனத்தின் கலையியற் குழு 1982ஆம் ஆண்டில் ஓர் ஆய்வினை நடத்தி, பள்ளிப்படிப்பை, இடையில் விடும் போக்கின் சதவீதம், வீழ்ந்துள்ளது என்றும், குழந்தைகளின் சராசரி அறிவு நிலை உயர்ந்துள்ளது என்றும் முடிவு கண்டது. ஸ்ரீ அவினாசிலிங்கம் மனை அறிவியல் கல்லூரியின் ஆசிரியர்களும் முதுநிலை பட்டதாரி மாணவர்களும் இச்சத்துணவுத் திட்டத்தின் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபட்டார்கள். முழுமையான எழுத்தறிவை இம் மாநிலம் அடையும் வகையில் மிகுந்த ஊக்கமுடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

10. ஆசிரியர் கல்வி.

(i) மாநில கல்வி நிறுவனம் 1965 ஆம் ஆண்டில் தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி வழங்குவதற்காகத் தொடங்கப்பட்டது. 1976 மே திங்களில் மாநிலக் கல்வி நிறுவனம் மாநிலக் கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனமாக வலுப்படுத்தப்பட்டது. மறுபடியும் ஆசிரியர் கல்வியின் முக்கியத்துவத்தை உணரும் வகையில் "ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககம்" 1990 அக்டோபர் முதல் நாள் முதல் தனியே உருவாக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. பல்வேறு நிலைகளில் ஆசிரியர்

பயிற்சி வழங்குவதை இயல்பாய்க் கொண்டுள்ள எல்லா நிறுவனங்களும், அதாவது, தொடக்க இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் (85 நிறுவனங்கள்) மாவட்டக் கல்வி பயிற்சி நிறுவனம் (14 மையங்கள்) (I, II) கட்டங்களில் 7 மையங்கள் வீதம் அமைக்கப்பட்டவை. ஆங்கில மொழி கற்பித்தல் மையங்கள் (8 மையங்கள்) கல்வியில் முன்னணி படிப்புகள் நிறுவனம் (2 நிறுவனங்கள்) ஆசிரியர் கல்வியியல் கல்லூரிகள் (5 கல்லூரிகள்) ஆகிய அனைத்தும் இந்தப் புதிய இயக்ககத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்த இயக்ககம், மாநில அரசு, மத்திய அரசு, யுனிசெப், தேசீய கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், ஆகியவற்றின் திட்டங்களைச் செயல்படுத்துகிறது. மேலும், யுனிபா (UNIFA) ஊனமுற்ற குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வி (I. D. C.) ஊனமுற்ற குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வித் திட்டம் (PIED) மாவட்ட ஆங்கில மொழி நிறுவனம் (கோயம்புத்தூர்) வட்டார தீவிர கல்வித் திட்டம் (AIEP) மின்கணிப்புப் பொறியைப் பற்றிய கல்வி (வகுப்பு திட்டம்) மக்கள் தொகைக் கல்வித் திட்டம் முதலியனவற்றையும் செயல்படுத்துகிறது.

(ii) தொடக்க, உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு கற்பித்தல் முறை, இலக்கணம் பயன்படுத்தும் முறை, ஆங்கிலப் பேச்சு முறை ஆகியவற்றில் தீவிர பயிற்சி வழங்கும் நோக்கத்துடன், எட்டு ஆங்கில மொழி பயிற்சி மையங்கள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. 1990-91ஆம் ஆண்டில் இந்த மையங்கள் ரூ. 17.21 இலட்சம் செலவில் 43 பயிற்சிகளை நடத்தி 1,834 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளது. பெங்களூரில் உள்ள மண்டல ஆங்கில பயிற்சி நிறுவனத்திற்கு அரசு 1990-91 ஆம் ஆண்டிற்கு ரூ. 4.00 இலட்சம் தமிழக நிதியாக வழங்கியுள்ளது. உயர் நிலை, மேல்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த 34 ஆங்கில ஆசிரியர்கள் 1990-91ஆம் ஆண்டில் மேற்படி நிறுவனம் அளிக்கும் 4 மாத கால பயிற்சி பெறுவதற்காக அனுப்பப்பட்டனர். மேற்படி பெங்களூர் நிறுவனத்தில் பெண்கள் விடுதி கட்டுவதற்காக ரூ. 2.00 இலட்சம் அனுமதித்துள்ளது.

11. ஆசிரியர்கள், ஆசிரியரல்லாதார் ஊழியர் நலன் :

(i) தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரையறுக்கப்பட்டது) சட்டம், 1973, தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரையறுக்கப்பட்டது) விதிகள் 1974 ஆகியன. உதவி பெறும் தனியார் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் பிற ஊழியர்களின் பணி கட்டுப்பாடுகளுக்கு (Service Condition) சட்டப் பாதுகாப்பு அளிக்கின்றன.

(ii) தமிழ்நாடு சிறப்பு வருங்கால வைப்பு நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், அனைத்து உதவிபெறும் கல்வி நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் 1984 ஏப்ரல் முதல் நாள் முதல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. உதவி பெறும் பள்ளிகளில்

பணியாற்றும் ஆசிரியர்களும், பென்ஷன் பெறும் ஓய்வு பெற்ற ஆசிரியர்களும், 1—4—1990 முதல் மாதந்தோறும் ரூ. 15 மருத்துவப் படியாகப்பெற அனுமதிக்கப்படுகிறார்கள். இதனால் ஏறத்தாழ 1,25,000 ஆசிரியர்கள் பயனடைவர்.

(iii) 1986 ஏப்ரல் முதல் நாள் முதல் தனியார் பள்ளி ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி கணக்குகளும், அஞ்சலக சேமிப்பு வங்கி கணக்குகள் மூலம் பராமரிக்கப்படுவதற்குப் பதிலாக அரசு ஊழியர்களுக்குப் பராமரிக்கப்படுவது போலவே பராமரிக்கப்படும் என அரசு ஆணை வழங்கியது. அதன்படி, உதவி பெறும் பள்ளிகளின் ஆசிரியர், ஆசிரியரல்லாத ஊழியர்களின் வருங்கால வைப்புநிதி கணக்குகள் மாவட்டக் கல்வி அலுவலர்கள்/மகளிர் பள்ளி ஆய்வாளர்கள் ஆகியோரால் தற்போது பராமரிக்கப்படுகின்றன. 1988 ஏப்ரல் முதல் நாள் முதல் அவர்களின் வருங்கால வைப்பு நிதிக்குரிய சந்தா தொகை அரசு கணக்கில் செலுத்தப்படுகிறது. இதனால், உதவி பெறும் பள்ளிகளின் ஊழியர்கள் தங்களுடைய ஆசிரியர் வருங்கால வைப்பு நிதி இருப்புக்களுக்குரிய வட்டியை, அரசு அவ்வப்போது அறிவிக்கும் விகிதத்தில், அரசு ஊழியர்கள் பெறுவதற்கு இணையாகப் பெற தற்போது தகுதி பெறுகிறார்கள்.

ஆசிரியர்களுக்கான விருதுகள் :

(iv) பள்ளி ஆரியர்களுக்கான மாநில விருதுகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 1990-91ஆம் ஆண்டில் பின்வரும் விவரப்படி 228 ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன :—

தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள்	112
உயர்நிலை மற்றும் மேல் நிலைப்பள்ளி ஆசிரியர்கள்	112
ஆங்கிலோ இந்தியப்பள்ளி ஆசிரியர்கள் ..	2
மெட்ரிகுலேசன் பள்ளி ஆசிரியர்கள்	2
மொத்தம் ..	228

இவ்விருது ஒவ்வொன்றும் ரூ. 1,000 பண முடிப்பு, வெள்ளிப் பதக்கம், தகுதிச் சான்றிதழ் ஆகியவற்றைக் கொண்டது. 30 தொடக்கப்பள்ளி ஆசிரியர்களும், 14 இடைநிலைப் பள்ளி ஆசிரியர்களும் இந்திய அரசிடமிருந்து 1990ஆம் ஆண்டுக்கான தேசிய விருதுகளையும் பெற்றுள்ளனர்.

(iii) மேல்நிலைப்பள்ளி கல்வி

தமிழ்நாட்டில் கல்விச் சீரமைப்புத் திட்டத்தில் 1978ஆம் ஆண்டு ஒரு புதிய மாற்றத்தை கண்ணுற்றது எனலாம். 10 +2, +3 வகுப்புகள் மூலமாக புதிய திட்டத்தைப் பள்ளிகளிலும், கல்லூரிகளின் வாயிலாக ஏற்றுக் கொண்டதன் மூலம் இக் கல்விச் சீரமைப்பு உட்புகுத்தப்பட்டது. 1927 பள்ளிகளில்

இரண்டாண்டு (+2) படிப்பு, கல்வித் திட்டத்தின் மேல் தளமாக அமைந்து, மேல்நிலைக் கல்வித் திட்டம் விரிவாக்கப்பட்டதின் மூலம், கிராமப்புறங்களும் பயனடைந்தன. எனவே புகுமுக வகுப்பு கல்லூரிகள் மூலம் மட்டுமே புகுத்தப்பட்ட முறை மாற்றியமைக்கப்பட்டது. நகர்புறங்களில் 188 கல்லூரிகளில் மட்டுமே புகுமுக வகுப்பில் இருந்து வந்த நிலை மாற்றி சீரமைக்கப் பட்டது.

2. பள்ளிகளில் பிளஸ் 2 (+2) முறையினை உறுதியாக புகுத்த வேண்டும் என்ற அரசின் கொள்கையினால், மேல்நிலைக் கல்வி அனைத்து நிலையிலுள்ள சமூகப் பிரிவினருக்கும், அதிலும் குறிப்பாக ஒடுக்கப்பட்ட, கிராமப்புறத்திலுள்ள மக்கட்கு மேல் நிலைக் கல்வியை அளிக்கப்படாமல் இருந்த ஏற்றத்தாழ்வான நிலையை மாற்றி அமைத்தது எனலாம். எனவே, அரசு திட்டமிட்ட முறையில் சில அரசு உயர்நிலைப் பள்ளிகளில், மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்தும் முயற்சியில் சில குறிப்பிட்ட நன்மைகளை வழங்கியது. இந்நிலை தனியார் பள்ளிகளும், நிதி உதவி பெறாத மேல்நிலைப் பள்ளிகளை கிராமப்பகுதிகளில் துவக்க ஊக்குவித்தது எனலாம். அனைத்திற்கும் மேலாக, உயர்நிலைப் பள்ளி நிலையில் கல்வியை தொழிற்மயமாக்குவது தான் 'எளிது' என்ற நிலையும் கவனத்தில் கொள்ளப்பட்டது. மேல்நிலைக் கல்வி நிலையில், 2 குறிப்பிட்ட கல்வி முறைகள் புகுத்தப்பட்டன. முதலாவதாக மாணவர்களை, உயர்கல்விப் படிப்புக்கு பல்கலைகழகங்களிலும், தொழிற் பயிற்சி கல்லூரி களிலும் தகுதியுள்ளவர்களாக ஆக்குவதும், தொழிற் கல்விப் படிப்பு முடித்தவுடன், பல்வேறு தொழில்களை ஏற்க வழி வகுக்கும் மற்றொரு ஆயத்த நிலையினை இத்திட்டம் ஏற் படுத்தியது எனலாம்.

3. தமிழ்நாட்டில் 1990–91-ல் செயல்பட்டுவந்த 1927 மேல்நிலைப் பள்ளிகளைப் பற்றிய நிர்வாக அடிப்படையான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

அட்டவணை-11

பள்ளிகளின் வகை :

(1) அரசுப் பள்ளிகள் (மற்ற துறைகளால் நிர்வகிக்கப்படும் பள்ளிகளையும் சேர்த்து) ..	848
(2) உதவிபெறும் பள்ளிகள்	674
(3) உதவிபெறாத பள்ளிகள்	70
(4) நகராட்சி மற்றும் மாநகராட்சி பள்ளிகள்	68
(5) மெட்ரிகுலேசன் பள்ளிகள்	239
(6) ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள்	28
மொத்தம் ..	1927

இந்த 1,927 பள்ளிகளில், 51 பள்ளிகள் 1990-91-ல் புதிதாக துவங்கப்பட்டன. நடுவண் உயர்நிலைப் பள்ளிக் கல்வி வாரியம் (CBSE) உடன் இணைந்த பள்ளிகள் மேற்கண்ட பள்ளி விபரங்களில் சேர்க்கப்படவில்லை. 1990-91-ல் மேல் நிலை வகுப்புகளில் பயின்றுவந்த மாணவ மாணவியர் எண்ணிக்கை பின்வருமாறு:—

அட்டவணை—12

	மாணவர்.	மாணவியர்.	மொத்தம்.
பொதுப் பாடங்கள் ..	228,992	163,691	392,683
தொழிற் பாடங்கள் ..	50,927	34,942	85,869
	279,919	198,633	478,552

4. பயிற்று மொழி: பள்ளி அளவில் தமிழை பயிற்று மொழியாக பயிலுவதை ஊக்குவிப்பதை முக்கிய குறிக்கோளாக அரசு கொண்டுள்ளது. மேல்நிலை வகுப்புகளில் தமிழ் மொழி அல்லது தாய் மொழி வாயிலாகப் பயிலும் சிறுபான்மை மொழி மாணவர் களிடமிருந்து பள்ளிக் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. தங்கள் தாய்மொழி வழியாகப் பத்தாம் வகுப்பு வரை பயின்ற சிறுபான்மை மொழி மாணவர்கள் மேல்நிலை வகுப்புகளில் ஆங்கில மொழி வழியாக பயிலுவதை தேர்ந்தெடுக்கலாம். சிறுபான்மை மொழி மாணவர்கள் அதே மொழியில் 11—12 வகுப்புகளில் பாடங்களைப் பயில வாய்ப்பில்லாமல் ஆங்கில மொழி வழியாக பயிலுவார்களேயானால் அத்தகைய மாணவர்களிடமிருந்து ஆங்கிலமொழி வழியாக பயின்றாலும் பள்ளிக் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. மேல்நிலை வகுப்புகளில் ஆங்கில மொழி வாயிலாகப் பயிலும் ஏனைய மாணவர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 20 அல்லது ஓராண்டிற்கு ரூ. 200 கட்டணம் வசூலிக்கப்படுகிறது. தொழிற்பாடங்களை பொறுத்தமட்டில் அந்தந்த தொழிற்பாடத்தில் பகுதி III-ல் பொதுக்கல்வியில் தொடர்புடைய பாடத்துக்கு எது பயிற்று மொழியோ அதுவே அந்த தொழிற்பாடத்திற்கும் பயிற்று மொழியாக கருதப் படுகின்றது.

5. மேல் நிலைப் பள்ளிகளில் தொழிற் பாடங்கள் : மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற் பாடங்களைப் பொறுத்த வரையில் தமிழ் நாட்டில் சாதனை அனைத்திந்திய மட்டத்தில் பாராட்டினைப் பெற்றுள்ளது. 1990-91 ல் மொத்தம் 1,375 மேல் நிலைப் பள்ளிகளில் தொழிற் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. ஒன்றுக்கு மேற்பட்ட தொழிற் பாடங்கள் இப்பள்ளிகளில் கற் பிக்கப்பட்டன. நடுவண் அரசு தேசிய கல்விக் கொள்கையில் மேல் நிலை வகுப்பு மாணவர்களில் 10 விழுக்காடு தொழிற் பாடங்களைப் பயில வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்தி ருந்தது. தமிழ்நாடு இந்த இலக்கை மிஞ்சி விட்டது. 1990-91ல் மேல் நிலை வகுப்புகளில் பயின்று வந்த 4.79 இலட்சம் மாணவர் மாணவியர்களில் 0.86 இலட்சம் மாணவ, மாணவியர்கள் தொழிற் பாடங்கள் பயின்று வந்தனர். மேல் நிலை வகுப்பு களில் பயின்ற மாணவ, மாணவியர்களில் இது 18 விழுக்காடாக இருந்தது.

அட்டவணை-13.

வரிசை எண் தொழிற் பாட வகை.	மாணவர்.	மாணவியர்	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
1. வேளாண்மை ..	6,696	402	7,098
2. மனையியல்	132	5,165	5,297
3. வாணிகத் துறை ..	23,769	22,219	45,988
4. பொறியியலும் தொழில் நுட்பவியலும் ..	19,818	1,519	21,337
5. உடல் நலம் ..	350	5,565	5,915
6. இதர பாடங்கள் ..	162	72	234
மொத்தம் ..	50,927	34,942	85,869

தொழிற் பாடங்களை 398 முழு நேர தொழிற் பாட ஆசிரியர் களோடு 5,716 பகுதி நேர தொழிற் பாட ஆசிரியர்களும் மாத ஊதியம் ரூ. 400, / ரூ. 900-ல் கற்றுத் தருகின்றனர்.

பகுதி நேர தொழிற்பாட ஆசிரியர்களிடமிருந்து அவர்களின் பணியினை வரன்முறை செய்து போதிய ஊதியம் அளிப்பதற்கு அடிக்கடி கோரிக்கைகள் பெறப்பட்டு வந்தன. 1990-91-ல் 800 இரு பகுதி நேர தொழிற் பாட ஆசிரியர்களின் பணியினை வரன்முறை செய்தும் அந்த ஆசிரியர்களுக்கு ரூ. 1,400-2,620 சம்பள விகிதம் நிர்ணயித்தும் அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. ஏனைய பகுதி நேர தொழிற் பாட ஆசிரியர்களின் பணியினை வரன்முறை செய்வது குறித்தும் அரசு கவனிக்கும். மேல் நிலைப் பள்ளிகள் அனைத்திலும் தொழிற் பாடங்களுக்கான தளவாடங்கள் ரூ. 40 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் அந்தந்தப் பள்ளி வசூல் கட்டண நிதியிலிருந்தும் தனியார் நிர்வாகங்களின் பணத்திலிருந்தும் தொழிற்பாட தளவாடங்களுக்காகச் செலவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேல்நிலைப் பள்ளி தொழிற்பாட மாணவர்களின் வேலை வாய்ப்புகளை அதிகரித்தல், அவர்கள் உயர் கல்வியும் தொடர் கல்வியும் பெற வழி செய்தல் போன்ற நோக்கங்களுடன் மேல் நிலைக் கல்வித் தொழிற்பாட வகுப்புகளின் பாடங்கள் பாடத் திட்டம் ஆகியவற்றை மாற்றி அமைப்பதற்காக அரசு அமைத்த குழந்தைசாமி குழுவின் பரிந்துரைகளைப் படிப்படியாக அரசு செயற்படுத்தி வருகிறது.

மேல் நிலைப் பள்ளிகளில் தொழிற் பாடங்களைப் பயின்று தேறி வெளிவரும் மாணவர்களுக்கு 6 மாத சிறப்பு கலந்துரையாடல் பயிற்சி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட 20 தொழில்களில் ஏதாவது ஒன்றில் மொத்தம் 1,300 பேருக்கு ''தொழில் பழகு பயிற்சிக் குழு'' வின் மூலமாகப் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ. 380 உதவித் தொகை தரப்படும்.

மின் கணிப்புப் பொறியைப் பற்றிய கல்விக்கு இந்த அரசு மிக்க முக்கியத்துவம் அளிக்கிறது. இந்தக் கல்வி பள்ளிகளில் நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இது நாள் வரை 137 உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் இந்த மாநிலத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மேல் நிலைப் பள்ளித் தொழிற் கல்வி பயில்வோர் வேலை வாய்ப்பை மேலும் அதிகரிக்கும் பொருட்டு, வேலை நியமனங்களுக்கும், உயர் படிப்புகளுக்கும் கீழ்க்கண்ட தொழிற் கல்விப் பாடங்கள் அரசினால் ஏற்பளிக்கப்பட்டுள்ளன.

(1) ''அலுவலகக் கல்விப் பணி'' (Office Secretaryship) பாடத்தின் கீழ் வழங்கப்படும் தட்டச்சு (மேல் நிலை) மற்றும் சுருக்கெழுத்து (கீழ் நிலை).

(2) தொழிற் கல்வி பயிலும் மாணவர்களும் மேல் நிலைக் கல்வி, பொதுப் பிரிவு மற்றும் தொழிற் பிரிவுகளில் பயின்ற பாடங்களுக்கேற்பவும், பல்கலைக் கழக விதி முறைகளுக்கு உட்படும் பொறியியற் கல்லூரிகள், மருத்துவம் மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகள், வேளாண்மைக் கல்லூரிகள், கால் நடை மருத்துவக் கல்லூரிகள் ஆகியவற்றில் சேரத் தகுதியுடையவ ராவர்.

(3) அவர்கள் பல் தொழில் பயிலகங்களில் நேரடியாக இரண்டாமாண்டில் சேரத் தகுதியுடையவராவர். இதற்காக 10 விழுக்காடு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

(4) தொழிற் கல்வியில் செவிலியர் பணி (Nursing Course) பாடம் படித்தவர்கள் நேரடியாக செவிலியர் பணி இளங்கலை வகுப்பில் இரண்டாமாண்டில் சேரத் தகுதியுடையவ ராவர்.

அரசு மேல் நிலைப் பள்ளிகள் ஒன்வொன்றிலும் ஒரு வகுப்பறையும் ஒரு ஆய்வுக் கூடமும் கட்ட அரசு ஏற்பளித் துள்ளது. படிப்படியாக நிறைவேற்றப்படும் இத்திட்டத் திற்கு இதுவரை ஆன செலவு ரூ. 15.22 கோடியாகும். இது வரை தொடங்கியுள்ள அரசு மேல் நிலைப் பள்ளிகள் அனைத் திற்கும் தேவையான ஆய்வுக் கூட தளவாடங்கள் ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ. 1 இலட்சம் செலவில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் வழங்கப்படுகின்றன. (சிட்கோ).

1991-92 ஆம் ஆண்டில், ஏற்கெனவே உயர்த்தப்பட்ட 39 அரசினர் மேல் நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக் கூட தளவாடங் கள் வழங்குவதற்காக ரூ. 35 இலட்சம் செலவு செய்ய அனுமதி அளிக்கப்பட உள்ளது.

தனியார் மேல் நிலைப்பள்ளிக் கட்டடங்கள் கட்டவும் தளவாடங்கள் வாங்கவும் ஆகும் செலவில் 40 விழுக்காட்டை பள்ளிக்கு ரூ. 1 இலட்சம் (கட்டிடத்திற்கு ரூ. 75,000 மற்றும் ஆய்வுக் கூட தளவாடங்களுக்கு ரூ. 25,000) என்ற வரம் புக்குட்பட்டு மானியமாகத் தரும் திட்டம் ஒன்றுக்கும் அரசு ஏற்பளித்துள்ளது. இதுவரை இவ்வாறு இணை மானியமாக ஏற்பளிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை சுமார் ரூ. 3 கோடியாகும்.

மேல் நிலைப் பள்ளி அளவில் தொழிற் பாடங்கள் நிலை யையும் தொழிற் பாடங்களுக்கான ஆசிரியர்கள் நியமன முறைகள் பற்றியும் மறு பரிசீலனை செய்வதற்காக அரசு குழு ஒன்றை அமைத்துள்ளது. கல்வியின் தரத்தை மேம் படுத்தும் நோக்கத்துடன் இக்குழுவின் பரிந்துரைகளுக்கு உரிய கவனம் கொடுக்கப்படும்.

6. நாட்டு நலப் பணித் திட்டம் மைய அரசு மற்றும் மாநில அரசு உதவியினை 7 : 5 என்ற விகிதத்தில் பெற்று செயல் படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் படி தற்போது அன்றாட நடவடிக்கைகளுக்காக மாணவர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு பொதுத் திட்டத்தில் ரூ. 80-ம் சிறப்புப் பயிற்சித் திட்டத்தில் ரூ. 150 ஆக கணக்கிட்டு வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 1990–91-ல் நாட்டு நலப் பணித் திட்டத்தில் பங்கு கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை மேல் நிலைப் பள்ளிகளில் 50,000. ஒரு பள்ளிக்கு 50 மாணவர்கள் வீதம் 1,000 பள்ளிகளிலிருந்து பங்கேற்றனர். இத்திட்டம் 1991–92ல் மாணவர்களை கிராமப் புறங்களில் சமூகப்பணிகளில் ஈடுபடுத்தி புத்துயிர் ஊட்டப் படுகிறது.

7. மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்.— புதிய கல்விக் கொள்கையின்படி, ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடனும் பள்ளி சாராக் கல்வி மற்றும் வயது வந்தோர் கல்வித் துறையில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் நம் கல்வித் திட்டத்தில் அடிமட்டத்தில் பணியாற்றும் இதர அலுவலர்களின் தரம் உயர்வதற்காகவும் மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் உருவாக்கப் பட்டன. இதன்படி இம்மாநிலத்தில் உள்ள 14 அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறு வனங்களாக தரம் உயர்த்தப்பட்டது. ரூ. 803 இலட்சம் செலவில் இந்நிறுவனங்கள் மேம்படுத்தப்படுகின்றன.

தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கும் கட்டு மானப் பிரிவு இந்நிறுவனங்களுக்கான கட்டுமானப் பணியினைச் செய்கிறது. சிறு தொழில்கள் முன்னேற்றக் கழகம் மற்றும் கதர் கிராமத் தொழில்கள் வாரியம் ஆகியவை இந்த மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்குத் தேவையான அறி வியல் கருவிகள் மற்றும் அலுவலகத் தளவாடங்களை அளிக் கின்றன. 14 வருவாய் மாவட்டங்களில் 14 நிறுவனங்கள் செயல் பட்டு வருகின்றன. மீதமுள்ள 7 வருவாய் மாவட்டங் களில் இந்நிறுவனங்களை புதியதாக தோற்றுவிக்க மைய அர சிடமிருந்து முதல் தவணையாக கட்டுமானப் பணிகளுக்காக ரூ. 224.00 இலட்சம் பெறப்பட்டுள்ளது. இந்த 7 மாவட்ட நிறுவனங்களிலும் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வரு கின்றன.

8. கல்வியியல் உயர் படிப்பு நிறுவனங்கள் மற்றும் ஆசிரியர் கல்வியியற் கல்லூரி.—

ஆசிரியர் கல்வியை மேம்படுத்தும் நோக்கத்துடன் அடைந்த மைய அரசு திட்டத்தின் கீழ் இந்திய அரசு கீழே குறிப்பிட்டுள்ள பயிற்சிக் கல்லூரிகளை தேர்ந்தெடுத்து அவைகளை அறிவுக் கூர்மை மற்றும் ஆராய்ச்சி மையங்களாக செயல் படுத்துவதற்கு ஏதுவாக தேவைப்படும் பணியாளர்களுக் கான நிதி உதவியையும் மற்ற வசதிகளையும் ஏற்படுத்தி தந் துள்ளது.

இத்தகைய மையங்கள் கல்வியியல் உயர் படிப்பு நிறுவனங்கள் என்றும் மீதமுள்ள தகுதி உயர்த்தப்பட்ட நிறுவனங்கள் ஆசிரியர் கல்வியியல் கல்லூரிகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

இவ்வாறு உயர்த்தப்பட்ட நிறுவனங்களின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

அட்டவணை 14.

	பெறப்பட்ட தொகை.	செலவழிக்கப்பட்ட தொகை
(1)	(2)	(3)
	(ரூபாய் லட்சத்தில்.)	
1. கல்வியியல் உயர் படிப்பு நிறுவனம், சைதை, சென்னை-600 015 2. ஆசிரியர் கல்வியியற் கல்லூரி, வேலூர். 3. ஆசிரியர் கல்வியியற் கல்லூரி, குமாரபாளையம். 4. ஆசிரியர் கல்வியியற் கல்லூரி, ஒரத்தநாடு.	180.00	176.41
5. கல்வியியல் உயர் படிப்பு நிறுவனம், திருவல்லிக்கேணி, சென்னை-5. 6. ஆசிரியர் கல்வியியற் கல்லூரி, கோவை. 7. ஆசிரியர் கல்வியியற் கல்லூரி, புதுக்கோட்டை.	137.00	77.75
	317.00	254.16

9. பள்ளிகளில் சுற்றுப்புற சூழல் கல்வி:

பள்ளிகளில் சுற்றுப் புறச் சூழல் கல்வித் திட்டத்தை ரூ. 34 இலட்சம் செலவில் செயல்படுத்த மைய அரசு பங்கேற்கும் திட்டம் ஒன்று தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள 5 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிற நடவடிக்கைகளோடு பள்ளிகளில் செடிகள் வளர்த்தலும் பயன் தரும் மரங்கள் மற்றும் பிற மரங்களை பள்ளி வளாகத்தில் வளர்த்து, சுற்றுப் புற சூழலை சிறப்படையச் செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த மைய அரசு திட்டம் இரண்டாம் கட்டமாக தர்மபுரி மாவட்டத்தில் ரூ. 33.86 இலட்சம் செலவில் செயல்படுத்தப் படும்.

10. ஊனமுற்ற குழந்தைகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட கல்வி:

ஊனமுற்ற குழந்தைகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட கல்வி என்ற மற்றும் ஒரு நடுவண் அரசு திட்டத்தினை, செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் இரு வட்டாரங்களிலும், திருச்சி, கோவை, மதுரை மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு வட்டாரத்திலும் செயல்படுத்த ரூ. 10.32 இலட்சம் அனுமதிக்கப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக மொத்தமாக ரூ. 54.37 இலட்சம் செலவழிக்கப்படும். இத் திட்டத்தின்கீழ் 5 வகைப்பட்ட ஊனமுற்ற குழந்தைகள் (பார்வையில் குறைந்தவர்கள், காது கேளாதோர், மன நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், கை கால் ஊனமுற்றவர்கள் மற்றும் வாசிக்க இயலாதவர்கள்) சாதாரண பள்ளிகளில் ஒருங்கிணைக்கப் படுகிறார்கள். பல்வேறு வட்டாரங்களில் உள்ள ஊனமுற்ற குழந்தைகள் பற்றிய மதிப்பீடு ஒன்று நடைபெற்று வருகின்றது. இந்த மதிப்பீட்டின் அறிக்கையின்படி சாதாரண பள்ளிகளில் பயிலும் ஊனமுற்ற குழந்தைகளுக்கு உபகரணங்கள் வழங்கப் படும்.

11. பள்ளிக் கட்டிடங்கள்:

(i) வளரும் நாடுகளில் கல்வி ஒரு மிக முக்கிய அங்கம் வகிக்கிறது. இந்தியாவில் கல்வித் துறையில் முன்னோடியாக தமிழகம் உள்ளது. எனினும், கட்டிடங்கள், விளையாட்டுத் திடல்கள் போன்ற தேவைப்படும் அடிப்படை வசதிகளை புதிய பள்ளிகளில் துவக்கப்படும் நாளிலிருந்தே, உருவாக்க இயலவில்லை. காலப் போக்கில், புதியப் பள்ளிக் கட்டிடங்களின் தேவை பல மடங்கு ஆரம்ப மற்றும் இடைநிலைப் பள்ளிகளில் அதிகரித்து உள்ளது. இன்றைய தேதியில், பெரும்பாலான பள்ளிகளில், வகுப்புகள் கூரைக் கட்டிடங்களிலும், திறந்த வெளிகளிலும் நடைபெறுகின்றன.

(ii) தற்போது உள்ள புள்ளி விவரங்களின்படி அனைத்து நிலையிலுள்ள பள்ளிகள் கூரை மற்றும் ''கச்சா'' கட்டிடங்களில் நடைபெற்று வருகின்றன. அதன் விபரம் கீழே தரப்பட்டுள்ளன.—

அட்டவணை 15.

பள்ளிகள்.	கச்சா கட்டிடங்கள்.	கூரைக் கட்டிடங்கள்
மேல்நிலைப் பள்ளிகள்	40	37
உயர்நிலைப் பள்ளிகள்	137	265
நடுநிலைப் பள்ளிகள்	368	1,022
துவக்கப் பள்ளிகள்	1,920	7,286

புதிய கட்டிடங்களைக் கட்டுவதும், அடிப்படை ஆதார வசதிகளைப் பெருக்குவதும் தவிர்க்க முடியாத சூழ்நிலையில், ஒரு விரிவான பள்ளிக் கல்வித் திட்டம் உலக வங்கியின் உதவியுடன் உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(iii) 100 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ''ஹட்கோ'' உதவியுடன் இவ்வாண்டில் ரூ. 2.25 கோடி செலவழிக்கப்பட உள்ளது. முதலில் தமிழக அரசு, துவக்க நிலையில் இந் திட்டத்துக்கு ரூ. 75 இலட்சம் வழங்க உள்ளது.

(iv) பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்.—பெற்றோர்-ஆசிரியர் கழகங்களின் மூலம், பெருந்தனகாரர்களிடமும், தொழிலதிபர்களிடமும் அணுகி, நிதியுதவி பெறும் திட்டத்தை அரசு ஆராய்ந்து வருகிறது. உள்ள பொதுமக்களிடம் தல முயற்சிகளைத் உள்ளூரில் திரட்டுவதுடன், பள்ளிகளில் வசதிகளைப் பெருக்கும் நோக்குடன் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படுகின்றன. 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 1.50 கோடி பெறுமான பொருட்களைப் பொது மக்களிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளது. 1991-92 ஆம் ஆண்டில், இத்தகைய சீரமைப்பு மாநாடுகளை மூன்று மாவட்டங்களில் நடத்தி ரூ. 3 கோடி பெறவும், அதன் மூலம் பள்ளிக் கட்டிட வசதிகளைப் பெறவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(v) தொழில் அதிபர்களுக்கும், பெருந்தனக்காரர்களுக்கும் ஒரு வேண்டுகோள் :—தற்போதைய விதிகளின்படி, புதியதாகத் துவக்கப்படும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ. 5 இலட்சம் அல்லது 5 ஏக்கர் நிலம் நன்கொடையாக அளிக்க முன்வரும் பெருந்தனக்காரர் பெயரில் அப்பள்ளி நிறுவப்படும். தற்போது நடைபெற்று

வரும் பள்ளிகள் என்றால் ரூ. 3 இலட்சம் தொகையோ அல்லது அதற்கு ஈடான கட்டிடங்கள் கட்டித் தந்தால், அன்னாரின் பெயரில் பள்ளிக் கட்டிடம் அமைக்கப்படும். மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தமட்டில் ரூ. 10 இலட்சம் (அல்லது) 7 ஏக்கர் நிலம் மான்யமாக வழங்கும் கொடையாளரின் பெயரில் அப்பள்ளி நிறுவப்படும். இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, கொடையாளிகளும், பெருந்தனம் படைத்தோரும் பெருமளவில் பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்குத் தாராளமாக உதவ வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(vi) பஞ்சாயத்து யூனியனில் வளர்ச்சித் திட்டங்களை மேற் கொள்வதற்காக அரசு தன்னிறைவுத் திட்டத்தை அறிமுகப் படுத்துகிறது. இத் திட்டத்தின்படி ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ரூ. 1 கோடி செலவிடப்படும். இத் தொகையில் இருந்து கணிசமானதொரு தொகையைப் பஞ்சாயத்து யூனியன் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு எனச் செலவழிக்கப்படும். 1991-92 ஆம் ஆண்டில் 1,000 பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

III. கல்லூரிக் கல்வி.

1. 1991-92 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தில் கல்லூரிக் கல்விக்கு ரூ. 113.60 கோடியும் பல்கலைக் கழகங்களுக்கு இணை மானியமாக ரூ. 18.83 கோடியும் ஒதுக்கப்பட்டு உள்ளது.

2. தமிழ்நாட்டில் குறிப்பாக உயர்க் கல்வி/பல்கலைக் கழகத் தேவைகளை நிறைவு செய்வதற்கென 1965 ஆம் ஆண்டிலிருந்து கல்லூரிக் கல்வித்துறை இயங்கி வருகிறது. பொதுக்கல்வி இயக்ககத்திலிருந்து (D.P.I.) கல்லூரிக் கல்வித்துறை பிரிக்கப் பட்ட போது 110 கல்லூரிகள் (92 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 18 ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள்) அதன் நிர்வாகத்தின் கீழ் இருந்தன. கடந்த 26 ஆண்டுகளில் கல்லூரி களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டு வந்திருக்கிறது. தற்பொழுது 21 கல்வியியல் கல்லூரிகள் உள்பட மொத்தம் 254 கல்லூரிகள் கல்லூரிக் கல்வித் துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன. புதிய கல்விக் கொள்கையை கருத்திற் கொண்டு ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கென தனி இயக்ககம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. 21 கல்வியியல் கல்லூரிகள் கல்வியியக்ககத்தின் கீழ் மாற்றப்பட்டுள் ளன. எனவே தற்பொழுது கல்லூரிக் கல்வி இயக்கக ஆளுமை யின் கீழ், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 233 (அரசு கல்லூரிகள் 54, நிதியுதவிக் கல்லூரிகள் 132), கீழ்திசை (ஓரியண் டல் கல்லூரிகள்) கல் ரரிகள் 15 (நிதியுதவி 9, நிதியுதவி பெறா தவை 6), உடற்கல்விக் கல்லூரிகள் 3 (உதவி பொறுபவை) சமுதாயப் பணி பள்ளிகள் 2 (உதவி பெறுபவை) மற்றும் சுயநிதி நிதி உதவி பெறாத தனியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கள் 27, ஆகியவை உள்ளன.

3. மனித வள மேம்பாட்டிற்கு கல்லூரிக் கல்வித்துறை சிறப்பான பணி ஆற்றி வருகிறது. கொள்கையளவில் மாநில உயர் கல்வி கட்டுப்பாட்டதிகாரங்கள் சென்னை, மதுரை காமராசர், பாரதியார், பாரதிதாசன் மற்றும் மனோன்மணீயம் சுந்தரனார் ஆகிய 5 பல்கலைக் கழகங்களிடம் உள்ளன. அதேபோல் அனைத்து கல்லூரிகளையும் நிர்வகிக்கும் ஆளுகை கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் கீழ் உள்ளது. திட்டமிட்ட வளர்ச்சியும் உயர் கல்வித் தரத்தை மேம்படுத்துவதும், ஒருங்கிணைப்பதும் முக்கிய குறிக்கோளாக உள்ளது.

4. கல்வித் தரத்தை உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கும் பல்கலைக் கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்களின் நலனுக்கு உரிய முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழக மானியக் குழுவின் திருத்திய ஊதிய விகிதத்தை 1—1—1986 முதல் முன் தேதியிட்டு 1988 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்திய தென்ன கத்தில் முதல் மாநிலம் தமிழகம் ஆகும். ஆசிரியர்களின் பணி மேம்பாடுகள் போன்ற ஈர்க்கக் கூடிய செறிவு திட்டங்களை

திருத்திய பல்கலைக் கழக ஊதிய விகிதங்கள் பெற்றுள்ளன. ஆசிரியர்களின் நலனுக்கென பல்கலைக் கழக மானியக் குழு தெரிவித்த அத்துணை பரிந்துரைகளையும் நிதிநிலை நெருக்கடி யான இந்நிலையிலும் தமிழக அரசு செயல்படுத்தியுள்ளது.

5. மகளிர் கல்வி :

(i) 186 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுள் மகளிர் கல்லூரி 52 ஆகும் (அரசு 14, நிதியுதவி 38) 1990-91 ஆம் ஆண்டு முதல் மகளிருக்கென தனியாகக் கல்லூரி கள் இல்லாத இடங்களில் அங்குள்ள ஆடவர் கல்லூரிகளில் 30 விழுக்காட்டிற்கும் குறையாமல் மகளிரைச் சேர்த்துக் கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் இவ்வறிவுரையை நடைமுறைப்படுத்த இயலாத தனியார் கல்லூரிகளின் சார்பில் இவ்விதிக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மகளிர்க் கல்லூரிகள் அருகில் இருப்பினும் நிதியுதவி பெறும் ஆடவர் கல்லூரிகள் விரும்பினால் தங்கள் கல்லூரிகளை இரு பாலரும் பயிலும் கல்லூரி களாக மாற்றிக் கொள்ள அனுமதி அளிக்க உத்தேசிக்கப்பட் டுள்ளது. கல்வியியல் கல்லூரிகள் இல்லாத இடங்களில் அங்குள்ள ஆடவர் கல்வியியல் கல்லூரிகளில் 50 மாணவிகள் சேர்ந்து பயில அனுமதி அளிக்கப்படுகிறது. சாதி, இனம், மதம் வித்தி யாசம் இல்லாமல் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்கு உட்பட்ட மாணவிகளுக்கு இலவச கல்வியளிக்க ''பெரியார் ஈ. வே. ரா. நாகம்மை மகளிர் இலவச கல்வித் திட்டம்'' என்ற ஒரு சிறப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. 1991-92 ஆம் ஆண்டு இறுதியில் இத்திட்டம் தொடங்கி 3 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில் தற்பொழுது முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டில் பயிலும் தகுதியுள்ள மாணவிகள் அனைவரும் இத்திட்டத்தினால் பயன் அடைந்துள்ளனர். இத் திட்டத்திற்கென 1991-92 ஆம் ஆண் டில் நிதி நிலை அறிக்கையில் ரூ. 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

(ii) நிதி நெருக்கடி இருந்த போதிலும் பின் தங்கிய மாவட்டமான தர்மபுரியில் மகளிருக்கென ஒரு கல்லூரி கூட (அரசு அல்லது தனியார்) இல்லாத நிலையினைக் கருதி, தர்மபுரி மாவட்டத்தில் ஓர் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி துவங்கப் படும். இக்கல்லூரி அடுத்த கல்வியாண்டு முதல் வேலை வாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பாடத் திட்டங்களான பி.ஏ., (கார்ப்போரேட் செக்ரடரிசிப்), பி.பி.ஏ., பி.காம்., மற் றும் பி.எஸ்சி., கணிப்பொறி அறிவியல் ஆகியவைகளைக் கொண்டு செயல்படத் துவங்கும். கல்லூரிக்கு தேவையான கட்டடப் பணிகள் இவ்வாண்டு துவங்கும். கல்விப் பணிகள் 1992-93 கல்வியாண்டு முதல் துவங்கும். பின் தங்கிய மாவட்ட மான தர்மபுரியில் உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்பில்லாத இடைவெளியை இது நிறைவு செய்வதுடன் உயர் தொழிற் கல்வியை மகளிர் பெறுவதற்கு இக்கல்லூரி ஊக்கமளிக்கும்.

6. தற்போதுள்ள நிதி நெருக்கடி நிலையில் தனியார் கல்லூரிகள் மேலும் பல பாட வகுப்புகளை துவங்க அரசு அனுமதிக்க இயலவில்லை. எனவே கணிப்பொறி, அறிவியல், அணுவியல், தகவல் தொடர்பு, வணிக மேலாண்மை போன்ற வேலை வாய்ப்பு அடிப்படையாகக் கொண்ட பாட வகுப்புகளை அரசின் நிதியுதவி இல்லாமல் தனியார் கல்லூரிகள் தொடங்கிக் கொள்ள அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. வேலை வாய்ப்புக்கு வழி வகுக்காத பாடத் திட்டங்களை இனிவரும் நாட்களில் தொடங்க வேண்டாம் என பல்கலைக் கழகங்களை அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

7. மைய அரசின் ரூ. 3.75 கோடி பெறுமான முழு நிதி உதவியுடன் 7 அரசினர் கல்வியியல் கல்லூரிகள், கல்வியியல் முன்னோடி நிறுவனமாகவும் (2) ஆசிரியர் கல்வியியல் கல்லூரியாகவும் (5) உயர்த்தப்பட்டுள்ளன. 54 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் அவசியமாகின்றன. இவை அனைத்தும் படிப்படியாக நடைமுறைப்படுத்த எடுத்துக் கொள்ளப்படும். இது வரை ஆறு கல்லூரிகளில் நூலக வசதிகளையும், ஐந்து கல்லூரிகளில் ஆய்வுக் கூட வசதிகளையும், நான்கு கல்லூரிகளில் விளையாட்டு மைதான வசதிகளையும் வலுப் பெற்றதாக செய்யப்பட்டுள்ளது. முன்னேறி வரும் தொழிற்நுட்பத்தை கருத்தில் கொண்டு தற்போது கல்லூரிகளில் செயல்பட்டு வரும் பழைய ''கேரோ காஸ்'' முறையை மாற்றி நவீன ''பெட்ரோ காஸ்'' மற்றும் எல்.பி.ஜி. முறையை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

8. வரும் 21வது நூற்றாண்டில் அனைத்து 54 அரசு கல்லூரிகளிலும் கணிப்பொறி அறிவியல் பாடத் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது அரசின் நோக்கமாகும். இதுவரை 8 கல்லூரிகளில் இப்பாடத்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1991-92 கல்வியாண்டில் வியாசர்பாடி டாக்டர் அம்பேத்கார் அரசு கலைக் கல்லூரியில் டாக்டர் அம்பேத்காரின் நூற்றாண்டு பிறந்த நாளை முன்னிட்டு (பி.எஸ்ஸி.) கணிப்பொறி இளமறிவியல் பட்ட வகுப்பை துவக்கவும் சென்னை மாநிலக் கல்லூரியில் 150-ம் ஆண்டு விழா கொண்டாட்டத்தை முன்னிட்டு அக்கல்லூரியில் கணிப்பொறி அறிவியல் பட்ட மேல் வகுப்பை ஏற்படுத்தவும் (MCA) அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தை முடுக்கி, அனைத்து அரசு கலைக் கல்லூரிகளிலும் எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் கணிப்பொறி அறிவியல் துவக்கப்படுதலே முதன்மையான வளர்ச்சிப்பணி ஆகும். வேலைவாய்ப்பை அடிப்படையாக கொண்ட பி.பி.ஏ., பி·பி.எம்., பி.காம். போன்ற பாடத் திட்டங்களை அரசு ஆரம்பித்து வருகிறது. 1990-91ஆம் கல்வியாண்டில் இரண்டு கல்லூரிகள் இதனால் பயன்பெற்றன. தற்போது கல்லூரிகளில் கிடைக்கும் வாய்ப்பு வசதிகளை உயர்ந்த பட்ச அளவில் பயன்படுத்திக் கொண்டு அதிக வேலைவாய்ப்பை அடிப்படையாக கொண்ட பாடத்திட்டங்களை அறிமுகப் படுத்த வேண்டும் என்பதே கல்வித்துறையின் முழுமுயற்சியாக இருக்கும். தற்போது கல்லூரிகளில் உள்ள பாடத் திட்டங்களையும் வேலைவாய்ப்புடன் இணைந்தவைகளாக மாற்ற அரசு

முயற்சி மேற்கொள்ளும். இதுதவிர கல்லூரிக் கல்வித்துறை, மாணவர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி அவர்கள் அனைத் திந்திய அளவில் நடைபெறும் அனைத்து போட்டி தேர்வுகளிலும் (இந்திய ஆட்சிப்பணிக்கான தேர்வு/இந்திய காவலர் பணிதேர்வு) கலந்துகொள்ளவும் அனைத்திந்திய அளவில் தமிழ்நாட்டு மாண வர்களின் செயல்பாட்டில் முன்னேற்றம் காணவும் சீரிய முயற்சி களை மேற்கொண்டு வருகிறது.

9. ஆசிரியர்கள் தேர்வு :

கல்லூரி மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு திருத்திய பல்கலைக்கழக மானியக் குழுவின் ஊதிய விகிதம் அறிமுகப்படுத்தப்பட்ட போது பல்கலைக்கழக மானியக் குழு/மத்திய அரசு பரிந்துரைகளின்படி ஆசிரியர்களாக தேர்வு செய்யப்பட குறைந்தபட்சம் 55 விழுக்காடு மதிப்பெண் கள் சம்பந்தப்பட்ட முதுகலைப் பட்ட பட்டிப்பில் பெற்றிருக்க வேண்டும் என்றும் அதனுடன் கல்லூரி ஆசிரியர் பணிக்கான மாநில அல்லது மத்திய அரசின் தகுதி தேர்வினை அவர்கள் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்பதனையும் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. கல்லூரி ஆசிரியர் பணிக்கான மாநில கல்வித் தேர்வினை நடத்த சென்னை பல்கலைக்கழகம் முன்னோடி நிறு வனமாக இருக்க கேட்டுக்கொள்ளப்பட்டு அது பல தகுதி தேர்வு களை பல்வேறு பாடத்திலும் நடத்தி அதன் முடிவுகளை அறி வித்துள்ளது. தமிழ்நாடு கல்விப் பணியின் கீழ் கல்லூரி ஆசிரியர் கள் பணியமர்த்த தெரிவுசெய்வது தமிழ்நாடு அரசு தேர்வாணை யத்தின் வரம்பிலிருந்து எடுக்கப்பட்டு ஆசிரியர் தேர்வு வாரியத் தின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. நல்ல கல்வி தரத்தினை உருவாக்க ஆசிரியர் பங்கு இன்றியமையாதது என்பதைக் கருதி நல்ல திறமையான ஆசிரியர்களை தேர்வுசெய்வது இந்த கால கட்டத்தில் மிகவும் அவசியம் என்பதை அரசு உணர்ந்துள்ளது. தேர்வுக்குப்பின் ஆசிரியர்கள் 5 பல்கலைக்கழகங்கள் மற்றும் பாண்டிச்சேரி மத்திய பல்கலைக்கழகம் ஆகியவை நடத்தும் கல்வி பணியாளர்களுக்கான புத்தொளி பயிற்சியினைப் பெறுதல் வேண்டும். பணியிடை ஆசிரியர்கள் அவரவர் பாடங்களில் உள்ள நவீன நிகழ்வுகளை அறிந்துகொள்ளும் விதமாக கல்விப் பணி யாளர் கல்லூரி புத்தறிவு பயிற்சி பெற அனுப்பப்படுகின்றனர். ஆசிரியர்களின் பணி மேம்பாடு பல்கலைக்கழக மானியக் குழு வகுத்துள்ள மதிப்பீட்டின் அடிப்படையில் அவர்கள் தினந்தோறும் நிறைவேற்றும் கடமைகளின் அடிப்படையிலும் அவர்கள் தங்கள் அறிவுத் திறனை பெருக்கிக்கொள்ள அவ்வப்போது பெறும் புத்தாக்கப் பயிற்சிகளையும் கருத்தில் கொண்டும் நிர்ணயிக்கப் படுகிறது.

10. அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 4.5 இலட்சங்களாகும். அவற்றுள் 2.1 இலட்சம் மாணவர்கள் உயர்க் கல்வியை நாடி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கல்வியினை தொடர்கிறார்கள். ஒவ்வொரு வருட மும் ஒரு இலட்சம் மாணவர்களுக்கு மேல் +2ல் தேர்ச்சி பெறு கிறார்கள். கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஆளுகையின் கீழ் உள்ள

கல்லூரிகளில் முதல்வருடப் பட்ட வகுப்பில் 66,000 மாணவர்கள் பயில முடிந்தது. தொழில் கல்லூரிகளில் உள்ள இடவசதிகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் மேல்நிலை படிப்பிற்கு பின் சுமார் 70,000 மாணவர்கள் பயில இயலும். இது நல்ல நிலை என்றாலும் படிப்பறிவு இல்லாத குடும்பங்களிலிருந்து கல்வி கற்க வரும் புதிய தலைமுறையினர்களுக்கு அவர்கள் மேற்கொண்டு படிக்க வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. ஆகவே இவ்வருடம் அனைத்து பல்கலைக் கழகங்களும் மாணவர்களுக்கான ஒப்பளிப்பு செய்யப்படும் எண்ணிக்கையை 54 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அதிகப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் ஏறக்குறைய 3,000 எண்ணிக்கைகளுக்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கள் மேற்படிப்பை தொடர பயன்படும்.

தன்னாட்சிக் கல்லூரிகள்.

11. மற்ற மாநிலங்களைவிட, தன்னாட்சிக் கல்லூரிகளை அதிகம் கொண்டு தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது. 1986ஆம் ஆண்டு வகுக்கப்பட்ட புதியக் கல்வித் திட்டத்தின்படி அச்சமயம் இயங்கிய கல்லூரிகளில் 10 விழுக்காடு கல்லூரிகள் தன்னாட்சிக் கல்லூரிகளாக உருவாக்கப்பட்டன. மேற்காணும் இலக்கினை தமிழ்நாடு மாநிலம் ஏற்கனவே தாண்டிவிட்டது. 186 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தன்னாட்சிக் கல்லூரிகள் 32, 21 கல்வியியல் கல்லூரிகளில் தன்னாட்சிக் கல்லூரிகள் 5, 3 உடற்பயிற்சிக் கல்லூரிகளில் தன்னாட்சி கல்லூரி 1. ஆக மொத்தம் 210 கல்லூரிகளில் தன்னாட்சி கல்லூரிகள் 38 ஆகும். மேற்காணும் புள்ளி விவரம் ஓரியண்டல் கல்லூரிகள் மற்றும் சுய நிதிக் கல்லூரிகளை தவிர்த்ததாகும். 1977-78லிருந்து தன்னாட்சி கல்லூரிகள் சோதனை முறையில் நடைபெற்று வருகிறது. இக்கல்லூரிகளின் செயல்பாடு குறித்து மதிப்பீடு செய்ய எண்ணிய தமிழக அரசு, இதற்காக மாநில அளவிலான குழு ஒன்றினை அமைத்துள்ளது. திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழக துணை வேந்தர் டாக்டர் திரு. எஸ். முத்துக்குமரன் அவர்களை தலைவராகவும், கல்லூரிக் கல்வி இயக்குநரை உறுப்பினர் செயலாளராகவும் கொண்ட இக்குழு தன்னாட்சிக் கல்லூரிகளின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்யவும், பல்வேறு பகுதிகளில் உள்ள பிரச்சனைகளை கண்டறிவதற்கும், கல்வி தரத்தினை மேம்படுத்துவதற்குமாக செயல்படும். மேற்காணும் குழுவின் பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. குழு தனது அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்க உள்ளது.

படிப்பு உதவித் தொகை மற்றும் பயிற்சிகால உதவித் தொகை.

12. மாணவர்கள் உயர் கல்வி பெறுவதை ஊக்குவிக்கும் பொருட்டு படிப்புதவித் தொகை மற்றும் பல்வேறு கட்டங்களில் பயிற்சிக்கால உதவித்தொகை திட்டங்களை அரசு செயல் படுத்திக் கொண்டு வருகின்றது. இந்திய அரசு வழங்கும் தேசிய

படிப்புதவித் திட்டம், தேசிய கடன் படிப்புதவித் தொகை திட்டம் மற்றும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு படிப்புதவித் தொகை வழங்கும் திட்டம் போன்றவை இவைகளில் அடங்கும்.

(i) இந்திய அரசு வழங்கும் தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம். இத்திட்டத்தின்கீழ் பத்தாவது மற்றும் மேநிலை பொதுத் தேர்வில் முதல் நிலைபெறும் மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இந்தத் தொகை மாணவர்கள் பயிலும் பாடப்பிரிவினை பொறுத்து ரூ. 720 முதல் ரூ. 3,600 வரை வழங்கப்படுகிறது. 1990-91ம் கல்வியாண்டில் இத்திட்டத்தின் கீழ் சுமார் 3,490 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 1991-92ம் நிதி ஆண்டிற்கான வரவு-செலவு திட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் 4,000 மாணவர்களுக்கு பயன்பெறும் வகையில் 55 இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்படுகிறது.

(ii) தேசிய கடன் படிப்புதவித் தொகைத் திட்டம்.—இத்திட்டத்திற்கு முழுமையாக இந்திய அரசு நிதி அளிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் நல்ல மதிப்பெண்களைப் பெறும் மாணவர்களுக்கு ரூ. 720-லிருந்து ரூ. 1,750 வரை படிப்பு உதவித்தொகை கடனாக வழங்கப்படுகிறது. இம்மாணவர்களின் பெற்றோர்களின் வருடாந்திர வருமானம் ரூ. 25,000-க்கும் மிகைப்படாமல் இருக்க வேண்டும். இத்திட்டம், இந்தக் கடன் தொகையை மாணவர்கள் படிப்பு முடிந்தவுடன் திருப்பிச் செலுத்திவிட வேண்டும் என்கிற நிபந்தனைகளுக்குட்பட்டு கடன் வழங்குகிறது. 1990-91 கல்வியாண்டில் 3,198 மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்காக 1991-92 ஆம் நிதி ஆண்டில் வரவு-செலவு திட்டத்தில் 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

(iii) பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு மாநில அரசு வழங்கும் படிப்புதவித் தொகைத் திட்டம்.—ஆண்டு வருமானம் ரூ. 12,000 தொகைக்குக் குறைவாக உள்ள ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் படிப்புதவித் தொகை வழங்கப்படுகின்றது. இந்த உதவித் தொகை மாணவர்கள் பயிலும் பாடப் பிரிவினை பொறுத்து ரூ. 720 முதல் ரூ. 1,840 வரை வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் 1990-91ம் கல்வியாண்டில் 109 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 1991-92ம் நிதி ஆண்டில் வரவு-செலவு திட்டத்தில் இத்திட்டத்திற்காக 2 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

(iv) மாநில அரசின் முதன்மையாக வரும் மாணவர்களுக்கான படிப்புதவித் தொகைத் திட்டம்.—மாநில அரசின் மற்றும் ஓர் படிப்புதவித் தொகைத் திட்டம் இதுவாகும். இத்திட்டத்தின் கீழ் பள்ளி இறுதித் தேர்வு, மெட்ரிகுலேசன் தேர்வு தவிர மற்றைய பொதுத் தேர்வுகளில் மதிப்பெண்கள் தரத்தில் முதல்

நிலை பெறும் மாணவர்களுக்கு, வருமான உச்சவரம்பு ஏதுமின்றி இந்த உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இதன்படி மாணவர்கள் பயிலும் பாடப்பிரிவினை பொறுத்து ரூ. 500 முதல் ரூ. 1,200 வரை உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. 1990-91ஆம் கல்வி ஆண்டில் 13 மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர். 1991-92 ஆம் நிதி ஆண்டுக்கான வரவு.செலவு திட்டத்தில் இத்திட்டத்திற்கென ரூ. 20 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(v) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு மதிப்பு உதவி மானியம்.—இத்திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர் மற்றும் தாழ்த்தப்பட்ட பழங்குடியின மாணவர்கள் உயர் கல்வி வாய்ப்பினை பெறும் வகையில் அவர்கள் மேநிலை கல்வி தேர்வில் 60 விழுக்காடு அல்லது அதற்கு மேல் மதிப்பெண்கள் பெற்றிருப்பின் ரூ. 300 வருடத்திற்கு ஒரு முறை மட்டும் மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினால் 2,242 மாணவர்கள் 1990-91 கல்விஆண்டில் பயனடைந்துள்ளனர். 1991-92 நிதி ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் இத்திட்டத்திற்காக சுமார் 2,000 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 7 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(vi) தமிழைப் பயிற்று மொழியாக கொண்ட மாணவர்களுக்கு ஊக்க உதவித் தொகைத் திட்டம்.—மாநில அரசின் கொள்கைக்கேற்ப கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாக எடுத்து பயிலும் மாணவர்களை ஊக்குவிப்பதற்காக வருடத்திற்கு ரூ. 180 ஊக்க உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. 1990-91ம் கல்வி ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 23,600 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். நடப்பு வரவு-செலவு திட்டத்தில் சுமார் 24,000 மாணவர்கள் பயன்பெறும் வண்ணம் ரூ. 45 இலட்சம் இதற்கென நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

13. தமிழில் கல்லூரிப் பாடப் புத்தகம்.—தமிழ் வெளியீடுகளை வெளியிடுவதற்கென 1—4—1962-ல் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்ப்பதிப்பகக் குழு, புதிய தமிழ் வெளியீடுகளையும் தமிழில் மொழி பெயர்த்த நூல்களையும் வெளியிட்டு வருகிறது. கல்லூரி மட்டத்திலான தமிழ்ப்பாட நூல்களை வெளியிடுவதற்கென ரூ. 1 கோடி இந்நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டது. இந்நிறுவனம் தொடர்ந்து தனது பணியினை மேற்கொள்ள ஏதுவாக விற்பனை மூலம் வரும் தொகையினை சுழல் நிதியாகப் பயன்படுத்திக் கொள்ள அதனிடம் நிறுத்தி வைக்கப்பட்டது. தமிழ் பதிப்பகக் குழு பின்னர் தமிழ் நாடு பாட நூல் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு இத்திட்டத்தின் கீழ் கல்லூரி மட்டத்திலான 910 பாடப் புத்தகங்களை வெளியிட்டது. இவ்வருட ஆரம்பத்தினை (மார்ச் 1991) அரசு இத்திட்டத்தினை ஆய்வு செய்து, சில அறிவியல் பொருள் தொடர்பான உயர்க் கல்விக்கான பாடப்புத்தகங்களை அச்சிட்டு வெளியிடும் பணியினை பல்கலைக் ழகங்களிடம் ஒப்படைப்பது என்று முடிவெடுத்துள்ளது. தமிழ் ராடு பாட நூல் நிறுவனமானது இதற்கென பல்கலைக் கழகங்

களுக்கு சுழல் நிதியாக வைத்துக் கொள்ள ரூ. 50 இலட்சம் அளிக்கும். இத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு ஒருங்கிணைப் பாளராக தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் நியமிக்கப்பட்டுள்ளார். அரசு இத்திட்டத்தினை திருத்தி அமைத்து கல்லூரி மாணவர்களுக்கென அதிகமான பாடப்புத்தகங்கள் மற்றும் மேற்கோள் புத்தகங்களையும் தமிழில் வெளியிடுவதற்கு ஏற் பாடு செய்யும்.

14. சட்டக் கல்வி.—

சட்டக் கல்வியின் தரத்தினை மேம்படுத்த எண்ணி, சட்டக் கல்வித் துறையினை 1983 ஆம் ஆண்டு அரசு தோற்றுவித்தது. தொழில் கல்வியின் முக்கியப் பிரிவுகளில் ஒன்றான சட்டக் கல்வியானது, இத்துறையின் முழு முயற்சியால் இந்தக் குறிப்பிட்ட கல்விப்பிரிவில் துரித முன்னேற்றம் அடைந் தது. தற்பொழுது சென்னை, மதுரை, திருச்சி மற்றும் கோயம் புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் சட்டக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகளில் (மூன்றாண்டு மாலை நேரக் கல்லூரி உட்பட), ஐந்தாண்டு சட்டக் கல்லூரி மற்றும் சட்ட முதுகலைக் கல்வி ஆகிய பாடப் பிரிவுகளில் பயிலும் மாணவர்கள் பற்றிய விவரங்கள் பார்வைக்கென பட்டியல் இட்டு கீழே தரப் பட்டுள்ளன :—

அட்டவணை—16.

	மூன்றாண்டுக் கல்வி.			ஐந்தாண்டுக் கல்வி.	எம். எல். பாட வகுப்பு.
	முழுநேரம்.	மாலை நேரம்.	மொத்தம்.		
சென்னை சட்டக் கல்லூரி.	810	720	1530	1010	120
மதுரை சட்டக் கல்லூரி.	570	360	930	780	30
திருச்சி சட்டக் கல்லூரி.	240	180	420	427	..
கோயம்புத்தூர் சட்டக் கல்லூரி.	150	180	330	250	..
மொத்தம் ..	1770	1440	3210	2467	150

தமிழை பயிற்று மொழியாகக் கொண்டு சட்டக் கல்வி பயிலுகின்ற மாணவர்களை ஊக்குவிப்பதற்கென ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு ரூ. 180 ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

15. தமிழ்நாடு அரசு இசைப் பயிற்சி மையங்கள்.—சென்னையிலும், மதுரையிலும், தமிழ்நாடு அரசு இசைப்பயிற்சி மையங்கள் குரல் இசையையும், ஆடற்கலையையும் தொடர்ந்து பயிற்றுவித்து வருகின்றன. மேலும், கடம், கஞ்சிரா, நுகர்சங்கம், நட்டுவாங்கம் ஆகிய வகுப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. மாணவ, மாணவியர்களுக்கு உதவித் தொகையும் வழங்கப்படுகிறது. இசைப் பயிற்சி மையத்தில் கருவியிசை பயிலும் மாணவர்கள் அரசின் உதவித் தொகை பெறுகின்றனர். முறையான வகுப்புகளில் 485 மாணவர்களும், மாலை நேர வகுப்புகளில் 125 மாணவர்களும் இசை பயின்று வருகின்றனர். மதுரை அரசு இசைப் பயிற்சி மையத்தில் குரலிசை, கருவியிசை, பரதநாட்டியம், இசை ஆசிரியர் பயிற்சி ஆகியவைகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. தமிழிசைக்கும். கர்நாடக இசைக்கும் புத்தூட்டமும் ஆக்கமும் அளிக்க அரசு முடிவெடுத்துள்ளது.

16. பல்கலைக்கழகங்கள்.—மாநில அரசின் வரவு-செலவு திட்டத்தின் கீழ் ரூ. 20 கோடி, 1991-92 ஆம் ஆண்டு பல்கலைக் கழகங்களுக்கு என நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் தற்பொழுது 11 பல்கலைக் கழகங்கள் இயங்கி வருகின்றன. அவைகளில் 5 பல்கலைக் கழகங்கள் கல்லூரிகளுடன் இணைந்தவையாகும். மற்றவை தனித்தன்மை அமைந்தவையாகும்.

கல்லூரிகளுடன் இணைந்தவை :

(1) தமிழ் பல்கலைக்கழகம், சென்னை.

(2) மதுரை-காமராசர் பல்கலைக்கழகம்.

(3) பாரதியார் பல்கலைக்கழகம்.

(4) பாரதிதாசன் பல்கலைக்கழகம்.

(5) மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்.

தனித்தன்மை வாய்ந்தவை :

(1) அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

(2) அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், சென்னை.

(3) அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம்.

(4) அண்ணா பல்கலைக்கழகம் (பொறியியல்), சென்னை

(5) தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

(6) அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் உயர் கல்வி நிலையம், கோவை.

அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதற்காக பல்கலைக் கழகங்களுக்கு நிதியுதவி பராமரிப்பு மான்யமாக வழங்கப்படுகிறது பல்கலைக் கழகங்களிலேயே நிதி பற்றாக்குறை காரணமாக திட்டங்கள் செயல் படுத்த இயலாத நிலை உள்ளது. அவைகளில் நிதி நெருக்கடியை கருத்தில் கொண்டு இந்த ஆண்டு பராமரிப்பு மான்யத்தினை ரூ. 11.70 கோடியிலிருந்து ரூ. 18.83 கோடியாக உயர்த்தி உள்ளது. இதைத்தவிர சிறப்பு உதவிகளும் குறிப்பிட்ட திட்டங்களுக்காக பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படுகின்றன. மூன்று பல்கலைக்கழகங்களுக்கு புதிய துறைகளுக்கு கட்டிடம் அமைக்க (பல்கலைக்கழக மானியக் குழுவின் பங்குத் தொகை ரூ. 75 இலட்சத்தை பெற உதவியாக) ரூ. 50 இலட்சம் மாநில அரசின் பங்குத் தொகையாக ஒதுக்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழகம் மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் பல்கலைக் கழக மானிய குழுவின் திருத்திய ஊதியத்தொகையை 1—1—1986 முதல் பெற்று வருகின்றனர். 1—4—1990 முதல் தமிழ் நாடு அரசு 16,000 ஆசிரியர்களின் ஊதிய உயர்வினால் ஏற்படும் முழுச்செலவையும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இதனால் ரூ. 22 கோடி அதிகப்படியான செலவாகும்.

அஞ்சல் வழிக் கல்வி :

கீழ்க்காணும் அஞ்சல் வழிக்கல்வி மற்றும் திறந்த வெளி பல்கலைக்கழக வகுப்புகள் பட்டப்பிரிவு மற்றும் முதுநிலை பட்டப் பிரிவில் உள்ளன :

அஞ்சல் வழிக் கல்வி.	(மாணவர் எண்ணிக்கை.)
மதுரை காமராஜர், அண்ணாமலை மற்றும் சென்னை பல்கலைக்கழகங்கள்.	1,50,000
திறந்த வெளிப்பல்கலைக்கழக வகுப்புகள் ;	
மதுரை காமராஜர் மற்றும் சென்னை பல்கலைக் கழகங்கள்.	48,000
மொத்தம் ..	1,98,000

IV. தொழில் நுட்பக் கல்வி.

தொழில் நுட்பக் கல்வி மேம்பாடு, நிர்வாகம் ஆகியவை 1957 ஆம் ஆண்டிலிருந்து தொழில் நுட்பக் கல்வித் துறையின் பொறுப்பில் இருந்து வருகின்றன. இதனைத் தொடர்ந்து கடந்த ஆண்டுகளில் இத்துறை தனது அமைப்பிலும், தரத்திலும் மேம்பாடு பெற்று இயங்கிவருகிறது. தற்சமயம் இயங்கிவரும் தொழில் நுட்பக் கல்வி நிலையங்களின் விவரங்கள் வருமாறு :—

அட்டவணை-17

1. பொறியியற் கல்லூரிகள் :

		(எண்ணிக்கை)
(அ) அரசினால் நடத்தப்படும் பொறியியற் கல்லூரிகள் (திருச்சியிலுள்ள மண்டல பொறியியற் கல்லூரி உட்பட).		6
(ஆ) அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள்.		3
(இ) சுய நிதி பொறியியற் கல்லூரிகள்	..	30
மொத்தம்	..	39

2. தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள் (பாலிடெக்னிக்குகள்) தனித் தன்மை வாய்ந்த பயிலகங்கள் :

(அ) அரசினால் நடத்தப்படும் பாலிடெக்னிக்குகள் தனித் தன்மை வாய்ந்தவை (கலை மற்றும் கைத் தொழில் கல்லூரிகள் உட்பட)		24
(ஆ) அரசு உதவி பெறும் பாலிடெக்னிக்குகள்		34
(இ) சுய நிதி பாலிடெக்னிக்குகள்	...	73
மொத்தம்	...	131
பெரு மொத்தம்		170

21. இத்துறையிலுள்ள தொழிற் கல்வி நிலையங்கள் பல்வேறு நிலைகளில் (பட்ட மேற்படிப்பு, பட்டப் படிப்பு, பட்டய பிற் படிப்பு, பட்டயப்படிப்பு மற்றும் சான்றிதழ் படிப்பு) கல்வி கற்க வசதிகள் செய்து தருகின்றன. தமிழ்நாடு, இந்தியாவிலுள்ள மற்ற

மாநிலங்களைவிட பட்ட மேற்படிப்பினை, வளரும் தேவைக்கேற்ப துவக்குவதில் முன்னிலையில் இருந்து வருகிறது. மாநிலத்திலுள்ள வெவ்வேறு திட்ட அடிப்படையில் பல்வேறு பொறியியற் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் ஆகியவற்றிற்கான மொத்த மாணவர் சேர்க்கை குறித்த விபரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 18

தொழிற் நுட்பக் கல்வி நிலையங்களுக்கான மாணவர் சேர்க்கை விவரங்கள்.

மாணவர் சேர்க்கை 1991-92

பயிலக வகை	எண்ணிக்கை.	படிப்பு நிலை.	முழு நேரம்	பகுதி நேரம்	மொத்தம்.
01. பொறியியற் கல்லூரிகள்.	39	பட்டப் படிப்பு.	7,190	810	8,000
		பட்டமேற் படிப்பு—பட்டப் படிப்பு.	330	127	457
		பட்டமேற் படிப்பு——பட்டய படிப்பு.	21	5	26
02. தொழிற் நுட்பப் பயிலகங்கள்	131	பட்டயப் படிப்பு.	22,490	1,560	24,050
சிறப்புப் பயிலகங்கள் (நுண் கலைக் கல்லூரிகள் உட்பட).		பட்டயமேற் படிப்பு——பட்டயம்	390	175	505
		சான்றிதழ்	70	210	280
	170		30,431	2,887	33,318

பாலிடெக்னிக்குகளுக்கான உலக வங்கி உதவி:

3. உலக வங்கியின் கடன் வசதியினை பெற்று பட்டய நிலையில் கல்வியின் மேம்பாட்டிற்காகவும், தர உயர்வுக்காகவும் ரூ. 76.00 கோடி செலவில் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் (1) பாலிடெக்னிக்குகளில் மாணவர் சேர்க்கையினை அதிகப்படுத்தல், (2) பாலிடெக்னிக்குகளில் பாடத் திட்டங்களை மேம்படுத்தல், (3) பாலிடெக்னிக்குகளின் நிர்வாகங்களில் திறமையினை அதிகப்படுத்தல் ஆகியவைகளை நோக்கங்களாகக் கொண்டது. இத்திட்டத்தின்கீழ் 21 அரசினர் தொழிற் நுட்பப் பயிலகங்களும், 34 அரசு உதவி பெறும் பயிலகங்களும் பயன் பெற உள்ளன. ஏப்ரல் 1991-ல் தொடங்கி மார்ச் 1996 முடிய உள்ள ஐந்து ஆண்டுகளில் இத்திட்டம் நிறைவேற்றப் படவுள்ளது. இதற்கென நடப்பு நிதியாண்டில் ரூ. 200 லட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 41 புதிய பட்டயப் படிப்புகளும், 10 முதுநிலை பட்டயப் படிப்புகளும் தொடங்குதல், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக்குகளில் 50 மாணவியர் விடுதிகள் கட்டுதல், 10 அரசு பாலிடெக்னிக்குகளில் 120 அரசு ஊழியர் குடியிருப்புகள் அமைத்தல், 55 பாலிடெக்னிக்குகளில் பணியாற்றும் ஆசிரியர்களில் 2,000 பேர் புதிய துறைகளில் பயிற்சி கொடுத்தல், 35 பாலிடெக்னிக்குகளில் கணிப்பான் வசதிகள் செய்தல், 10 பாலிடெக்னிக்குகளில் வெவ்வேறு நிலைகளில் மாணவர் சேர்க்கைக்கு வழி செய்யும் வகையில் பாடத் திட்டங்கள் அறிமுகம் செய்தல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். மேலும், தொழிற் நுட்பக் கல்வி இயக்கத்தின் திறனைக் கூட்ட தொழிற் நுட்பக் கல்வி இயக்ககத்திற்கு கூடுதல் பணியாளர்கள் மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படும்.

4. **தொழில் நுட்பக் கல்வியில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய இடங்கள்:**

(i) **நாட்டுப்புறங்களில் தொழில் நுட்பக் கல்வி வசதிகளை விரிவு படுத்தல்.**— தமிழ்நாடு, இந்நாட்டில் தொழில் நுட்பக் கல்விகளுக்கு வித்திட்ட ஒரிரு மாநிலங்களில் ஒன்று என்ற பெருமை உடையது என்ற போதிலும், 1947ம் ஆண்டுக்கு முற்பட்ட அன்னியர் ஆட்சி காலத்தில் இங்கு தொழிற் கல்வியில் ஏற்பட்ட முன்னேற்றம் மிகவும் குறைவு. அப்போது அரசு பொறியியற் கல்லூரிகள் 2ம், 9 பாலிடெக்னிக்குகளும் (2 தனித்தன்மை வாய்ந்த பயிலகங்களும் மற்றும் 2 கலை மற்றும் கைத் தொழி... கல்லூரிகளும்) மட்டுமே இயங்கி வந்தன. சுதந்திரம் ... ந்தபின், கடந்த ... ஆண்டுகளில், இந்நிலையில் கணி... முன்னேற்றம் ஏற்பட்டது. அதில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஒரு சில நல்மனது கொண்ட தனியார் ... நிறுவனங்களும் இத்

திகைய கல்வி நிலையங்களை ஏற்படுத்த முன் வந்து அரசோடு இணைந்து, கூடுதலான தொழில் நுட்பக் கல்வி வசதிகள் செய்து தர முன்வந்ததாகும். 1982ம் ஆண்டிற்கு முன் நகர்ப்புறங்களிலேயே இத்தகைய வசதிகள் ஏற்படுத்தப் பட்டிருந்ததால் கிராமப்புற மக்களை இவ்வசதி சென்று அடைய வில்லை. 1982—83-ல் தான் அப்போதைய மாண்புமிகு முதலமைச் சர் டாக்டர் எம்.ஜி.ஆர்., அவர்கள் கொண்டு வந்த திட்டத்தின் பயனாக சுயநிதி பொறியியல் மற்றும் பாலிடெக்னிக்குகள் துவக்க அனுமதிக்கப்பட்டு, நாட்டுப்புற மக்களும் இப்பயனை பெறும் நிலை ஏற்பட்டதோடு, பெரும்பான்மையான தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள் (30 சுயநிதிப் பொறி யியற் கல்லூரிகள், 73 சுயநிதி பாலிடெக்னிக்குகள்) பல மாவட்டங்களில் உள்ள பிற்படுத்தப்பட்ட பிரிவுகளில் கடந்த பத்தாண்டுகளில் நிறுவப்பட்டன. அப்போதிலிருந்து நாட்டுப்புறம் மற்றும் பிற்படுத்தப்பட்ட இடங்களிலேயே இத்தகைய வசதிகள் செய்து தரப்பட வேண்டுமென்ற திட்டத்தில், அரசு 2 பொறியியற் கல்லூரிகளில் ஒன்றினை 1982-83ல் திருநெல்வேலி மாவட்டத்திலும், 1990-91ல் மற்றொன்றினை வேலூரிலும் நிறுவியுள்ளது.

(ii) மகளிருக்கு கூடுதலான தொழில் நுட்ப வசதிகள்;—தொழில் நுட்பக் கல்வியை மகளிர் விரும்பிப் பயில, தமிழ்நாட்டில் பெண்களுக்கென்றே தனியாக பாலி டெக்னிக்குகள் துவக்கப்பட்டுள்ளன. தற்போது இம் மாநிலத்தில் பெண்களுக்கென்றே 11 பாலிடெக்னிக்குகள் உள்ளன. பெண்கள் பாலிடெக்னிக்குகளில் மகளிர் மட்டும் சேர்த்துக் கொள்ளவும், பிற பாலிடெக்னிக்குகளில் ஆண்களும், மகளிரும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பது அரசின் கொள்கையாகும். இக்கொள்கையை பெண்கள் பாலி டெக்னிக் அமைந்துள்ள நகரங்களில் உள்ள ஒரு சில பாலிடெக்னிக்குகள் தவிர, மற்றவை பின்பற்றி வருகின்றன. ஒரு சில தெரிந்தெடுக்கப்பட்ட பாலிடெக்னிக்குகளில் மகளிருக்கெனத் தனி பிரிவுகளும் அமைந்துள்ளன. தற்போது பாலிடெக்னிக்குகளில் சுமார் 20 சத விகிதம் மாணவியர் பயின்று வருகின்றனர்.

(iii) மலைவாழ் குடியினர் வாழும் பகுதியில் தொழில் நுட்பக் கல்வி வசதி.—நீலகிரி மாவட்டத்தில் உள்ள மலை வாழ் குடியினர் வாழும் பகுதியில் தொழில் நுட்பக் கல்வி வசதியினைப் பெருக்கிட 1982-83ம் ஆண்டு உதகமண்டலத்தில் ஒரு அரசு பாலிடெக்னிக் அமைத்ததோடு, நீலகிரி தோட்ட அமைப்பாளர் சங்கத்தினரால் ஒரு அரசு உதவிபெறும் பாலி டெக்னிக்கினையும் இந்தக் கல்வி ஆண்டிலிருந்து துவக்க, அரசின் நிதி நெருக்கடி இடையூறுகள் இருந்தபோது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(iv) தொழில் நுட்பக் கல்வி நிலையங்களில் கணிப்பான் வசதிகள்.—தொழில் நுட்பம் வளர்ந்து வரும் நிலையில், கணிப்பானில் பயிற்சி பெறுபவர்கட்கு வருங் காலத்தில் நல்ல முன்னேற்றம் உள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு, தொழில் நுட்பக் கல்வி நிலையங்களில் இருந்து வெளிவருபவர்கட்கு இப்பிரிவில் சிறந்த பயிற்சி அளிக்க தனியான முயற்சி எடுத்து, அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில், மிகவும் சிறந்த கணிப்பான் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகளில் சராசரியாக ஒரு கோடி ரூபாய் செலவில் கணிப்பான் வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. மைய அரசும் இதற்கான நிதி உதவிகளை, நேரடியாகக் கல்வி நிலையங்கட்கு அளித்து வருகிறது.

மேலும், கணிப்பான் குறித்த பாடம், பொறியியற் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக்குகட்கான பாடத்திட்டத்தில் ஒரு கட்டாய பாடமாகவும் புகுத்தப்பட்டு, இப்பாடத்தின் முக்கியத்துவத்தை மாணவ மாணவியர் உணரவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால், இந்நிலையங்களிலிருந்து வெளிவரும் மாணவ மாணவியர் வேலை வாய்ப்பு பெருகிடவும், இவர்களது கணிப்பான் பயிற்சி வழி வகுத்துள்ளது.

(v) அடிப்படை வசதிகளை விரிவாக்குதல்.—தொழில் நுட்பக் கல்வி பயில அடிப்படை வசதிகளான ஆய்வகம் போன்றவற்றில் புதுமைகள் புகுத்தவும் பட்டறை மற்றும் ஆய்வகங்கள் சிறந்து இயங்கவும், நூலகவசதிகளைப் பெருக்கவும் ஆண்டுதோறும் திட்டங்கள் தீட்டப்பட்டு, முன்னேற்றமான வசதிகள் அளிக்கப்படுகின்றன.

5. இயக்ககத்தின் பிற செயல்பாடுகள்: (i) வணிக வியல் பிரிவுகளில் தேர்வுகள் நடத்தல்: ஒவ்வொரு ஆண்டும் (மே மற்றும் நவம்பர் திங்களில்) வணிகவியல் பிரிவுகளான தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணிதவியல் ஆகிய பாடங் களில் இரண்டுமுறை இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்டவர் களுக்கு தேர்வுகள், இவ்வியக்ககத்தினால் நடத்தப்பட்டு வரப் படுகிறது.

(ii) தேர்வுப் பணியினை கணிப்பான் வழி செய்தல் இத்துறையில் பட்டயப் படிப்பு (பாலிடெக்னிக் மாணவர்கட்கு). மாணவர்கட்கு தேர்வு நடத்தல்) முடிவு வெளியிடுதல், தேர்ந் தோர்கட்கு பட்டயம், மதிப்பெண் பட்டி ஆகியவை வழங்கும் பணி மேற் கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி குறித்த அனைத்து வேலைகளும் கணிப்பான் கொண்டே நடத்தப்பட்டு, இந்த முழுப்பணியும், மிகக் குறுகிய கால அளவில் முடிக்கப் படுகிறது. மேலும், இதற்கான பாடவாரியாக, பயிலக வாரியான தேர்வு சம்பந்தமான விளக்க விவரங்களும், மாநில சராசரி விவரங்களும் இதே முறையில் தயார் செய்யப்படு கின்றன.

6. 1991-92ம் ஆண்டு நிதி ஒதுக்கீடு.—1991-92ம் ஆண்டு தொழில் நுட்பக் கல்விக்கான நிதி ஒதுக்கீடு அண்ணா பல்கலைக் கழகத்திற்கான மானியத்தையும் சேர்த்து ரூ. 45.11C காடியாகும் இது முந்தைய ஆண்டு ஒதுக்கீட்டினைவிட 40 சதவிகிதம் கூடுதல் ஒதுக்கீடாகும். 1991-92ம் ஆண்டு செயல்படுத்தப் பட வேண்டிய புதிய திட்டங்கள் கீழ் வருமாறு :—

(அ) அரசினர் பொறியியற் கல்லூரி சேலத்தில் மகளிர் கான விடுதி ரூ. 27 லட்சத்தில் கட்டப்படவுள்ளது. இதற்கு 1991-92ம் ஆண்டு ரூ. 5 லடசம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

(ஆ) (1) அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை.

(2) அழகப்பா செட்டியார் பொறியியற் கல்லூரி, காரைக்குடி.

(3) அரசினர் பொறியியற் கல்லூரி, திருநெல்வேலி.

(4) தியாகராசர் பொறியியற் கல்லூரி, மதுரை ஆகிய வற்றில் உள்ள பாடங்களை நடத்திட கூடுதலாக ஆசிரியர் மற்றும் பணியாளர்கள் பதவி ஏற்படுத்திட, ஆண்டு தோறும் ரூ. 10 இலட்சம் செலவிட வழி வகை செய்யப்படுகிறது. இதில் 1991-92 ஆம் ஆண்டிற்கான செலவினம் ரூ. 5 இலட்சமாகும்.

(இ) அரசினர் சிற்பக் கலைக் கல்லூரி மாமல்லபுரத்தில் மாணவர் விடுதியில் நூறு மாணவர்கள் தங்கும் வசதிக்கும், 5 வகுப்பறைகள் கூடுதலாக கட்டவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

7. அண்ணா பல்கலைக் கழகம் :—

(i) அண்ணா பல்கலைக் கழகம், நாட்டிலேயே மிகப் பெரிய தொழில் நுட்பப் பல்கலைக் கழகமாக தோற்றுவிக் கப்பட்டது. இப் பல்கலைக் கழகத்தில் உள்ள 5,008 மாணவர்களில் 660 பேர் மாணவிகள் உள்ளனர். நாட்டிலேயே பொறியியல், தொழில் நுட்பவியல் படிப்புக்களில் வேறு எப் பல்கலைக் கழகங்களிலும் இல்லாத மிக அதிகமான மாணவியர்கள் இப்பல்கலைக் கழகத்தில் உள்ளனர். இது வரை இப் பல்கலைக் கழகத்தால் நடத்திவரும் 20 இளநிலை பட்டப் படிப்புகள், 36 முதுநிலை பட்டப் படிப்புகள், 6 முது நிலை பட்டமுறிப் படிப்புகள் ஆகியவற்றில் பெரும்பாலானவை தமிழ்நாடு உள்ளிட்ட இந்திய நாட்டில் உடனடி வளர்ச்சித் திட்டங்களைச் சார்ந்தவையாகும். (1) நீர்ப்பாசனமும் நீர்வள மேலாண்மையும் (2) சுற்றுப்புறச் சூழல் பொறியியல் (3) தொலை உணர்வு (4) மனித குடியமர்த்தல் (5) படிகவளர்ச்சி (6) உயிரியல் தொழில் நுட்பம் போன்ற துறைகளில் இப்பல்கலைக் கழகம் ஆற்றும் பணி வழிகாட்டுவனவாக உள்ளது. இப் பல்கலைக் கழகம் ஏழாவது திட்டக் காலத்தில் குறிப்பிடத்தக்க ஒரு பெரும் வளர்ச்சித் திட்டத்தினை நிறைவேற்ற, உள்நாட்டு

வெளிநாட்டு நிதியுதவியுடன் ஏறத்தாழ 7.50 கோடி ரூபாயை இன்றியமையாத வளர்ச்சி துறைகளில் முன்னேற்றம், புதிய துறைகளில் பட்டப் படிப்புக்களை நடத்துதல் போன்றவைகளுக்கு செலவிட்டுள்ளது. இப்பல்கலைக் கழகம் நமது நாட்டில் உள்ள நிதியுதவி நிறுவனங்கள் மட்டுமின்றி, வெளி நாடுகளான ஜெர்மானியக் கூட்டுக் குடியாட்சி, அமெரிக்க ஐக்கியநாடுகள் போன்ற நாடுகளினின்றும் நிதியுதவி பெற்று வருகின்றது.

(ii) பல துறைகளில் உள்ள ஆய்வகங்களை இன்றைய நாள் வரையிலான நவீன இன்றியமையாத பொறிகளையும், வசதிகளையும் கொண்டு நவீனப்படுத்தும் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. இப்பல்கலைக் கழகம் இதுவரை 5.21 கோடி ரூபாயை இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்திலிருந்து நிதியுதவி பெற்றுள்ளது.

(iii) அண்ணா பல்கலைக் கழகத்தில் நான்கு கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை :—

அட்டவணை 19.

நிறுவனம்/ கல்லூரி.	இளநிலைப் பட்டப் படிப்புகள்.		முதுநிலைப் பட்டப் படிப்புகள்.		மொத்தம்.
	முழு நேரம்.	பகுதி நேரம்.	முழு நேரம்.	பகுதி நேரம்.	
(1)	(2)	(3)	(4)	(6)	(5)
பொறியியற் கல்லூரி.	1,547	800	940	120	3,407
அழகப்பா தொழில் நுட்பக் கல்லூரி.	488	(—)	148	13	649
கட்டடக்கலை மற்றும் திட்டமிடுதல் பள்ளி.	505	77	153	6	741
சென்னை தொழில் நுட்பக் கல்லூரி.	144	(—)	60	7	211
மொத்தம்	2,684	877	1,301	146	5,008

தத்துவப் புலமையாளர் (எம்.பில்)மற்றும் முனைவர் (பி. எச். டி.) பட்டப் படிப்புகளும் பெரும்பாலான துறைகளில் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை இப்பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட தத்துவப் புலமையாளர் மற்றும் முனைவர் பட்டங்களின் மொத்த எண்ணிக்கை :

	தத்துவப் புலமையாளர்.	முனைவர்.
1991 ஆம் ஆண்டு வரை	201	122

நீர்வள ஆய்வு மையம் :

(iv) இம்மையம் நீர்வளத் திட்டம், முன்னேற்றம், மேற்பார்வை போன்ற பல பிரிவுகளில் நீர் பயன்படுத்துவோர், நிதி உதவியாளர் போன்ற பலருடைய கூட்டு முயற்சிகளுடன் பத்தாண்டு காலமாக செயலாற்றி ஒரு பல்துறை இணைப்பு மையமாக இயங்கி வருகின்றது. இதுவரை, பலதிறப்பட்ட ஆராய்ச்சி மற்றும் கலந்தாய்வுத் திட்டத்திற்காகவும், தேசிய மற்றும் ஒருங்கிணைந்த தேசிய நிறுவனங்கள் ஆகிய பல திறப்பட்ட நிதியுதவி நிறுவனங்களிடமிருந்து ஏறத்தாழ ஐந்து கோடி ரூபாய் நிதியுதவி பெற்றுள்ளது. அவற்றுள் தமிழ்நாடு அரசிடமிருந்து ரூபாய் பன்னிரண்டு லட்சம் நிதியுதவி பெறப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள சுமார் முப்பது லட்சம் நீர்ப்பாசன ஏரிகளை நவீனப்படுத்த சுமார் நாலாயிரம் மில்லியன் ரூபாய் நிதியினை கடனாகத் தந்து உதவ உலக வங்கி தன் இசைவினைத் தெரிவித்துள்ளது. இத்திட்டம் பொதுப்பணித்துறையினால் ஒழுங்குபடுத்தப்பட்டு வருகின்றது. ஏற்கனவே இம்மையம் போர்டு பவுன்டேஷன் (Ford Foundation) நிறுவனத்தாரால் வழங்கப்பட்ட முப்பத்து ஓராயிரம் டாலர் நிதியுதவியுடன், சிறிய நீர்ப்பாசன திட்டங்களை நவீனப்படுத்தும் திட்டத்தை சீரிய முறையில் செயலாற்றி குறிப்பிடத்தக்க பணியை ஆற்றியுள்ளது. இப்பணி, தேசிய மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட தேசிய நிறுவனங்களிடையே, ஒரு குறிப்பிடத்தக்க ஊக்கத்தை உருவாக்கியுள்ளது. தற்போது, ஐரோப்பிய பொருளாதாரப் பிரிவினால் வழங்கப்பட்ட, இருநூற்று அறுபது மில்லியன் ரூபாய் நிதியுதவியுடன், தமிழ்நாட்டிலுள்ள நூற்று ஐம்பது நீர்ப்பாசன ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தை செயல்படுத்தி வருகின்றது.

தொலை உணர்வு மையம் :

(v) 1982-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் தோற்றுவிக்கப்பட்ட இத்தொலை உணர்வு மையத்தை இந்திய அரசு, தேசிய தொலை உணர்வு செயற்பணி மையமாக அங்கீகரித்துள்ளது. இந்திய அரசு வழங்கிய 1.27 கோடி, தமிழ்நாடு அரசு வழங்கிய

2.73 கோடி, ஜெர்மன் கூட்டுக் குடியரசு வழங்கிய 3.50 கோடி ரூபாயும் சேர்ந்து மொத்தம் 7.5 கோடி ரூபாய் நிதி உதவியுடன் இம்மையம் இயங்கி வருகின்றது. இந்நிதி உதவியுடன், இம்மையம் சுற்றுப்புறச் சூழல் மாற்றம், இயற்கை வளப் பாதுகாப்பு ஆகியவற்றின் நிலப்படங்கள் தயாரிக்க, தொலை உணர்வு மைய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கு மிக நவீன அறிவியல் பொறிகளை நிறுவியுள்ளது. அவற்றுள் குறிப்பிடத்தக்கது வாக்ஸ் 11/780 (vax) கணிப்பொறி ஆகும். இக்கணிப்பொறி இன்னும் சில பொறிகளுடன் ஒருங்கிணைத்து செயற்கைக் கோள் மூலம் பெறப்படும் புள்ளி விபரங்களை எண்மான உருமூலம் ஆய்வு செய்ய மிகவும் பயன் படுகிறது. இந்த மையம் பல திறப்பட்ட பயிற்சித் திட்டங் களுடன், முதுநிலை தொழில் நுட்பப் பட்டப் படிப்பினையும் (M.Tech.) நடத்தி வருகின்றது.

<u>சுற்றுப்புறச் சூழல் மையம் :</u>

(vi) 1955-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட, பொதுச் சுகாதாரப் பொறியியல்துறை, உலகச் சுகாதார நிறுவனத்தின் உதவியுடன் ஒருங்கிணைக்கப்பட்டு, சுற்றுப்புறச் சூழல் கல்வி மையமாக 1982-ஆம் ஆண்டு உயர்நிலை பெற்றது.

தென்கிழக்கு ஆசியப் பகுதியில் சுற்றுப்புறச் சூழல் பொறியியல் மனிதவள மேம்பாட்டில், இம்மையம் அங்கீகரிக் கப்பட்ட ஒரு மையமாகத் திகழ்கிறது. அதுமட்டுமின்றி விஸ்திரிப்புத் திட்டம், கலந்தாய்வு, ஆராய்ச்சி, தொடர்கல்வி, உயர்கல்வி புகட்டல் போன்ற பணிகளிலும் இம்மையம் பணி யாற்றி வருகின்றது. இந்திய அரசினிடமிருந்தும், பல்கலைக் கழக மான்யக் குழுவினரிடமிருந்தும் வளர்ச்சி நிதியாக சுமார் 84 இலட்சம் ரூபாய்களைப் பெற்றுள்ளது. இம்மையம் சுற்றுச்சூழல் பொறியியல் முதுநிலை பட்டமுறிப்படிப்பையும், முதுநிலை பட்டப் படிப்பையும் நடத்துவதோடு ஒரு குறுகிய காலப் பயிற்சியை, பொறியாளர்களுக்காக நடத்தி வருகின்றது. முனைவர் பட்டதாரிகளுக்கென ஆய்வுத் திட்டங்களையும் நடத்தி வருகின்றது. இம்மையம் தேவையான ஆய்வுத் தளவாடங்களையும், களக் கருவிகளையும் பெற்றுள்ளது. இந்திய அரசு, மற்றும், அமெரிக்க ஐக்கிய நாடுகளால் பரிந்துரைக் கப்பட்ட பற்பல பெரும் ஆய்வுகளையும், முன்னேற்றத் திட்டங் களையும் இம்மையம் ஏற்று நடத்துகின்றது.

<u>படிக வளர்ச்சி மையம்—அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி வளாகம் :</u>

(vii) செய்பொருள் அறிவியல் ஆராய்ச்சியில் இத்துறை புதிதாகத் தோன்றிய ஓர் ஆய்வுக்களமாகும். மின்னணுத் தொழிற்சாலை, நார் ஒளி பரப்புதல் போன்றவற்றில் உப யோகப்படும் செய்பொருள்களான படிகங்களை வளர்ப்பதில் இம்மையம் ஒரு ஊடுருவி ஆய்வுக் களமாக அடையாளம் காட்

டப்பட்டுள்ளது. அண்ணா பல்கலைக்கழகத்தில் இந்த படிக வளர்ச்சி மையம் 1982-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. போதுமான ஆய்வுக்கூட வசதிகளையும், மிகநவீன படிக வளர்ச்சி மற்றும் சிறப்புத் தன்மை வாய்ந்த தளவாடங்களையும் இம்மையம் பெற்றுள்ளது. தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட ரூ. 4 இலட்சம் நிதி உதவியும், பல நிதியுதவி நிறுவனங்களின் தாராளமான நிதி உதவியும் சேர்ந்து ஏறத்தாழ மொத்தம் ரூ. 28 இலட்சம் நிதியுதவியால் இம்மையத்தின் வசதிகள் நிலையாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தேசிய மற்றும் ஒருங்கிணைந்த தேசிய பருவ அறிவியல் வெளியீடுகளில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது இம்மையத்திற்கு பெருமை சேர்ப்பதொன்றாகும். அத்துடன் மதிப்பிடத்தக்க ஒருங்கிணைந்த தேசீய ஆய்வுக் கூடங்களில் ஆய்வினை மேற்கொள்ள இம்மையத்தில் இருந்து ஆராய்ச்சிப் பணியாளர்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட தேசீய பயிலகப்படி கிடைக்கப் பெற்றுள்ளது. இம்மையம் படிக வளர்ச்சியில் பல கோடை மற்றும் குளிர்காலப் பள்ளிகளையும் ஒருங்கிணைக்கப்பட்ட தேசிய கருத்தரங்குகளையும் நடத்தியுள்ளது. இம்மையத்தில், பாதுகாப்புத் துறைக்குப் பயன்படக்கூடிய ஒரு பெரிய காலியம் ஆர்சனைடு ஒற்றைப் படிகம் இந்தியாவிலேயே முதன் முதலாக வளர்க்கப்பட்டது. இம்மையத்தில் மேற்கொள்ளப்பட்ட மிகச் சிறந்த ஆய்வுப் பணியினை நன்கறிந்த பல்கலைக்கழக மானியக்குழு இம்மையத்தினை தேசீய படிக வளர்ச்சி மையமாக உயர்த்த அண்மையில் அனுமதித்துள்ளது. மற்றும் நாடெங்குமுள்ள ஆராய்ச்சிப் பணியாளர்களுக்கு வசதிகளை அளிக்க ஒருங்கிணைந்த பல்கலைக்கழக மையமாக செயலாற்ற ஆரம்ப நிதி உதவியாக ரூ. 1.50 கோடியினை வழங்கியுள்ளது.

உயர்சார் நுட்பவியல் மையம்—அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி வளாகம் :

(viii) இம்மையம் முனைவர் பட்டப்படிப்பினையும், தொழில்நுட்ப முதுகலைப் பட்டப் படிப்பினையும் நடத்தி வருகின்றது. இம்மையம் சிறந்த உயர் கல்வியறிவுள்ள ஆசிரியர்களையும், சிறந்த கருவிகளைக் கொண்ட ஆய்வுக் கூடத்தையும் பெற்றுள்ளது. இம்மையத்தின் பெரும்பாலான ஆய்வுக் கூடங்கள் நன்கு திட்டமிடப்பட்ட நவீன கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இம்மையம் சுவிட்சர்லாந்து, ஐக்கியநாடுகள், பிரான்சு நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்ட தேசீய பரிமாற்ற திட்டங்களைக் கொண்டுள்ளது. தொழிற்சாலை பல்கலைக் கழக ஒருங்கிணைந்த செயல் திட்டத்தை வலுப்படுத்த தென்வட்டார பெட்ரோ வேதியல் தொழிற்சாலை நிறுவனத்துடன் ரூ. 2.5 கோடி நிதிச் செலவில் ஒரு பெரிய தொழிற்சாலை நிறுவ ஒப்பந்தக் குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இக்குறிப்பின்படி, அடிப்படை ஆராய்ச்சிகளின்

கண்டுபிடிப்புகளை வியாபாரத்துறைகளில் பயன்படுத்துவதற்கு இம்மையத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக ஒரு தென் வட்டார பெட்ரோ வேதியல் தொழிற்சாலை நிறுவன உயிரியல் ஆய்வுக்கூடம் நிறுவப்படும். தமிழ்நாடு அரசின் ஏறத்தாழ மொத்தம் ரூ. 1.3 கோடிகள் நிதி உதவியுடன் இம்மையத்தில் பல பரிந்துரைக்கப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. இந்திய சுவிட்சர்லாந்து நிறுவனத்தாரால் பரிந்துரைக்கப்பட்ட ரூ. 60 இலட்சங்கள் செலவில் நடத்தும் ''உயிரியல் தொழில் நுட்ப முன்னேற்றத்திற்குத் தேவையான வசதிகள்'' என்ற பிரிவில் நடத்தப்படும் ஆராய்ச்சித் திட்டம் குறிப்பிடத் தக்கதொன்றாகும்.

ix ஒருங்கிணைக்கப்பட்ட பெருங்கடல் மேலாண்மை மையம்.—ஒருங்கிணைக்கப்பட்ட பெருங்கடல் மேலாண்மை நிறுவனம் தோற்றுவிக்க 1983 ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்டது. பல்வேறுப்பட்ட பெருங்கடல் அறிவியல் பற்றிய அடிப்படைச் செய்திகளைச் சேகரிக்க முதல்படியாக ஒரு பெருங்கடல் புள்ளி விபர மையம் நிறுவப்பட்டது. கடற்கரை வள மேலாண்மை பற்றி அறிவதற்காக, இன்றியமையாத வசதிகளைச் சேகரிக்க பல்கலைக்கழக மான்யக் குழு மற்றும் (COSIST) திட்டங்களின் கீழ் ரூ. 35.5 இலட்சங்கள் வழங்கப்பட்டது. அண்மையில் தமிழ்நாட்டின் மீன் வளப் பண்ணைகளின் உயர் வளர்ச்சிக்காக ஒரு பெரும் ஆராய்ச்சி திட்டம் இந்திய அரசின் உயரியல் துறையினரால் கொள்கையளவில் ஒத்துக்கொள்ளப்பட்டு, ரூ. 64.00 இலட்சம் வழங்கப்பட உள்ளது.

தீர்மானிக்கப்பட்ட நிறுவனத்தின் முதன்மை குறிக்கோள்கள்:—

(அ) நமது மாநிலத்தின் கடற்கரை வளமும் மேலாண்மையும் பற்றிய செயல்முறை மற்றும் ஆராய்ச்சிகளின் தேவைகளுக்கு பொறுப்பேற்கும் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனமாக செயல்படுதல்.

(ஆ) கடல்சார் தொழிற்சாலைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.

(இ) பெருங்கடல் வரைப்பட செய்முறைத் தகவல்களைச் சேகரிக்கும் தகவல் மையம் தோற்றுவித்தல்.

(ஈ) கடற்கரைச் சுற்றுச் சூழல் கொள்கை போன்றவற்றை தெளிவாகக் கூற உதவுதல்.

நீண்ட கடற்கரையையும் பரந்த நிலைச் சக்தியையும், கடல்—வள முன்னேற்றத்தையும் பெற்று இந்திய கடற்கரை முன்னேற்ற மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாக விளங்குகிறது. தமிழ்

நாட்டின் கடற்கரைப் பகுதிகளின் மேலாண்மை நல்ல பாதுகாப்பு போன்றவைகளின் முன்னேற்றத்திற்காக, கடற்கரை மீன்வளத்தை வெளிப்படுத்தவும், வெளிக் கொணரவும் உயர் கல்வியிலும், ஆராய்ச்சிகளிலும் ஊக்கத்துடன் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

(x) கணிப்பொறி அறிவியல்—பொறியியல் பள்ளி, பொறியியற் கல்லூரி :—இப்பள்ளி 1987 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இப்பள்ளியில் அறிவியல், பொறியியல் ஆகிய இரு துறைகளிலும் தகுதிபெற்ற ஆசிரியர்களையும் நியமனம் செய்ய திட்டமிட்டுள்ளது. இப்பள்ளி தனிப் பொறி அறிவியல் மற்றும் பொறியியல் பட்டப்படிப்பு, முதுநிலை பொறியியல் பட்டப்படிப்பு, முதுநிலை கணிப் பொறி (M. C. A.) மற்றும் இளநிலை அறிவியல் பட்டய மேற்படிப்பினையும் நடத்தி வருகின்றது. இத்துறையில் நன்கு தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களையும், பணியாளர்களையும் பெற்றுள்ளது. இத்துறைப் படிப்புக்குப் போதுமான ஆய்வுக்கூட வசதிகளுடன் கூடிய ஒரு புதிய கட்டடமும், பல்கலைக்குழுவின் மானியக் குழுவினால் அளிக்கப்பட்ட ரூ. 28 இலட்சம் நிதியுதவியுடன் அண்மையில் கட்டப்பட்டுள்ளது. கட்டடச் செலவும் சேர்ந்து இன்றுவரை இப்பள்ளியில் நிதிச் செலவு ரூ. 70 இலட்சம் ஆகும். இப்பள்ளியில் முறையே நடத்தப்படும் பட்டப்படிப்புகள் மற்றும் பட்ட மேற்படிப்புக்கள் மட்டுமின்றி பல ஆசிரியர்களை ஊக்கத்துடன் ஆராய்ச்சிப் பணியிலும் ஈடுபடுத்தியுள்ளது. இப்பள்ளியில் ஒரு ரொபோடிக்ஸ் (REBOTICS) ஆராய்ச்சிக் கூடத்தையும் ஒரு செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சிக் கூடத்தையும் ஏற்படுத்துவது வருங்கால திட்டமாகும்.

(xi) கருவி மற்றும் மின்னணுப் பள்ளி :—சென்னை தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்திலுள்ள கருவி தொழில் நுட்பத் துறையையும், மின்னனு துறையையும் ஒருங்கிணைத்து, இப்பள்ளி 1987 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்திய அரசிடமிருந்தும், பல்கலைக் கழக மான்யக் குழுவினரிடமிருந்தும், ஜெர்மானியக் கூட்டுக் குடியாட்சியிடமிருந்தும் இப்பள்ளிக்கு மொத்தம் ரூ. 144 இலட்சம் நிதி கிடைத்துள்ளது. இத்துடன் ரூபாய் 15 இலட்ச மதிப்புள்ள பரிந்துரைக்கப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்கள் நிகழ்ந்து வருகின்றன. நமது நாட்டுப் பாதுகாப்புக்கு மிகவும் முக்கியமான சூரிய வெப்பப் (SOLAR CELL) பணிக்கும், ராடார் கிளட்டர் கல்விக்கும் தேவையான பல படிக சிலிகான் ஆராய்ச்சிப் பணியையும் இப்பள்ளி அண்மையில் நடத்தி வருகின்றது. வானொலி, ஒளிபரப்பு தொடர்புடைய துறையுடன் தமிழ் நாட்டிலுள்ள (IQMOSPHERIC) அயன மண்டலத்தின் பல்வேறு குணங்களைப் பற்றி அறிந்து வருகிறது. இப்பள்ளி முனைவர் பட்டப்படிப்பு வாய்ப்பு

களுடன், பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்புகளையும் நடத்தி வருகின்றது. இப்பள்ளி, சிறந்த கருவிகளுடன் கூடிய ஆய்வுக் கூடத்தையும் பெற்றுள்ளது.

பல்கலைக் கழக மான்யக்குழு, இந்திய அரசு, தமிழ் நாடு அரசு போன்ற பல நிதியுதவி நிறுவனங்களின் நிதியுதவி யுடன் 1991–92 ஆம் நடப்பு ஆண்டில் இப்பல்கலைக்கழகத் தின் அனைத்து முன்னேற்ற மையங்களிலும் மற்றும் நிறு வனங்களிலும் ஆராய்ச்சிப் பணிகளும், கலந்தாய்வு பணி களிலும் முன்னேற்றமடைந்து வருகின்றன.

V. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி.

அனைவருக்கும் தொடக்க கல்வி என்னும் இலக்கை நோக்கிச் செல்லும் இன்னொரு வழியே பள்ளிசாராக் கல்வியாகும். வயது வந்தோரிடையே எழுத்தறிவின்மையை ஒழிப்பதற்கென வயது வந்தோர் கல்வி திட்டமிடப்பட்டுள்ளது. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் துறை, வயது வந்தோர் கல்வி — பள்ளிசாராக் கல்வித் திட்டங்களை துறைப் பணியாளர்கள், தொண்டு நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், நாட்டு நலப் பணித் திட்டத் தொண்டர்கள் முதலியோரைக் கொண்டு செயல்படுத்தி வருகிறது.

2. தமிழ்நாடு எழுத்தறிவூட்டும் சாதனையில் பெரிய மாநிலங்களில் கேரளாவை அடுத்து இரண்டாவதாய் உள்ளது. தமிழ் நாட்டில் எழுத்தறிவு பெற்றோர் சதவீதம் 1981இல் 46.76ல் இருந்து 1991இல் 63.72 ஆக குறிப்பிடும் அளவுக்கு உயர்ந்துள்ளது. இந்தியாவில் எழுத்தறிவு சதவீதம் 52.11. தமிழ்நாட்டில் இந்த எழுத்தறிவு சதவீதம் 7 வயதுக்கு மேற்பட்ட உத்தேச மக்கள் தொகையிலிருந்து கணக்கிடப்பட்டதாகும். ஆண் பெண் வாரியாக எழுத்தறிவு சதவீதம் ஆண் 74.88 சதவீதம். பெண் 52.29 சதவீதம் மொத்தத்தில் 62.72 சதவீதம்.

3. இந்த அரசு செயல்படுத்தும் வயது வந்தோர் கல்வி, பள்ளிசாராக் கல்வித் திட்டங்கள் பின்வருமாறு:

(i) <u>மாநில வயது வந்தோர் கல்வித் திட்டம்: 1979</u> முதல் மாநில வயது வந்தோர் கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் நோக்கம் 15 முதல் 35 வயதினர்க்கு செயல்திறனோடு கூடிய எழுத்தறிவை அளிப்பதாகும். செயல்முறை எழுத்தறிவு என்பது கீழ்க் கண்டவற்றை உள்ளடக்கியதாகும்.

எழுத்தறிவு, எண்ணறிவு ஆகியவற்றில் தற்சார்பு அடையச் செய்தல்.

நலிவுற்றோர், நலிவுக்குரிய காரணத்தை உணர்ந்து அமைப்புகள் மூலமும், பங்குறுதல் மூலமும் தற்போதைய சமூக பொருளாதார நிலையிலிருந்து வளர்ச்சியை நோக்கிச் செல்லுதல். பொது நல்வாழ்வுக்கும் பொருளாதார நிலை மேம்பாட்டுக்கும் உரிய திறன்களைப் பெறுதல் தேசிய ஒருமைப்பாடு, சுற்றுச் சூழல் பாதுகாப்பு, மகளிர் சமத்துவம், சிறு குடும்ப நெறி பேணல் ஆகியவற்றின் மதிப்பை உணரச் செய்தல்.

மாநில வயது வந்தோர் கல்வித் திட்டங்கள் 139 ஊராட்சி ஒன்றியங்களில், ஊக்குநர்கள், மேற்பார்வையாளர்கள், திட்ட அலுவலர்கள் ஆகியோரின் துணை கொண்டு இயங்கி வருகின்றன.

(ii) 100 சதவீத எழுத்தறிவு: 100 சத எழுத்தறிவு இயக்கம் என்பது மக்கள் சக்தியையும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியையும் திரட்டி மக்கட்கு எழுத்தறிவூட்ட திட்டமிடப்பட்டதாகும். 100 சதவீத எழுத்தறிவை அடைந்து, மாநிலத்தில் 1995ஆம் ஆண்டு முடிவுக்குள் எழுத்தறிவின்மையை அறவே ஒழிக்க அரசு முடிவு செய்துள்ளது. இவ் வயது வந்தோர் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்த ஆசிரியர்கள், நாட்டு நலப் பணித் திட்டத் தொண்டர்கள், கற்ற இளைஞர் கள், பிற துறைப் பணியாளர்கள் அனைவரையும் இம்மக்கள் இயக்கம் ஈடுபடுத்தும். தமிழ்நாடு மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் இது படிப்படியாக நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனைச் செயல்படுத்திடத் தேவை யான நிதியினை இந்திய அரசும், தமிழ்நாடு அரசும் 2:1 என்ற விகிதத்தில் ஏற்கும். தற்போது இத் திட்டம் காமராசர், பசும் பொன் முத்துராமலிங்கத்தேவர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 15-35 வயது பிரிவினரின் 5.7 லட்சம் பேருக்கு எழுத்தறிவு அளிக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டம் மாவட்ட எழுத்தறிவுக் குழு என்னும் பதிவு பெற்ற அமைப்பில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இவ் வமைப்பின் தலைவர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆவார். இத் திட்டத்திற்கான நிதி மைய, மாநில அரசுகளால் நேரடி யாக இக்குழுவுக்கு அளிக்கப்படுகிறது. இத் திட்டத்தின்படி இம்மாவட்டங்களில் உள்ள மக்கள் அனைவரும் 12 மாதங் களில் எழுத்தறிவு பெற்று விடுவர். இவ்வாண்டு இத்திட்டத்தை மதுரை, அண்ணா, கன்னியாகுமரி, தஞ்சாவூர், காயிதேமில்லத் மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்தத் திட்ட மிடப்பட்டுள்ளது. 1992-93இல் கோயம்புத்தூர், திருநெல்வேலி கட்டபொம்மன், பெரியார், வட ஆற்காடு—அம்பேத்கார், தென்னார்க்காடு, சேலம், தர்மபுரி ஆகிய ஏழு மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். வரும் ஆண்டுகளில் பிற மாவட்டங்களிலும் இத் திட்டம் செயல்படுத்தப்பட்டு மாநிலம் முழுவதும் 100 சத எழுத்தறிவு இலக்கு எய்தப் பெறும். இம்மாநிலத்தில் 1995 முடிவில் எழுத்தறிவில்லாத 70 இலட்சம் பேர்கள் எழுத்தறிவு பெற்றவர்களாக மாற்றப்படுவதுடன் ரூ. 57 கோடி செலவில் 100 விழுக்காடு எழுத்தறிவு அளிக்கப்படும் சாதனை எய்தப்படும்.

(iii) சமுதாயப் பங்கேற்பு:—

(அ) தொண்டு நிறுவனங்கள்: வயது வந்தோர் கலவியை யும் பள்ளிசாராக் கல்வியையும் பரப்புவதில் தொண்டு நிறுவனங் கள் முக்கிய பங்கேற்கின்றன. மைய அரசு உதவி பெற்று, அவை வயதுவந்தோர் கல்வி, பள்ளிசாராக் கல்வி மையங்களை நடத்தி வருகின்றன.

(ஆ) பல்கலைக் கழகங்களும் கல்லூரிகளும்: எழுத்தறி வின்மையை நீக்குவதில் மாணவ இளைஞர்களைப் பங்குறச் செய்வது என்பது ஒரு கொள்கையாக ஏற்கப்பட்டுள்ளதால்,

பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும் தத்தம் மாணவர்கள் மூலம் வயது வந்தோர் கல்வித் திட்டங்களைப் பல்கலைக் கழக மானியக் குழுவின் நிதியுதவி பெற்று நிறைவேற்றி வருகின்றன.

(இ) நாட்டு நலப் பணித் தொண்டர்கள்: மேனிலைப் பள்ளிகளில் உள்ள நாட்டுநலப் பணித்திட்ட அமைப்புகளும் ''ஒவ்வொருவரும் மற்றொருவருக்குக் கற்பிக்கும்'' நோக்குடன் இவ்வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் ஈடுபடுத்தப்படுகின்றன.

(iv) ஊரகச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டம்: இத் திட்டத்தில் ஊரகப் பகுதிகளில் வாழும் 15-35 வயது பிரிவில் உள்ள எழுத்தறிவற்றோர் பயன்பெறுகின்றனர். மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய 27 திட்டங்களில் திட்டத்திற்கு 300 மையங்கள் வீதத்தில் 8,100 மையங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. இத் திட்டம் இந்திய அரசு வகுத்துள்ள முறைப்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போதுள்ள முறை இந்திய அரசினால் புணரமைக்கப்பட்டுள்ளது. அம்முறை இந்நிதியாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும். எல்லாத் திட்டங்களும் மைய அரசின் நிதியுதவியுடன் நடைபெறுகின்றன. புதிய முறையில் ஒவவொரு திட்டமும் மேலும் நல்ல மேற்பார்வைக்கும், முன்னேற்றமான செயல்பாடுகளுக்கும் இசைவாக 300 மையங்களுக்குப் பதிலாக 100 மையங்களைக் கொண்டிருக்கும்.

(v) தொடர்கல்வி நிலையங்கள் :— இது, வயது வந்தோர் கல்வி மையங்களின் மூலம் புதிதாக கற்றோரின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு அமைந்த தொடர் கல்வி அமைப்பு ஆகும். சுமார் 5,000 மக்கள் தொகையுடைய நான்கைந்து சிற்றூர்கள் அடங்கிய பகுதியில் தொடர் கல்வி நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. உள்ளூரில் உள்ள தொண்டர்கள் மூலம் தொடர்கல்வி நிலையங்கள் நிர்வகிக்கப்படுகின்றன. இவை கீழே காணும் நோக்கங்களுடன் செயல்பட்டு வருகின்றன (1)எண்ணறிவு, எழுத்தறிவு மேம்பாட்டுக்காக மாலை நேர வகுப்புகள் (2) நூலகமாகச் செயல்படுதல் (3) ஏற்ற நாளேடுகள், பத்திரிகைகள் கொண்ட வாசகசாலை (4) பொது சிக்கல்கள் பற்றிக் கலந்துரையாட விவாதக்குழு (5) விளையாட்டு, வீரதீரச் செயல்கள் (6) பொழுது போக்கு, பண்பாட்டுச் செயற்பாடுகள் (7) பல திறப்பட்ட வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய செய்திகளை அறிவதற்கான பலகனி (8) வானொலி, டேப் ரெகார்டர் ஆகியவற்றைக்கொண்ட செய்தி மையம்.

மாநிலத்தில் ஊரகச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டப் பகுதிகளில் 1,013 தொடர் கல்வி நிலையங்கள் செயல்படுகின்றன இவை வயதுவந்தோர் கல்வி மையங்கள் அமைந்துள்ள நடுப் பகுதிகளில் அமைந்துள்ளன. மேலும் 350 தொடர்கல்வி நிலையங்கள் மைய அரசின் நிதியுதவியுடன் தொடங்கப்படும்.

(vi) திறன்வளர் திட்டங்கள்:—இளைஞர்களின் தொழில் நுட்பத் திறனை வளர்க்க உழைப்போர் பல்நோக்குக் கல்வி நிறுவனங்கள் (ஷிராமிக் வித்யா பீட்), சென்னை, திருச்சி, மதுரை ஆகிய இடங்களில் 1982 முதல் செயல்பட்டு வருகின்றன. உழைப்போரும் அவர்தம் மக்களும் தம் தொழிலில் தற்காலத் திறன் வளர்ச்சி பெறுதற்கு உதவியாகக் குறுகிய, நீண்டகாலப் பயிற்சிகளை நடத்தி வருகின்றன. நீண்டகால, குறுகிய பயிற்சிகள் பின் வருமாறு,

நீண்டகாலப் பயிற்சிகள் :

வீட்டு மின் இணைப்பு, மோட்டார் பம்ப் செட் செப்பனிடல், தட்டச்சு, திரையச்சு, சுவரொட்டிகள் தயாரித்தல், வானொலி பழுது பார்த்தல், தொலைக் காட்சிப் பெட்டி பழுதுபார்த்தல் முதலியன.

குறுகிய காலப் பயிற்சி :

சோப் தயாரித்தல், தையல் வேலை, சலவைத் தூள், ஷாம்பூ, ஊதுவத்தி செய்தல்.

இதுவரை 4,645 குறுகிய கால, நீண்ட காலப் பயிற்சிகள் நடைபெற்றுள்ளன. இவற்றின் மூலம் 1,43,000 பேர் பயன் பெற்றுள்ளனர். இவர்களுள் 1,22,000 பேர் பெண்கள், 38,000 பேர் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினர். 1991—92 இல் 10,000 பேர் பயனுறும் வகையில் இதே போன்ற பயிற்சிகளும் நடத்தப்படும். இந்நிறுவனங்களுக்கான செலவு முழுவதையும் இந்திய அரசே ஏற்கிறது.

(vii) பள்ளிசாராக்கல்வித்திட்டம்.—6—14 வயது பிரிவைச் சார்ந்த பள்ளிப்படிப்பைப் பாதியில் விட்டவர்கள், பள்ளிக்கே செல்லாதவர்கள் போன்ற முறையான கல்விக்கு வாய்ப்பு அற்றவர்கள் நலனுக்கென அமைந்தது பள்ளிசாராக் கல்வித் திட்டம். இது அனைவர்க்கும் தொடக்கக் கல்வி என்ற திட்டத்தின் ஒரு பகுதியாகும். இதில் எழுத்தறிவுக்கும், எண்ணறிவுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. சென்னையில் குடிசைப் பகுதியிலும் சிவகாசியில் தொழிற்சாலைப்பகுதியிலும் பள்ளிப் படிப்பைப் பாதியில் விட்ட சிறுவர்களுக்கென இத்திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் சேர்க்கப்பட்ட சிறுவர்கள் மூன்றாண்டு காலம் தொடர்ந்து அதே மையத்தில் படித்து, 5 ஆம் வகுப்பு கல்வித் தகுதியை அடைகிறார்கள். இத்திட்டத்திற்கான செலவை மாநில அரசும் மைய அரசும் 50:50 என்னும் விகிதத்தில் ஏற்கின்றன. மாலநிலத்தில் மேலும் இத்தகைய எட்டு திட்டங்களைத் தொடங்க அரசு ஆலோசித்து வருகிறது.

4. மாநில பள்ளிசாராக் கல்வித் திட்டம் (S.N.E.P.)

1991-92-ல் இவ்வரசு ''மாநில பள்ளி சாராக் கல்வித் திட்டம்'' என்ற ஒரு சிறப்பான ஒருங்கிணைந்த பள்ளிசாராக் கல்வித்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி 1.5 இலட்சம் படித்து வேலையில்லாத இளைஞர்களைப் பயன்படுத்தி, படிப்பை இடையில் நிறுத்திய 15 இலட்சம் பேர்கள் கல்வியறிவு பெறும் வாய்ப்பை மீண்டும் பெறுவர். இவ்விளைஞர்கள் ஒவ்வொருவரும் 10 குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்பர். ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ. 100 வீதம் ஆண்டொன்றுக்கு ரூ. 1,000 இவ்விளைஞர்கள் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படும். கல்வி கற்கும் குழந்தைகளுக்குத் தேவையான புத்தகங்களும் கல்விச் சாதனங்களும் இலவசமாக அளிக்கப்படும்.

5. பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்:—

1986 முதல் ஐந்து பழங்குடிசார் திட்டப் பகுதிகளில், பழங்குடி மக்கள் மேம்பாட்டுக்கென மாநில அரசு, மாநில நிதிகளைக் கொண்டு ஒரு தனித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. தற்போது இத்திட்டம் சேலம் மாவட்டத்தில் கொல்லிமலை, ஏற்காடு பகுதிகளிலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் கல்ராயன்மலைப் பகுதியிலும், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் ஜவ்வாது மலைப் பகுதியிலும், திருச்சி மாவட்டத்தில் பச்சைமலை பகுதியிலும் இயங்கி வருகிறது. ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் 15–35 வயதுக்கு உட்பட்ட 20 வயது வந்தோர்க்கு ஒரு மையம் என, 20 வயதுவந்தோர் கல்வி மையங்கள் நடைபெற்று வருகின்றன. இதே பகுதிகளில் பள்ளிசாராக் கல்வி மையங்களும் நடைபெற்று வருகின்றன. நடப்பு ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

6. டானிடா திட்டம் (அயல் நாட்டு உதவியுடன் கூடிய திட்டம்)

தமிழ் நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் வாழும் மீனவர்களுக்கு எழுத்தறிவு நல்கிட இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இது இந்திய அரசுக்கும் டேனிஸ் அரசுக்குமான இருவழி ஒப்பந்த அடிப்படையில் அமைந்த வெளிநாட்டு உதவி பெறும் திட்டமாகும்.

இத்திட்டம் செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் கேளம்பாக்கம், திருவொற்றியூர் ஆகிய இரண்டு இடங்களிலும் முன்னோடித் திட்டமாக இது செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்தில் மேலும் ஆறு திட்டங்கள் தொடங்கப்படும்.

VI விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் இளைஞர் நலன்.

விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் பணிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் இளைஞர் விளையாட்டுப் பயிற்சித்துறை 1979-ல் நிறுவப்பட்டது. மேலும், பொது நிறுவனத் துறையில் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம், முன்பு செயல்பட்டு வந்த தமிழ்நாடு மாநில விளையாட்டு மன்றத்திற்குப் பதிலாக 1984-ல் நிறுவப்பட்டது. கீழ்க்குறிப்பிட்ட நோக்கங்களைக் கொண்டு இந் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன:—

(அ) அடிப்படை கள வசதிகளை நமது மாநிலத்தில் நிறுவுதல்;

(ஆ) விளையாட்டுத் திறன்களை வெளிக்கொணர்ந்து தேசிய மற்றும் உலகப் புகழ் வாய்ந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கி பேணிக் காத்தல்:

(இ) தரமிக்க மாநில விளையாட்டு கழகங்களுக்கு நிதியுதவி அளித்தல்; மற்றும்

(ஈ) நாட்டு நலப் பணித் திட்டம் போன்ற திட்டங்களின் வாயிலாக இளைஞர் நலனை உயர்த்துதல்.

2. கீழ்க்குறிப்பிட்ட உலகப் புகழ் வாய்ந்த விளையாட்டு வீரர்களை நமது தமிழ்நாடு மாநிலம் உருவாக்கிய பெருமை பெற்றுள்ளது:—

திரு. ரமேஷ்கிருஷ்ணன்	...	டென்னிஸ்.
திரு. ஆனந்த்	...	சதுரங்கம்.
திரு. ஸ்ரீகாந்த்	...	மட்டைப்பந்து.
திரு. பாஸ்கரன்	...	வளைகோல் பந்து
திரு. ஞானசேகரன்	...	தடகளம்
திரு. முத்துசாமி	...	பளு தூக்குதல்.

3. அடிப்படை கள வசதிகள்.—ஒவ்வொரு மாவட்ட தலைநகரங்களிலும் விளையாட்டு வசதிகளை சிறப்புறச்செய்ய திறந்த வெளி விளையாட்டு அரங்கங்கள், நீச்சல் குளங்கள், உள் விளையாட்டு அரங்கங்கள் போன்றவற்றைப் பெற்றிருத்தல் அரசின் கொள்கையாகும். இக்கொள்கைக்கிணங்க, தற்பொழுது 11 வெளி விளையாட்டு அரங்கங்கள், 4 உள் விளையாட்டு அரங்கங்கள், 4 நீச்சல் குளங்கள் ஆகியவை நமது மாநிலத்தில் உள்ளன. விளையாட்டுத் திடல்கள், விளையாட்டு அரங்கங்கள், நீச்சல்

குளங்கள் போன்ற அடிப்படை கள வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் மைய அரசு நிதியுதவி அளித்து வருகிறது. 1979 முதல் 1988 வரை இதுபோன்ற 259 திட்டங்களுக்காக மைய அரசின் நிதி வசதி பயன்படுத்தப்பட்டுள்ளது. மைய மற்றும் மாநில அரசின் நிதியுதவியுடன் பல்நோக்குகளைக் கொண்ட விளையாட்டு அரங்கங்கள் ஈரோடு மற்றும் தூத்துக்குடி மாவட்ட தலைநகரங்களில் உருவாக்கப்பட்டு வருகிறது. சுமார் 8 ஏக்கர் நிலப் பரப்புகளை தன்னகத்தே கொண்டு விளங்கும் இவ்வியக் கத்திற்கு பின்புறம் உள்ள நேரு பூங்கா வளாகம் விளையாட்டு வீரர்களுக்கு அடிப்படை பயிற்சிகளை அளிக்கும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. 1.23 ஏக்கர் பரப்பு உள்ள நிலம் உள் விளையாட்டு அரங்கங்களைக் கட்டும் நோக்கந்துடன் திருவான் மியூரில் வாங்கப்பட்டுள்ளது. வேலூரில் பளு தூக்கும் பள்ளி ஒன்று நிறுவப்பட உள்ளது.

4. விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் விளையாட்டு விடுதிகள்: திறன் மிக்க பள்ளிச் சிறுவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு மூன்று விளையாட்டுப் பள்ளிகள் மற்றும் மூன்று விளையாட்டு விடுதிகள் மாணவர்களுக்காகவும், ஒரு விளையாட்டுப் பள்ளி மாணவியர்களுக்காகவும் செயல்பட்டு வருகிறது. 395 விளை யாட்டு வீரர்கள், வீராங்கனைகள் கடந்த ஆண்டுகளில் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளனர். 1991—92ல் ஒய்.எம்.சி.ஏ. விளை யாட்டுப் பள்ளி—சென்னை, மாருதி கல்லூரி விளையாட்டுப் பள்ளி-கோவை, நெய்வேலி நிலக்கரி நிறுவன விளையாட்டுப் பள்ளி-நெய்வேலி, மற்றும் ஓ.சி.பி.எம். பெண்கள் மேல் நிலைப் பள்ளி—மதுரை ஆகிய விளையாட்டுப் பள்ளிகளிலும், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி விளையாட்டு விடுதிகளிலும் 650 மாணவ மாணவியருக்கு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

5. பள்ளிகளில் விளையாட்டுக்கள்.—மாநிலத்தில் உள்ள திறமை மிக்க இளைஞர்களை தெரிந்தெடுத்து பயிற்சியளிக்கும் பல புதுமையான திட்டங்களை நமது அரசு மேம்படுத்தி வருகிறது. விளையாட்டுத் திறன் மிக்க பள்ளிச் சிறுவர்களை தெரிந்தெடுத்து ஊக்குவிக்கும் பொருட்டு கீழ்க்காணும் திட்டங் கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன :—

(அ) மிக இளமையில் தெரிந்தெடுத்தல் ;

(ஆ) இளமையில் தெரிந்தெடுத்தல் ;

(இ) குடியரசு தினப் போட்டிகள் ;

(ஈ) பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் ; மற்றும்

(உ) இந்திய பள்ளி விளையாட்டு இணையப் போட்டிகள்.

தமிழ் நாட்டளவில் பள்ளிகளில் உள்ள மாணவ மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் அகில இந்திய அளவிலான பள்ளி விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு

வெற்றி வாகையங்களை கூடைப்பந்து, கையுந்துபந்து மற்றும் பூப்பந்து போன்ற விளையாட்டுக்களில் பெற்று வந்துள்ளனர். 1989—90-ல் தமிழகப் பள்ளி அணியினர் அகில இந்திய அளவிலான பள்ளிகளுக்கிடையேயான போட்டிகளில் கூடைப் பந்து மற்றும் கையுந்துபந்து முதலியவற்றில் வெற்றி வாகை சூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

6. ஊரக இளைஞர்களுக்கான விளையாட்டு.— ஊரக அளவில் இளைஞர்களிடையே பொதிந்துள்ள விளையாட்டுத் திறமையை வளர்த்துக் கொள்ளவும், அவர்களை போட்டி களில் பங்கேற்று வெற்றிப் பெறச் செய்திடவும், தமிழ் நாடு அரசு இவர்களை ஊக்குவித்து அகில இந்திய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள ஒவ்வொரு ஆண்டும் அணியினை அனுப்பி வருகிறது. இத்தகையப் போட்டிகள் கிராம அளவிலான தகுதி வாய்ந்த இளைஞர் களை தடகளம் மற்றும் இதர விளையாட்டு களில் அடையாளம் காண வாய்ப்பு ஏற்படுத்தியது.

7. மகளிர் விளையாட்டுப் போட்டிகள்.—மகளிருக்கும் விளையாட்டுப் போட்டிகளில் சம வாய்ப்பு அளித்து ஊக்கப் படுத்திட ஊராட்சி, ஒன்றிய, மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவ்லான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப் பட்டு வருகின்றன. மேலும், பள்ளி மாணவியருக்கென ம்துரையில் ஒரு விளையாட்டுப் பள்ளியும், நாகர்கோவிலில் பெண்களுக்காக தனியாக விளையாட்டுத் திட்ட முன்னேற்ற மையமும் அமைக்கப்பட்டுள்ளது. 1975 முதல் தமிழ்நாடு மகளிர் அணியினர் தேசிய அளவிலான மகளிர் போட்டிகளில் கூடைப் பந்து மற்றும் தடகள விளையாட்டுக்களில் வெற்றி வாகை சூடி வருகின்றனர். அகில இந்திய அளவிலான ஊரக விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு தடகள மகளிர் அணியினர் வெற்றி வாகை பெற்றுள்ளனர். மேலும், 1991-ல் புது டில்லியில் நடைபெற்ற தேசிய மகளிர் விசையாற்றல் பளு தூக்கும் போட்டிகளில் தமிழ் நாட்டைச் சேர்ந்த செல்வி சாமுண்டீஸ்வரி 3 பதக்கங்களைப் பெற்றுள்ளார்.

8. சிறப்பு மிக்க விளையாட்டு வீரர்களுக்கு ஊக்க உதவித் தொகை.—(அ) தேசிய மற்றும் அகில உலக அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற தமிழ் நாட்டைச் சேர்ந்த வீரர்களுக்கு ரொக்க விருது வழங்கப்படுகிறது. இந்திய வளைகோல் பந்து அணியின் தலைவரான திரு. பாஸ்கரன் அவர்களுக்கு சென்னையில் ஒரு வீடு வழங்கப்பட்டது. கிரிக்கெட் டெஸ்ட் பந்தய வீரரான திரு. ஸ்ரீகாந்த் அவர்களுக்கு சென்னையில் வீட்டு மனை ஒன்று வழங்கப்பட்டது.

(ஆ) தேசிய மற்றும் உலக அளவிலான விளையாட்டுக் களில் அதிக எண்ணிக்கையில் விளையாட்டு வீரர்களை உருவாக்கிட, பயிற்றுநர்களை தூண்டுகோலாக அமையச் செய்ய அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது.

(இ) சிறந்த விளையாட்டு வீரர்களை தத்து எடுத்தல் என்ற திட்டத்தின்கீழ் வறுமையில் உள்ள விளையாட்டு வீரர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பிரதி மாதம் ரூ. 500 வீதம் 10 மாதங்களுக்கு சத்துணவுக்காகவும், விளையாட்டு உபகரணங்களுக்காக ரூ. 1,500-ம் வழங்கப்படுகிறது.

(ஈ) மாணவர்களிடையே விளையாட்டுகளில் ஊக்குவிப்பதற்காக முதல் மற்றும் இரண்டாவது இடத்தைப் பெறும் மாணவ மாணவியருக்கு முறையே ரூ. 600 மற்றும் ரூ. 400 பொங்கல், குடியரசு தின மற்றும் பாரதியார் தின விளையாட்டு போட்டிகளில் வழங்கப்படுகிறது.

(உ) வறுமையில் வாடுகின்ற சிறந்த 50 விளையாட்டு வீரர்களுக்கு மாதம் ரூ. 75 வீதம் ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.

9. <u>இளைஞர் நலப் பணி</u>.—வீரதீர செயல்களான காற்றோடு பறத்தல், குன்றேறுதல், மலையேறுதல், நீண்ட தூர சைக்கிள் பயணங்கள், காற்றோடிசைந்து படகு விடுதல் போன்றவைகளை இத்துறை ஊக்குவிக்கிறது. ஆண்டுதோறும் இளைஞர் நலப் பணிகள் கிராம அளவில் நடத்தப்படுகின்றன. நாட்டு நலப் பணித் திட்டத்தின்கீழ் தொண்டர்கள், திட்ட அலுவலர்கள், திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் முதலியோருக்கு மாவட்ட அளவில் விருதுகள் வழங்கப்படுகிறது. நாட்டு நலப் பணித் திட்டத்தை சிறப்பாக நடத்துகின்ற கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்களுக்கு சுழற் கோப்பை வழங்கும் திட்டமொன்று அமல்படுத்தப்படவுள்ளது.

10. <u>விளையாட்டுக்களில் நேர்த்தியான தன்மையை அடைந்திடவும், போதுமான அடிப்படை வசதிகளை உருவாக்கிடவும் இத்துறை கீழ்க்கண்ட வசதிகளை மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தி வருகிறது :—</u>

1. இந்திய விளையாட்டு வளர்ச்சிக் குழுமத்தின் கீழ் இவ்வலுவலகத்தில் விளையாட்டு விடுதி ஒன்று இயங்கி வருகிறது.

2. சேலத்தில் தடகளம், பளு தூக்குதல், கூடைப்பந்து, கால்பந்து முதலிய விளையாட்டுக்களில் ஊக்கமளித்திட விளையாட்டு திட்ட முன்னேற்ற மையம் ஒன்றும், பெண்களுக்காக நாகர்கோவிலில் தடகளம் மற்றும் கூடைப்பந்து விளையாட்டுக்களில் பயிற்சியளித்திட ஒரு மையமும் இயங்கி வருகிறது. உதகமண்டலத்தில் ஒரு கிளை நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. 1993-ல் நடைபெறவுள்ள 10-வது ஜவஹர்லால் நேரு தங்கக் கோப்பைக்கான கால்பந்து போட்டிகளை தமிழ் நாடு அரசு நடத்திட சென்னையில் உள்ள நேரு விளையாட்டரங்கத்தினை நவீனப்படுத்த உள்ளது.

11. தேசிய மாணவர் படை (N.C.C.).—(i) தமிழ் நாட்டு தேசிய மாணவர் படை இயக்ககத்தின் தலைமையகம் சென்னையில் உள்ளது. அதன் கட்டுப்பாட்டின் கீழ் சென்னையில் - இரண்டும், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக வட்டாரத் தலைமையிடங்கள் ஐந்து அமைந்துள்ளன. தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படையில் சேர அனுமதித்துள்ள மாணவர் எண்ணிக்கையும் பிரிவுகளும் வருமாறு :

அட்டவணை 20.

	அலுவலர்கள்.	மாணவர்கள்.
(1)	(2)	(3)
முதுநிலைப் பிரிவு (மாணவர்)	225	17,370
இளநிலைப் பிரிவு (மாணவர்)	624	61,350
முதுநிலைப் பிரிவு (மாணவியர்)	47	3,200
இளநிலைப் பிரிவு (மாணவியர்)	53	5,200
மொத்தம் ..	949	87,120

(ii) தேசிய மாணவர் படைக்கான செலவினை மத்திய அரசும், மாநில அரசும் ஏற்றுக்கொள்கின்றன. அடிப்படை மாணவ/மாணவியருக்கான பல வகை பயிற்சி முகாம்களுக்கான செலவில் பாதியை மைய அரசும், பாதியை மாநில அரசும் ஏற்றுக்கொள்கின்றன.

1991—92 ஆம் ஆண்டிற்கு தேசிய மாணவர் படைக்கான செலவினம் ரூ. 4.49 கோடி தேசிய மாணவர் படை இயக்ககங்களுக்கு இடையேயான போட்டிகள் நடத்தப் படுகின்றன. இவை டெல்லியில் நடைபெறும் குடியரசு தின அணிவகுப்பில் பதாகை விருது பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்துகிறது. சனவரி 1991-ல் புதுடில்லியில் நடைபெற்ற குடியரசுதின அணிவகுப்பிலும் மற்றும் பிரதமரின் திரளணியிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 111 மாணவர்கள் பங்கேற்றனர்.

இராணுவத்தில் அதிகாரிகளாகச் சேர்பவர்களைத் தெரிந்தெடுப்பதற்காக மைய அரசுத் தேர்வாணைக் குழு நடத்தும் தேர்வில் கலந்துகொள்ளும் தமிழக தேசிய

மாணவர் படையினருக்குச் சிறந்த பயிற்சி அளிப்பதற்காகப் பயிற்சி அதிகாரி ஒருவர் தலைமையில் '' இராணுவ அதிகாரி தேர்வுக்கான முன் பயிற்சிப் பிரிவு '' ஒன்றும் அமைக்கப் பட்டுள்ளது.

12. சாரணர் சாரணியர்.—தொண்டுள்ளம் கொண்ட பாரத சாரண சாரணியர் இயக்கம் தமிழ்நாட்டில் எல்லா வகைப் பள்ளிகளிலும் நடைபெற்று வருகின்றது. தமிழ் நாட்டில் தற்போது சாரணர் 0.74 லட்சமும், சாரணியர் 0.43 லட்சமும் உள்ளனர். இவ்வெண்ணிக்கை இந்தியா அனைத்திலுமுள்ள சாரண சாரணியர் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்காகும். இந்த இயக்கம் 4,303 சாரண ஆசிரியர்கள் மற்றும் 1,311 சாரண ஆசிரியைகள் ஆகியோரைக் கொண்டு 3,768 பள்ளிகளில் திறம்பட செயல்பட்டு வருகிறது. இந்நாட்டின் வருங்காலக் குடிமக்களாகிய மாணவர்களிடத்தில் நன்னடத்தையை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

13. நாட்டு நலப் பணித் திட்டம் (N.S.S.).— சமூக சேவையை மாணவர்களிடையே வளர்க்கும் எண்ணத்துடன் நாட்டு நலப் பணித் திட்டம் பள்ளி, கல்லூரி மற்றும் தொழில் நுட்ப கல்லூரிகளில் தொடங்கப்பட்டது. மத்திய அரசு மற்றும் மாநில அரசின் 7 : 5 என்ற விகிதத்தில் நிதியுதவிப் பெற்று, இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கடந்த ஆண்டு வரையிலும் 1,40,000 மாணவர்களைக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இந்த நிதி ஆண்டில் மாணவர்களின் எண்ணிக்கை 1,50,000 ஆக உயர்த்தப்பட்டது. நமது நாட்டிலேயே இத்திட்டம் நமது மாநிலத்தில்தான் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

VII ஆசிரியர் தேர்வு வாரியம்.

தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் வரம்பிற்குட்பட்ட பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்த ஆசிரியர் பணியிடங்களுக்கு தேர்வு செய்ய தனியாக ஒரு ஆசிரியர் தேர்வு வாரியம் 1988-ம் ஆண்டு ஜூன் மாதம் அமைக்கப்பட்டது. அரசு உயர்நிலை, மேல் நிலைப் பள்ளிகளில் முறையான பணியிடங்களுக்கு ஆசிரியர் களைத் தேர்வு செய்ய இவ்வாரியம் அமைக்கப்பெற்றது. இ.ஆ.ப. அலுவலர் ஒருவரைத் தலைவராகவும், பள்ளிக் கல்வி இணை இயக்குநர் பணி நிலையில் ஒரு உறுப்பினரையும் மற்றும் உறுப்பினர்-செயலர் ஆகியவர்களையும், தேவையான இதர அலு வலகப் பணியாளர்களையும் கொண்டது. இவ்வாரியம் பள்ளிக் கல்வி இயக்குநரால் அளிக்கப்படும் தேவைப் பட்டியலின் அடிப் படையில் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் உள்ள தகுதி வாய்ந்த நாடுநர்களின் பட்டியல் பெற்று நேர்முகத் தேர்வு நடத்தி தகுதியான ஆசிரியர்கள் தேர்வுக் குழுவினால் தேர்ந் தெடுக்கப்படுவர். இந்த தேர்வுக் குழுவில் தேர்வு வாரியத் தின் தலைவர், உறுப்பினர், உறுப்பினர்-செயலர் ஆகியோரோடு சம்பந்தப்பட்ட பாட நிபுணர் ஒருவரும் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநரின் பிரதிநிதி ஒருவரும் இருப்பார். இந்த வாரியம் 1988-ல் தொடங்கியதிலிருந்து பள்ளிக் கல்வித் துறைக்காக 4,009 ஆசிரியர்கள் இவ்வாரியத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டுள் ளனர்.

1990—91-ம் ஆண்டில் 677 தேர்வர்கள் (காத்திருப்போர் பட்டியல் உள்பட) முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு தகுதி மற்றும் இனவாரி சுழற்சி முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1991—92-ம் ஆண்டில் (1991 ஆகஸ்டு மாதம் வரை) 335 தேர்வர்கள் (காத்திருப்போர் பட்டியல் உள்பட) முதுகலைப் பட்டதாரி மற்றும் பட்டதாரி ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள் ளனர்.

பள்ளிக் கல்வி மட்டுமல்லாது கல்லூரிக் கல்வி, சட்டக் கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வி ஆசிரியர்களையும் தேர்ந் தெடுக்க, முதுநிலை இ.ஆ.ப. அலுவலர் ஒருவர் தலைவராகவும், இயக்குநர் நிலையில் இரு உறுப்பினர்கள் (ஒருவர் பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்தவராகவும் மற்றொருவர் கல்லூரிக் கல்வித் துறையைச் சார்ந்தவராகவும்) மற்றும் இணை இயக்குநர்/கூடுதல் இயக்குநர் நிலையில் பள்ளிக் கல்வி/ கல்லூரிக் கல்வி/தொழில் நுட்பக் கல்வி ஏதேனும் ஒன்றைச் சார்ந்த ஒரு உறுப்பினர்-செயலர் ஆகியோரைக்கொண்டு ஆசிரியர் தேர்வு வாரியம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

VIII தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் I முதல் XII ஆம் வகுப்பு வரையில் தரமான பாடநூல்களை நியாயமான விலையில் வெளியிடுகிறது. இப்பாடநூல்களை மாநிலம் முழுவதும் உள்ள பள்ளி மாணவர்களுக்கு கல்வி ஆண்டு தொடங்குவதற்கு முன்பாகவே கிடைக்குமாறு வழங்குகிறது. இந்நிறுவனம் பயிற்சி ஏடுகளையும் தயாரித்து அரசு நிர்ணயிக்கும் சலுகை விலையில் வழங்குகிறது. 1991—92 ஆம் கல்வி ஆண்டிற்காக, இந்நிறுவனம் 305 தலைப்புகளில் 457 இலட்சம் பாடநூல் படிகளை அச்சிட்டது. இவற்றால் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 118 இலட்சம். இலவசப் பாடநூல் வழங்கும் திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் ரூ. 18.30 கோடி பெறுமானமுள்ள 3.35 கோடி பாடநூல் படிகளை வழங்கியுள்ளது. இவற்றால், 1 முதல் 8ஆம் வகுப்புவரை பயிலும் 64 இலட்சம் மாணவர்கள் பயனடைகிறார்கள். மாவட்ட அளவில் பள்ளிக் கல்வித்துறை அலுவலர்களால் வெற்றிகரமாக இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிறுவனம் 67 தலைப்புகளில் ஆசிரியர் கையேடுகளையும் அச்சிடுகிறது. புதிய கல்விக் கொள்கையின்படி வெளியிடப்பட்டுள்ள புதிய வரிசைப் பாடநூல்களை நன்கு அறிய ஆசிரியர்களுக்கு இக்கையேடுகள் வழங்கப்படுகின்றன. 55 வட்டக்கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கங்கள், 2,099 கூட்டுறவுச் சில்லறைக் கடைகள் மற்றும் 1,006 தனியார் சில்லறைக் கடைகள் பாடநூல் விநியோகப் பணியினை மேற்கொள்கின்றன.

குறிப்பேடுகளையும் தயாரித்து மாணவர்களுக்கு சீரான விலையில் வழங்கி வருகிறது. 1990—91 ஆம் ஆண்டில், ரூ. 260 இலட்சம் பெறுமானமுள்ள குறிப்பேடுகள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி நலத்துறை இயக்குநர் வழியாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மாநிலத்திலுள்ள சமூகத்தின் நலிந்த பிரிவினரின் கல்வி மேம்பாட்டுக்கு இந்நிறுவனம் உதவி செய்து வருகிறது.

IX பொது நூலகங்களும் - ஆவணக் காப்பகங்களும்

(1) பொது நூலகங்கள்.

1. தமிழ்நாடு பொது நூலகச்சட்டம் 1948இன்படி பொது நூலகத்துறை கிராமப்பகுதிகள் உள்ளிட்டு, மாநில முழுவதும் நூலகப் பணியினைச் சீரிய முறையில் செய்து வருகிறது. 1991—92 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் இத் துறைக்கென ரூ. 905 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. கன்னிமாரா பொது நூலகம்: சென்னையிலுள்ள கன்னிமாரா பொது நூலகம் மாநிலத்தின் மைய (தலைமை) நூலகமாகும். இந்தியாவில் வெளியிடப்படும் அனைத்து வகை நூல்களிலும் நாளேடுகளிலும் மற்றும் பருவ ஏடுகளிலும் ஒவ்வொன்றிலும் ஒரு பிரதியை இந்நூலகம் மைய அரசின் பொது நூலகங்களுக்கு நூல்கள் விநியோகச் சட்டம் 1954ன்படி இலவசமாக பெறுகிறது. இந்நூலகத்தில் தற்போது 4.58 இலட்சம் நூல்கள் உள்ளன. மேலும் 47,000 உறுப்பினர்கள் உள்ளனர். பொதுமக்களின் வசதிக்காக நூலகத்தைப் பயன் படுத்துவோர் தேவைக்கும் பயன்பட இந்நூலகத்திற்கென புகைப்பட பிரதி எடுக்கும் கருவி ஒன்று வாங்கி வைக்கப்பட் டுள்ளது. வீடு தேடி நூல் வழங்கும் திட்டம் இந்நூலகச் செயல்பாட்டிலுள்ளது. தொலைக்காட்சி பெட்டி படப்பதிவு நாடாச் சுருள் கருவி மற்றும் கணிப்பொறி இந் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

3. மாவட்ட நூலக ஆணைக்குழுக்கள்: தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948 பிரிவு 5இன்படி ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் நூலக ஆணைக்குழு ஏற்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டதற்கேற்ப தற்போது மாநில அளவில் 21 நூலக ஆணைக்குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் கீழ் மொத்தம் 18 மாவட்ட மைய நூலகங்களும் 1,539 கிளை நூலகங்களும் (நடமாடும் நூலகங் கள் உட்பட) செயல்படுகின்றன. மாநில அளவில் 160.44 இலட்சம் நூல்கள் உள்ளன. மேலும் 19.25 லட்சம் உறுப்பினர் கள் சேர்க்கப்பட்டுள்ளனர். மாவட்ட நூலக ஆணைக்குழுக்களின் கீழ் 3,396 அலுவலர்கள் பணியாற்றுகின்றனர்.

4. நூலக வரி வசூல்: 1990–91 ஆம் ஆண்டில் மாவட்ட நூலக ஆணைக்குழுக்கள் நூலக வரியாக ரூ. 263 இலட்சம் வசூல் பெற்றுள்ளது. சென்ற பத்து ஆண்டுகளில் உள்ளாட்சி நிறுவனங்களில் இருந்து வசூலிக்கப்படும் நூலகவரி ஒரே சீரான முறையில் வளர்ச்சியடைந்துள்ளதைக் காணலாம்.

அட்டவணை-21

வ. எண்.	ஆண்டு.	நூலக வரி வசூல் (ரூபாய் இலட்சத்தில்.)
1	1981—82	148.24
2	1982—83	132.82
3	1983—84	111.82
4	1984—85	144.32
5	1985—86	126.51
6	1986—87	163.14
7	1987—88	163.51
8	1988—89	201.75
9	1989—90	260.51
10	1990—91	263.43

5. நூலக ஆணைக்குழுக்களுக்கு சிறப்பு மான்யம்: நூலக ஆணைக்குழுக்களில் நூலக வரி வருமானம் புத்தகங்கள் வாங்கும் செலவினங்களுக்கு நிதி போதுமானதாக இல்லை. எனவே நிதி நிலைமை சரி இல்லாத நூலக ஆணைக்குழுக்களுக்குப் புத்த கங்கள் வாங்க வசதி செய்யும் பொருட்டு 1991—92 ஆம் ஆண்டிற்கு ரூ. 12 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

6. புகைப்பட பிரதி எடுக்கும் கருவி/தொலைக்காட்சி பெட்டி இணைந்த படப்பதிவு நாடாச் சுருள் கருவிகள்: புகைப்பட பிரதி எடுக்கும் கருவி சென்னை, மதுரை, திருச்சி, கோயம் புத்தூர், வட ஆற்காடு அம்பேத்கார், சேலம் மற்றும் செங்கை எம்.ஜி.ஆர். மாவட்ட மைய நூலகங்களில் படிப்போரின் தேவைக்காக அமைக்கப்பட்டுள்ளன. தொலைக்காட்சி பெட்டியுடன் இணைந்த படப்பதிவு நாடாச்சுருள் கருவிகள் கல்கத்தா இராஜாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளை நிறு வன இணைமான்ய உதவியுடன் அனைத்து மாவட்ட மைய நூலகங்களில் வாங்கி அமைக்கப்பட்டுள்ளன.

7. வழங்கு முனைகள் ஆரம்பித்தல்: 5,000 மக்கள் தொகைக்கும் குறைவாக உள்ள கிராம பகுதிகளில் 1990—91 ஆம் ஆண்டில் 1,000 வழங்குமுனைகள் திறக்க திட்டமிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் பொது மக்களிடமிருந்து (1) வாடகை இல்லா இலவசக் கட்டடம் (2) 5 சென்ட் முதல் 10 சென்ட் இலவச நிலம் (3) நூலகப் பொருட்கள் வடிவில் அல்லது ரொக்கமாக ரூ. 2,000 மற்றும் (4) 100 நூலக உறுப்பினர்கள் ஆகிய வசதிகள் தரப்பட்ட ஊர்களிலேயே இவ் வழங்கு முனைகள் தொடங்கப்பட்டு வருகின்றன.

8. நூலகக் கட்டடங்கள்: மாநில அளவில் உள்ள நூலக ஆணைக்குழுக்களில் இதுவரை 303 நூலக கட்டடங்கள் கட்டப் பட்டு அவைகளில் நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

மேலும் 269 நூலக கட்டடங்கள் ரூ. 2.69 கோடிச் செலவில் கட்டப்பட்டு வருகின்றன. நடப்பு நிதி ஆண்டில் பொது மக்கள் தேவைக்கு 100 நூலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப் படும்.

நூலக வளர்ச்சி மாநாடுகள் இதுவரை 12 மாவட்டங்களில் நடைபெற்றுள்ளன. இந்நூலக வளர்ச்சி மாநாடுகளின் மூல மாக 675 காலிமனைகள் தனியார்களிடமிருந்தும், உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்தும் இலவசமாக பெறப்பட்டுள்ளன. இத்துடன் 868 காலி மனைகளையும் உள்ளாட்சி நிறுவனங்கள் நூலக கட்டடங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்துள்ளன. இக் காலிமனைகளின் மொத்த மதிப்பு சுமார் ரூ. 425 இலட்ச மாகும். பொது மக்களிடமிருந்தும் மக்கட் பற்று உடையவர் களிடமிருந்தும் நூல்கள், பருவ ஏடுகள், மேசை நாற்காலிகள் மின்சார சாதனங்கள், டம்ளர்கள், சுவர் கடிகாரங்கள் இன்ன பிற தளவாடங்கள் சுமார் ரூ. 105 இலட்சம் மதிப்பிற்கு பெறப்பட்டுள்ளன. மேலும் ஒவ்வொரு புரவலர்களிடமிருந்து ரூ. 1,000 வீதம் நன்கொடையாக பெற்று 3,010 புரவலர்கள் சேர்க்கப்பட்டு அதன் மூலம் ரூ. 30.10 இலட்சம் நூலக வளர்ச்சிப் பணிக்காக வசூல் செய்யப்பட்டுள்ளது. நூலகங் களை தத்து எடுக்க முன்வரும் நன்கொடையாளர்களை அரசு வரவேற்கிறது. 1991—92-ஆம் ஆண்டில் 2,000 புரவலர் களைச் சேர்த்து ரூ. 20 இலட்சம் நன்கொடை வசூல் செய்யப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் உள்ளாட்சி நிறு வனங்கள் நூலக கட்டடங்கள் கட்ட 500 காலி மனைகள் அளிக்க ஆவன செய்யும்.

9. <u>உறுப்பினர்கள் சேர்க்கை:</u> மாவட்ட நூலக ஆணைக் குழுக்களின் நூலகங்களில் உறுப்பினர்கள் சேர்க்கை கடந்த 35 ஆண்டுகளில் 15.49 இலட்சம் உறுப்பினர்களே, சேர்க்கப் பட்டு இருந்தனர். நூலகங்களில் படித்த அனைவரையும் உறுப்பினராக்கும் குறிக்கோளின் கீழ் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு 3.76 இலட்சம் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு தற்போது உறுப்பினர்கள் எண்ணிக்கை 19.25 இலட்சத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

10. <u>நூலகவியல் பயிற்சி நிலையம்:</u> நூலகவியல் பயிற்சி நிலையம் ஒன்று பொது நூலக இயக்ககத்தில் செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையம் பயிற்சி பெறா மூன்றாம் நிலை நூலகர்களுக்கு நூலகவியல் பயிற்சி அளிப்பதுடன், முதல் நிலை இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நூலகர்கள் ஆகியவர்களுக்கு மறு பயிற்சி ஆண்டு தோறும் அளித்து வருகிறது.

II. ஆவணக் காப்பகம்.

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் 1909-ஆம் ஆண்டு நிறுவப் பட்டதாகும். 1670-ஆம் ஆண்டு முதல் 1987-ஆம் ஆண்டு வரையிலான அசல் ஆவணங்களைப் பாதுகாக்கும் இக் காப்பகம்

இந்தியாவிலேயே முதன்மையானதும், சிறப்பாக அமையப் பெற்றதுமான தனிப்பெரும் பெருமையை உடையதாகும். இக்காப்பகத்தில் பாதுகாக்கப்படும் ஆவணங்கள் தலைமைச் செயலகத் துறைகள், வருவாய்த் துறை வாரியங்கள் மற்றும் சில துறைத் தலைமை அலுவலகங்களைச் சார்ந்தனவாகும். மேலும், டச்சு, டேனிஷ் மற்றும் மராத்தி மொழி ஆவணங்களும் பாதுகாக்கப்பட்டு வரப்படுகின்றன. இக்காப்பகத்தில் 7, 41, 431 தொகுதிகள் 48, 85, 739 ஆவணக்கோப்புகள் மற்றும் 2,163 கட்டு இதர ஆவணங்கள் ஆகியவை உள்ளன. கடந்த 30 ஆண்டுகளைச் சார்ந்த ஆவணங்கள் இக்காப்பகத்தில் உள்ள இடைநிலை ஆவணக் காப்பகத்தில் தனியே பாதுகாக்கப்படுகின்றன. நடப்பு ஆண்டில், கேட்புக் கடிதங்களின் பேரில் அரசுக்கு 37,430 ஆவணங்கள் வழங்கப்பட்டன. தலைமைச் செயலகத்திலிருந்து திருப்பப்பட்ட 42,752 ஆவணங்கள் உரிய ஆவணக் கட்டுகளில் சேர்க்கப்பட்டன. இக்காப்பகத்தின் முக்கியப் பணிகள் வருமாறு :—

(1) அரசு நிர்வாக இயந்திரத்திற்குத் தேவையான ஆவணங்கள் மற்றும் விபரங்களை வழங்குதல்.

(2) ஆராய்ச்சியாளர்களின் ஆராய்ச்சிக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தருதல்.

(3) சான்றொப்பமிடப்பட்ட அரசிதழ் நகல்களை உரிய கட்டணத்தின்பேரில் பொதுமக்களுக்கு வழங்குதல்.

(4) விஞ்ஞான முறையில் ஆவணங்களை பாதுகாத்தல்,

(5) தேர்ந்தெடுக்கப்பட்ட ஆவணத் தொகுப்பு மற்றும் 'ஆவண அமுதம்' என்னும் காலாண்டு இதழ் ஆகியவற்றைப் பிரசுரித்தல்.

(6) ஆவணப் பராமரிப்பு குறித்த பயிற்சியளித்தல்.

2. பழமை வாய்ந்த, சிதிலமடைந்த ஆவணங்கள் முறையாக செப்பனிடப்பட்டு, பைண்டிங் செய்யப்படுகின்றன. பழைய மூல ஆவணங்களை ஆராய்ச்சியாளர்கள் கையாள்வதைத் தவிர்க்கும் வகையில், இவ்வாணங்களை நுண் நிழற்படம் (Micro Rang) எடுத்து ஆராய்ச்சியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. நடப்பு ஆண்டில் செப்பனிடப்பட்ட மற்றும் லாமினேஷன் செய்யப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை முறையே 72,216 மற்றும் 11,550 தாட்களாகும். நுண்நிழற்பட பிரிவில் 1,95,569 பிரதிகள் எடுக்கப்பட்டு ஆராய்ச்சியாளர்களுக்கு வழங்கியதன் மூலம் ரூ. 4,067 பெறப்பட்டுள்ளது. இது தவிர ஆராய்ச்சியாளர்களுக்கு ஜெராக்ஸ் நகல் வழங்கும் பொருட்டு இயந்திரம் ஒன்றும் உள்ளது. ஜெராக்ஸ் நகல் வழங்கியதன் மூலம் நடப்பு ஆண்டில் ரூ. 14,546 வசூலிக்கப்பட்டுள்ளது, ஆராய்ச்சியாளர்களின்ஆராய்ச்

சிக்காக ஆராய்ச்சிக் கூடத்தில் சிறப்பு வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன. பணி நாட்களில் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் விடுமுறை நாட்களில் காலை 9.45 மணி முதல் மாலை 5.45 மணி வரையிலும் ஆராய்ச்சிக்கூடம் திறந்திருக்கும்.

3. மாவட்ட ஆவணக் காப்பகங்கள் மற்றும் அதன் செயல் பாடுகள்.—மாவட்ட அரசு அலுவலகங்களில் சிதறுண்டு கிடக்கும் வரலாற்று மற்றும் நிருவாகச் சிறப்பு வாய்ந்த ஆவணங்களை மையம் செய்யும் பொருட்டு இதுநாள்வரை, மதுரை, கோவை, கடலூர், திருச்சி மற்றும் சேலம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஆவணக்காப்பகங்கள் அமைக்கப்பட்டு செயல் பட்டு வருகின்றன. இந்த ஐந்து மாவட்ட ஆவணக் காப் பகங்களில் 31—6—1991 உடன் முடிவடைந்த காலாண்டு வரை 3,49,532 ஆவணங்களும், 7,432 புத்தகங்கள் மற்றும் 97,441 மோடி ஆவணங்களும் மையப்படுத்தப்பட்டுள்ளன.

4. நூலகம், முறையாக பகுக்கப்பட்டு பராமரிக்கப் படும் 2.5 இலட்சம் புத்தகங்கள் தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகத்தில் இடம் பெற்றுள்ளன. இந்நூலகம் பார்வை யிடவும் ஆராய்ச்சிக்குமாக உள்ள நூலகமே தவிர வாடகை நூலகம் அன்று.

5. விவரச் சுவடி பிரிவு.—மாவட்ட விவரச் சுவடிகளை வெளியிடும் பணியில் இப்பிரிவு ஈடுபட்டுள்ளது. இதுவரை, தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர், தென்னாற்காடு, சேலம், இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட விவரச் சுவடிகள் வெளியிடப்பட்டுள்ளன. தர்மபுரி, கன்னியாகுமரி, மற்றும் நீலகிரி மாவட்ட விவரச்சுவடிகள் 1991-92ல் வெளி யிடப்படவிருப்பதுடன், செங்கல்பட்டு எம். ஜி. ஆர். மாவட்ட விவரச் சுவடி தொகுக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுவிடும்.

6. வெளியீட்டுப் பிரிவு.—வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மற்றும் அரசு நிருவாகம் சார்ந்த தெரிந்தெடுத்த ஆவணத் தொகுப்புகளை இக்காப்பகத்தின் வெளியீட்டுப் பிரிவு வெளிக் கொணர்கிறது. இதுவரை, பத்து ஆவணத் தொகுப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. ஆறு ஆவணத் தொகுப்புகள் தயாரிக் கப்பட்டு வரப்படுகிறது. இது தவிர, ‘‘ ஆவண அமுதம் ’’ எனப்படும் காலாண்டு இதழும் வெளியிடப்படுகிறது. இது விலை நிர்ணயம் செய்யப்பட்ட வெளியீடாகும்.

மத்திய அரசு நிதி உதவியுடன் தமிழ்நாடு ஆவணக்காப்பக ஆவணங்களின் வழிகாட்டி தயாரிக்கப்பட்டு வரப்படுகிறது.

7. பயிற்சிப் பிரிவு.—அரசு அலுவலகங்களிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும் ஆவணத் துறை பொறுப்பில் உள்ள பணியாளர்களுக்கான ‘‘ ஆவணப் பராமரிப்பு ’’ குறித்து 30

நாட்கள் பயிற்சி ஒன்று தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தினால் அளிக்கப்பட்டு வரப்படுகிறது. இதுவரை, 1,620 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அரசுத் துறை அல்லாத பொதுத் துறை நிறுவனங்களுக்கும் இப்பயிற்சியை அரசு விரிவாக்கம் செய்துள்ளது.

8. தமிழ்நாடு வரலாற்றுச் சான்றேடுகள் ஆய்வுக் குழு :— வரலாற்று ஆய்வினை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக்குழு ஆண்டுதோறும் தகுதி வாய்ந்த நபர்களுக்கு நான்கு மாணவப் பணியிடங்கள் (Fellow ships) வழங்கி வருகிறது. கல்வி அமைச்சர் இக்குழுவின் தலைவ ராவார். இதுவரை இக் குழுவில் 17 ஆராய்ச்சி மாணவர்கள் சேர்ந்து 15 நபர் ஆய்வு அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர். இவற்றில் இரண்டு அறிக்கைகள் ஆய்வுக் குழுவினால் ஏற்கப் பட்டு, ஆராய்ச்சியாளரால் வெளியிடப்பட தேர்வு செய்யப் பட்டது. இரண்டு ஆராய்ச்சி மாணவர்களிடமிருந்து ஆய் வறிக்கைகள் எதிர்நோக்கப்படுகின்றன. மாநிலத்தில் உள்ள தனியார் ஆவணங்களின் விபரங்கள் அறிந்து அதனைச் சேகரிப்பது இக்குழுவின் தலையாய பணியாகும்.

கர்நாடக மாநிலத்தைச் சார்ந்த ஆவணங்களைப் பிரித்து, மாற்றம் செய்யும் பணிக்காக தற்காலிகப் பணியிடங் களுக்கான ஒப்புதல் அரசால் அளிக்கப்பட்டு, இப்பணி 31—5—91 அன்று துவக்கப்பட்டு, ஆவணங்களைப் பிரிக்கும் பணி முழு வீச்சுடன் செயல்பட்டு வருகிறது.

X. அரசுத் தேர்வுகள்

1. இடைநிலை கல்வித் தேர்வு 1911-ம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு தேர்வு எழுதும் மாணவர் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு கூடி வருகிறது. இவ்வியக்ககம் 41 தேர்வுகளை வெற்றிகரமாக குறித்த நேரத்தில் நடத்தி வருகிறது.

1991-ம் ஆண்டில் நடைபெற்ற இடைநிலைக் கல்வி மற்றும் மேல்நிலைத் தேர்வுகளுக்கு 8,46,586 மாணவர்கள் தேர்வு எழுதி உள்ளனர். விடைத்தாள் மதிப்பீடு பணி தரமானதாகவும், விரைவாகவும், சீரிய முறையில் மைய மதிப்பீடு முறையில் நடத்தப்பட்டது. இத்தேர்வுகளின் முடிவுகள் தேர்வு முடிந்த 45 நாட்களில் வெளியிடப்பட்டு மதிப்பெண் சான்றுகள் அன்றே பள்ளிகளுக்கு விநியோகிக்கப்பட்டுவிட்டன. மதிப்பெண் அட்டவணைப் பதிவேடுகளும் சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு அன்றே வழங்கப்பட்டன. இடைநிலைக் கல்வித் தேர்வு, மேல்நிலைத் தேர்வு, மெட்ரிக், ஆங்கிலோ-இந்தியன், ஆசிரியர் கல்வி பட்டயத் தேர்வு, மருந்தாளுநர் பட்டய படிப்பு, ஆகிய முக்கிய தேர்வுகளும் மற்றும் 35 தேர்வுகளும் இத்துறையினால் நடத்தப்பட்டு வருகின்றன. மேற்கண்ட ஆறு தேர்வுகளின் விடைத்தாள்கள் மைய மதிப்பீடு முறையில் திருத்தப்படுகின்றன.

2. இவ்வியக்ககம் தொழில் நுட்பத் தேர்வுகள், தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் தேர்வுகள் ஆகியவற்றையும் நடத்தி வருகிறது. மேலும் கைத்தறி, நெசவு, இசை, மரவேலை, புத்தகம் கட்டுதல், அச்சுக்கலை ஆகிய தொழில்முறை தேர்வுகளும் நடத்தப்பட்டு வருகின்றன. தேசியத் திறனாய்வு தேர்வும் (முதல் நிலை) அகில இந்திய முறையில் 9,500 தேர்வர்களுக்கு நடத்தப்படுகின்றது.

3. அகில இந்திய ஆட்சிப் பணித் தேர்வு, பொறியியல் பணித் தேர்வு ஆகியவை 22 மையங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்விதத் தேர்வுகள் மற்ற மாநிலங்களில் அந்தந்த மாநில பணியாளர் தேர்வாணை குழுவினால் நடத்தப்பட்டு வருகின்றன.

4. 'கிராமப் புறங்களிலுள்ள மாணவர்களின் அறிவாற்றலைக் கண்டறிதல்' என்னும் புதிய திட்டத்திற்காக நடத்தப்பெறும் தேர்வினையும் இவ் வியக்ககம் நடத்தும்.

XI. அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்

அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தவும், இளைஞர்களிடையே அறிவியலின் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இது கல்வித் துறையின் ஒரு தனிப் பகுதியாக இயங்கி வருகிறது. இது தமிழ் நாட்டில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலை வளர்க்கவும், அவற்றை பயன் படுத்தவும் பிரபலப்படுத்தவும் செயல்பட்டு வருகிறது. கீழ்க் கண்ட தன்னாட்சி நிறுவனங்கள் இத்துணைத்துறையின் கீழே வருகின்றன.

1. தமிழ்நாடு மாநில அறிவியல், தொழில்நுட்பவியல் மன்றம்.

2. தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மையங்கள்.

3. அண்ணா பல்கலைக் கழகத்தில் சில குறிப்பிட்ட சிறப்பு மையங்கள் (விபரங்கள் அண்ணா பல்கலைக் கழகத்தின் கீழ் கொடுக்கப்பட்டு விட்டன).

4. அறிவியல் மற்றும் தொழில் முனைவர்கள் மேம்பாட்டுத் திட்டம்.

தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில் நுட்பவியல் மன்றம்.

2. (i) தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில் நுட்பவியல் உயர்தர நிறுவனமாகத் தமிழக அரசினால் அமைக்கப்பட்டுள்ளது. சமுதாயத்தின் சமூக பொருளாதார வளர்ச்சியை உயர்த்தும் நோக்குடன், விவசாயம், கல்வி, சுகாதாரம், சக்தி போன்ற துறைகளில் அறிவியல் தொழில் நுட்பத் திட்டங்களை தேர்ந்தெடுத்து நிறைவேற்றும் பொறுப்பினை அம்மன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த மன்றம் மத்திய மாநில அரசாங்கங்களின் இணைப்புப் பாலமாகத் திகழ்கிறது. மேலும் மாநில அரசாங்கத்தின் ஆண்டு மற்றும் ஐந்தாண்டு திட்டங்களின் அறிவியல் தொழில் நுட்பப் பிரிவுகளில் ஆலோசனை வழங்கவும் உள்ளது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் தலைவராகவும், புகழ் பெற்ற பொருளாதார நிபுணர் டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேஷய்யா அவர்கள் துணைத் தலைவர் மற்றும் செயற்குழு தலைவராகவும் பொறுப்பேற்று நடத்தி வருகின்றனர்.

(ii) தமிழக அரசு 1986-ம் ஆண்டு முதல் 1991 வரை ரூ. 107 லட்சங்களை கீழே கொடுக்கப்பட்டுள்ள செயல்களுக்காக இந்த மன்றத்திற்கு நிதி அளித்துள்ளது. (1) இந்த மன்றம் ஆராய்ச்சி திட்டங்களை அமுல்படுத்தியும் (2) இளம் விஞ்

ஞானிகளுக்கு உதவி தொகை வழங்கியும் (3) கருத்தரங்குகள் நடத்த நிதி உதவி அளித்தும், (4) தமிழில் குழந்தைகளுக்கான அறிவியல் பத்திரிக்கை வெளியிடுவதற்கு வேண்டிய பொருளாதார உதவி நல்கியும் (5) பொது மக்கள் குழந்தைகளிடையே அறிவியல் தொழில் நுட்பங்களைப் பரப்பியும் (6) தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு அறிவியல் கண்காட்சி அமைத்தும், ஆசிரியர்களுக்கு பணி நேர பயிற்சி அளித்தும் அறிவியல் செயல்களைப் பரப்புகிறது.

(iii) இதுவரை ஏழு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. அவற்றின் முடிவுகள் பரிந்துரைகளுடன் சம்பந்தப்பட்ட அரசு துறைக்கு அனுப்பப்பட்டு மக்கள் நலனுக்காகச் செயல்படுத்தும்படி வேண்டப்பட்டுள்ளன. தற்போது 23 அறிவியல், தொழில் நுட்ப ஆராய்ச்சி திட்டங்கள் மொத்தம் ரூ. 130 லட்சங்கள் செலவில் மேற்கொள்ளப்பட்டு வெவ்வேறு நிலைகளில் உள்ளன. இத்திட்டங்கள், சுற்றுச் சூழல் பராமரிப்பு, குழந்தைகளின் நலன், அறுவடை செய்யப்பட்ட கால்நடை தீவனத்தில் சத்துக்களை மேம்படுத்துதல், குடிநீர்வளங்களைக் கண்டறிதல் போன்று பலதாகும்.

(iv) 'இளம் விஞ்ஞானிகளுக்கு ஊக்குவிப்பு' என்ற திட்டத்தின் கீழ் கருத்தரங்குகளில் பங்குக் கொள்ள பயணச் செலவில் பாதி வழங்கியும், தமிழ்நாட்டில் நல்ல கருத்தரங்குகளை நடத்தி, அறிவியல், தொழில்நுட்ப பயன்களை மேற்கொள்ளவும் இம்மன்றம் ஏற்பாடு செய்கிறது. இவை அன்றி, ஆராய்ச்சிப் பணியாளர்களுக்கும், களநிலை நிர்வாகிகளுக்கும் இடையே கூட்டங்கள், விவாதங்கள் ஆகியவற்றை இம்மன்றம் நடத்தி, ஆராய்ச்சியின் விளைவுகளைக் களத்தில் பயன் படுத்த உதவுகின்றது. தொழில் நுட்ப தகவல் மையத்தையும் இம்மன்றம் நிறுவி, அதன் மூலமாக தொழில் நுட்ப நிறுவனங்கள், மற்றும் ஆராய்ச்சி நிலையங்களுக்கிடையே உறவைப் பலப்படுத்துகிறது.

(v) இவ்வாண்டிற்காக திட்டமிடப்பட்டுள்ள பணிகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவையாவன, வளர்ச்சித் துறைகளோடு சேர்ந்து பணியாற்றுதல், சில குறிப்பிட்ட இடங்களுக்கு தேவையான அறிவியல், தொழில் நுட்பத் திட்டங்களை அறிந்து செயல்படுத்துதல், அறிவியல், தொழில் நுட்பவியல் தகவல் மையம் அமைத்து அனைத்துத் துறைகளுக்கும் அறிவியல் தொடர்பான தகவல்களைக் கொடுத்தல் ஆகியன ஆகும்.

இக்கட்டான சூழ்நிலையிலுள்ள குழந்தைகளின் நலன் கருதி கல்வி அறிவு போதைப் பொருட்களின் கேடு, சுகாதாரம் ஆகியவற்றில் விழிப்புணர்வுத் திட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.

தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மையங்கள்

(iii) தமிழக அரசு 'தமிழ் நாடு அறிவியல் தொழில் நுட்ப மையங்கள்' என்ற ஒரு நிறுவனத்தை மக்கள் அறிவியலைப் பற்றி அறிந்து கொள்வதற்கு ஏற்படுத்தியது. இந்நிறுவனத் திற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் தலைவர் ஆவார். இளைய தலைமுறையினரிடம் அறிவியல் மனப்பாண்மை, எண்ணம் முதலானவற்றை மேம்படுத்துதல் மற்றும் அறிவியல் தொழில் நுட்பத்தின் பயன்களைப் பற்றிய தகவல்களைப் பரப்புதல் ஆகியன அறிவியல் தொழில் நுட்ப மையத்தின் நோக்கமாகும். சென்னையில் உள்ள கோட்டூர்புரத்தில் ரூ. 401.25 இலட்சம் செலவில் பெரியார் அறிவியல் தொழில் நுட்ப வளாகத்தின் முதல் பகுதியை நிறுவுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் அதே வளாகத்தில் ரூ. 200 லட்சம் செலவில் ஒரு கோளரங்கம் நிறுவவும், ஒப்புதல் அளித்துள்ளது.

(ii) பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மையத்தினை நிறுவுவதற்கான கட்டிட வேலை முடிந்து விட்டது. இந்த மையம் 5 காட்சி கூடங்களுடன், தந்தை பெரியார் அவர் களின் பிறந்த தினமான 17–9–1990 அன்று மதிப்பிற்குரிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக் கப்பட்டது. முதல் நுழைவு காட்சிக் கூடமானது பெரியார் காட்சி கூடமாகும். இங்கு தந்தை பெரியார் அவர்கள் தேசிய தலைவர்களுடன் உள்ள திருவுருவ படங்கள் மற்றும் தந்தை பெரியாரின் பொன் மொழிகள் வைக்கப்பட்டுள்ளன. மேலும் நான்கு காட்சிக் கூடங்கள் முறையே போக்குவரத்து, மின்னணு மற்றும் தொடர்பு, இயல் அறிவியல் மற்றும் சிறு வர் காட்சிக் கூடம் முதலான காட்சிக் கூடங்கள் காட்சிப் பொருட்களுடன் அமைந்துள்ளன. உயிர் அறிவியல், கனிம இயல் மற்றும் இயக்கத்திறன் ஆற்றல் முதலான காட்சி கூடங்களுக்கான காட்சி பொருட்கள் உருவாகும் பணி நடந்து வருகிறது. பெரும்பாலான காட்சிப் பொருட்கள் நேரிடை யாக இயக்கி அறியும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளது. இக்காட்சிப் பொருட்களை இயக்கும்போது, பொது மக்கள் இளையத் தலைமுறையினர் குறிப்பாக சிறுவர்கள் மகிழ்ச்சி, யடைகிறார்கள். இக்காட்சிப் பொருட்களின் அறிவியல் கோட் பாடுகளை சிறுவர்கள் மற்றும் மாணவர்கள் அறிந்து கொள்ள தூண்டும் ஆர்வத்தினை இது வளர்க்கிறது. கிராமப் புறங்களில் அறிவியலை பரப்புவதற்காக, காட்சிப் பொருட் களுடன் கூடிய ஒரு நடமாடும் அறிவியல் கண்காட்சியை இம் மையம் நடத்தி வருகிறது. இதிலுள்ள 24 காட்சிப் பொருட் களும் செயல்பாடுகளுடைய அறிவியல் காட்சிப் பொருட் களாகும். இதுவரை 70 கிராமங்களில் உள்ள 80 பள்ளிகளில் இக்கண்காட்சியை இம்மையம் நடத்தியுள்ளது. 3–1–1990 லிருந்து 30–11–1990 வரை இக்கண்காட்சியை 94,800 பார்வை யாளர்கள் கண்டு களித்துள்ளார்கள். 1991-ல் அதிகமான மாணவர்கள் பயன்பெறும் வண்ணம் செயல்பட்டுவருகின்றது.

(iii) 1988 ஆம் ஆண்டு மே திங்கள் 11 ஆம் நாள், 236 நபர்கள் அமர்ந்து பார்க்கத்தக்க கோளரங்கம், மேன்மை தங்கிய இந்திய ஜனாதிபதி அவர்களால் நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. தொழிலதிபர் சி.கே. பிர்லா அவர்களால் இக்கோளரங்கம் மனமுவந்து இம்மையத்திற்கு அளிக்கப்பட்டது. இங்கு காண்பிக்கப்படும் நிகழ்ச்சிகளில் ஞாயிற்றுக்குடும்பம், கட்டு மீறிய பேரண்டம், விண்வெளி ஆய்வுப் பயணம், பருவ காலங்கள், விண்மீன் குழு, சந்திரன், செவ்வாய், வட-தென் துருவங்கள் முதலானவை காண்பிக்கப்படுகின்றன. மேலும், சென்னை மாநகரத்தின் இரவு மற்றும் பகல் நேர வண்ண தோற்றங்களும் காண்பிக்கப்படுகின்றன. கோளரங்கம், வானவியல், வான்கோளவியல், விண்வெளி அறிவியல் முதலானவற்றைப் பற்றி பல்வேறு பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது. தொலை நோக்கி மூலமாக பல வான்பொருட்களை பொது மக்களுக்கு நேரடியாக காண்பிக்கப்படுகிறது. இந்நிகழ்ச்சி இலவசமாக நடத்தப்படுகிறது. தமிழிலும், ஆங்கிலத்திலுமாக கோளரங்கம் ஐந்து நிகழ்ச்சிகளை வானவியலின் பல்வேறு பிரிவுகளில் அறிமுகப்படுத்தியுள்ளது ஆறாவது கோளரங்க நிகழ்ச்சியாக 'வால் நட்சத்திரங்கள்' என்ற தலைப்பில் தற்பொழுது ஒரு காட்சி தயாரிக்கப்பட்டு வருகிறது. இதுவரை இந்நிகழ்ச்சிகளை சுமார் 6.7 இலட்சம் பார்வையாளர்கள் கண்டு களித்துள்ளார்கள்.

4. அறிவியல் மற்றும் தொழில் முனைவர்கள் மேம்பாட்டுத்திட்டம்.—(i) இந்திய அரசின் அறிவியல்-தொழில் நுட்பவியல் துறை அமைச்சகம், அறிவியல்-தொழில் நுட்பவியல் துறையைச் சேர்ந்த தேசிய அறிவியல் தொழில் நுட்பவியல் தொழில் முனைவர் மேம்பாட்டு வாரியத்தின் கூட்டு முயற்சியுடன் தருமபுரி மாவட்டத்திற்குத் தொழில் வாய்ப்புப் பற்றிய தகவல் குறிப்புத் தயாரிப்புத் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்குத் தற்போது அறிவியல் தொழில் நுட்பவியல் தொழில் முனைவோர்த்திட்டம் எனப்பெயரிடப்பட்டு 1985 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது· தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்கழகம் இந்தத் திட்டத்தின் மொத்த செயலாட்சி முகமையாகும். இந்தியத் தொழிற் நுட்பவியல் நிறுவனங்களிலும், பல்கலைக் கழகங்களிலும் பொறியியல் கல்லூரிகளிலும் பட்டம் பெற்றவர்களுக்கும் அறிவியல் தொழில்— நுட்பவியல் பணியாளர்களுக்கும் சுயவேலை வாய்ப்பை உருவாக்குவதற்காகவே இத்திட்டம் முக்கியமாக வகுக்கப்பட்டுள்ளது.

(ii) இத்திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தில் உள்ள விவரங்களைக் கொண்டும் மற்றும் பல நிறுவனங்களிலிருந்து கிடைக்கக் கூடிய விவரங்களை வைத்தும் தருமபுரி மாவட்டத்திற்கு என்று ஒரு ''தொழில் வள வாய்ப்பு விவர நூல்'' தயாரிக்கப்பட்டது. தொழில் தொடங்கும் வாய்ப்புகள் பற்றிய ஒரு மூன்றாண்டு முன்னோக்கத்

திட்டத்தைத் தயாரித்துள்ளது. சில நிறுவனங்களால், இன்னின்ன தொழில் துறைகள், தருமபுரி மாவட்டத்திற்கு ஏற்றவை எனத் தெரிந்தெடுக்கப்பட்டு, அவ்விவரங்கள் அடங்கிய அட்டவணைப் புத்தகம் வெளியிடப்பட்டு வெவ்வேறு நிறுவனங்களுக்கு அனுப்பி விரிவாக விளம்பரப்படுத்தப்பட்டது.

(iii) அறிவியல்-தொழில் நுட்பவியல் நபர்களிடம் தொழில் முனைப்பு எண்ணத்தை ஊக்குவிக்க அறிவியல்-தொழில் நுட்பவியல் முனைவர் மேம்பாட்டுத் திட்ட அதிகாரிகள் கருத்தரங்குகளையும் மற்றும் பயிற்சிகளையும் நடத்தி இருக்கிறார்கள். இதைத் தவிர, தொழில் முனைவர் மேம்பாட்டுத் திட்டத்தில் பயிற்சி பெற்ற நபர்கள் எழுவர் மற்றும் அறிவியல் தொழில் நுட்பவியல் நபர்கள் 70 பேர் ஆகியோருக்கு குறிப்பிட்ட தொழில்களுக்கான செயல் திட்ட அறிக்கைகளைத் தயாரிக்க இத்திட்டம் உதவி செய்துள்ளது. தொழில் முனைவர்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் பயிற்சி பெற்ற 4 நபர்களுக்கும், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையைச் சார்ந்த 40 பேருக்கும் நிதி நிறுவனங்களுடன் தொடர்பு ஏற்படுத்தி உதவிபெற வகை செய்துள்ளது. புதிய நிறுவனங்களை நிறுவுவதற்கு தொழில் முனைவர் திட்டம் பயிற்சி பெற்ற 3 நபர்களும் அறிவியல் தொழில் நுட்பவியல் துறையினர் 30 பேருக்கும் உதவி அளிக்கப்பட்டது. மொத்தம் நிறுவப்பட்டுள்ள 33 நிறுவனங்கள் 395 பேருக்கு வேலைவாய்ப்பை அளித்துள்ளது. இத் திட்டத்தை தருமபுரி மாவட்டத்தில் செயற்படுத்துவதற்காக 1990—91-ல் ரூபாய் 4.12 இலட்சம் மைய அரசு மானியமாக வழங்கி (மெக்சாட்) என்ற திட்டத்தின் மூலம் 57 தொழில் முனைவோரை உருவாக்கியது. மைய அரசின் அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சிக் கழகத்தின் ஆய்வகமாகிய மத்திய மின் வேதியியல் ஆராய்ச்சி நிலையத்தின் ஒத்துழைப்புடன் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் :

1990-91ஆம் ஆண்டிலும் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், மத்திய அரசின் மரபு வழிச் சாரா எரிசக்தித் துறையின் உதவியுடன் கீழ்க்காணும் திட்டங்களைத் தொடர்ந்து செயல் படுத்தி வருகிறது.

(1) மின் உற்பத்திக்கும் மற்றும் நீர் இறைப்பதற்கும் உதவிடும் காற்றாலைகள் நிறுவுதல்.

(2) உயிரியல் சார்ந்த எரிசக்தி-எரிசக்தி தாவரங்கள் வளர்த்தல் மற்றும் சாண எரிவாயு சாதனங்கள் நிறுவுதல்.

(3) வீடு மற்றும் தொழில் நிறுவனங்களின் உபயோகத்திற்காக சூரிய சக்தி சுடுநீர் சாத்னங்கள் அமைத்தல்.

(4) ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டங்கள்.

(5) ஊர்ஜாகிராம்.

(6) உராய்வற்ற சக்தி மிகுந்த ஃபுட்வால்வுகள் வழங்குதல்.

மின் உற்பத்திக்கான காற்றாலைகள் :

மாற்று சக்தி அமைப்பின் கீழ், முதலாவது காற்றாலை சிதம்
பரனார் மாவட்டத்தில் தூத்துக்குடிக்கு அருகே முல்லைக்காடு
என்னும் இடத்தில் 1.1 மெ.வா. ஒருங்கிணைந்த திறனுடன்
நிறுவப்பட்டது. ஒவ்வொன்றும் 90 கி.வா. மின் உற்பத்தித்
திறன் கொண்ட 15 காற்று சுழல்வான்கள் அடங்கிய இரண்
டாவது காற்றாலைத் தொகுப்பு கயத்தாறில் 1988ஆம் ஆண்டு
மார்ச் மாதம் நிறுவப்பட்டது. ஒவ்வொன்றும் 200 கி.வா.
திறன் கொண்ட இரு வெஸ்டாஸ் (Vestas) இயந்திரங்கள் பின்
னர் நிறுவப்பட்டது. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்
டத்தில் புளியங்குளம் என்ற இடத்திலும், கோயம்புத்தூர் மா
வட்டத்தில் சுல்தான்பேட்டை என்ற இடத்திலும் இரண்டு முன்
னோடிக் காற்றுச் சுழல்வான்கள் (90 கி.வா.) நிறுவப்பட்டன.
டானிடா மானியத் திட்டத்தின் கீழ் கயத்தாறு மற்றும் முப்
பந்தல் ஆகிய இரு இடங்களிலும் 10 மெ.வா. திறன் கொண்ட
காற்றாலைத் தொகுப்புகள் நிறுவும் பணி முடிவடைந்துள்ளது.
இத்திட்டத்திற்கான மொத்த செலவுத் தொகை ரூ. 22 கோடி
யாகும். இதில் இயந்திரங்களுக்காகச் செலவிடக்கூடிய ரூ. 17.5
கோடி மட்டும் டானிடா நிதி உதவித் திட்டத்தின் கீழ் துவக்கப்
பட்டுள்ளது. இதர செலவுத் தொகை ரூ. 4.5 கோடி தமிழ்நாடு
எரிசக்தி வளர்ச்சி நிறுவனமும் தமிழ்நாடு மின்சார வாரியமும்
சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன. இக்காற்றாலை மார்ச்
1990இல் நிறுவப்பட்டு விட்டது. இதுகாறும் 444 இலட்ச யூனிட்
மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

நீர் இறைக்கும் காற்றாலைகள் :

வருடம் முழுமைக்கும் தமிழக மாநிலம் முழுவதும் மிகுந்த காற்று வளம்பெற்றுள்ளதால், நீர் இறைக்கும் காற்றாலைகளுக்கு அதிக தேவை ஏற்பட்டிருக்கிறது. 1988-89ஆம் ஆண்டிற்கு 250 காற்றாலைகளுக்கு மத்திய அரசின் மரபு வழிச் சாரா எரிசக்தித் துறை ஒப்புதல் வழங்கியுள்ளது. 1989-90ஆம் ஆண்டில் 74 காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன. மத்திய அரசின் மரபு வழிச் சாரா எரிசக்தித் துறை 1989-90ஆம் ஆண்டிற்கு 100 (12 பியு 500) காற்றாலைகளுக்கும், 20 இழுவை வகை காற்றாலைகளுக்கும் ஒப்புதல் வழங்கியுள்ளது. இதுகாறும் 629 காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன.

மத்திய அரசு செயல் விளக்க ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் 40 கியர் அமைப்பு காற்றாலைகள் தமிழ்நாட்டிற்கு ஒப்புதளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் செயலாக்கத்தில் இருந்து வருகிறது.

உயிரியல் சார்ந்த எரிசக்தி :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் தேவர்குளம் மற்றும் முத்தம்மாள்புரம் ஆகிய இரு கிராமங்களிலும் மொத்தம் 523 ஹெக்டேர் நிலப்பரப்பில் எரிசக்தித் தாவரங்கள் பயிரிடும் திட்டத்தை 1988-89ஆம் ஆண்டில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த செலவு மதிப்பீடு ரூ. 52.3 இலட்சம் ஆகும். இத்திட்டத்தில் ஏறத்தாழ 600 விவசாயிகள் பங்கேற்றார்கள். இதுவரையிலும் மொத்த நிலப்பரப்பில் 12.55 இலட்சம் கன்றுகள் நடப்பட்டு விட்டன. கன்றுகளின் வளர்ச்சி பயனளிக்கக்கூடியதாக உள்ளது.

சாண எரிவாயு சாதனங்கள் :

இதுவரை 61 திட்டக் கருத்துருக்கள் (நிறுவன எரிவாயுக் கலன்கள் 58, சமூக எரிவாயுக் கலன்கள் 3) மரபு வழிச்சாரா எரிசக்தித் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இவற்றில் ரூ. 57.16 இலட்சத்திற்கு 55 திட்டக் கருத்துருக்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. 35 கலன்கள் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன.

சூரிய சக்தி விரிவாக்கத் திட்டம் :

1990-91ஆம் ஆண்டில் 224 சூரிய சக்தி சுடுநீர் சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதுகாறும் 940 வீடுகளுக்கான சூரிய சக்தி சுடுநீர் சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன. அத்துடன் பெரிய அளவிலான 140சூரிய சக்தி சுடுநீர் சாதனங்களும் நிறுவப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி திட்டம் :

உள்ளூரில் கிடைக்கும் எரிசக்தி வளங்களை முதன்மையாகப் பயன்படுத்தும், மரபு வழிச் சாரா எரிசக்தி ஆதாரங்கள் மற்றும்

மரபு வழிச்-சார்ந்த எரிசக்தி ஆதாரங்கள் ஆகியவற்றின் பெரிதும் உகந்த கலவை மூலம் வீட்டிற்கும், உற்பத்தி நடவடிக்கைகளுக்கும் வேண்டிய எரிசக்தித் தேவைகளை எதிர்கொள்ள ஒரு வட்டாரத்தை திட்டமிடும் அலகாகக் கொண்ட, நில வளர்ச்சி அணுகுமுறையின் அடிப்படையாக இத்திட்டம் உள்ளது.

1989–90 ஆம் ஆண்டில் இந்தச் செயல் முறை மூன்று வட்டாரங்களின், அதாவது அண்ணா மாவட்டத்தில் பழனியிலும், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் வாலாஜாவிலும், தர்மபுரி மாவட்டத்தில் ஹரூரிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பழனி மற்றும் வாலாஜா வட்டாரங்களைப் பொறுத்த வரை, இவற்றிற்கான எரிசக்தி அறிக்கைகள் மத்திய அரசின் மரபு வழிச் சாரா எரிசக்தித் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளன. 1990-91 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட ஐந்து வட்டாரங்களில் இத் திட்டம் செயலாக்கப்பட்டது :—

1. திருத்துறைப்பூண்டி வட்டாரம்—தஞ்சை மாவட்டம்.

2. குண்ணாண்டார் கோயில் வட்டாரம்—புதுக்கோட்டை மாவட்டம்.

3. இராஜாக்கமங்கலம் வட்டாரம்—கன்னியாகுமரி மாவட்டம்.

4. நாங்குனேரி வட்டாரம்—நெல்லை—கட்டபொம்மன் மாவட்டம்.

5. தாராபுரம் வட்டாரம்—பெரியார் மாவட்டம்.

ஊர்ஜா கிராம் :

மத்திய அரசின் மரபு வழிச் சாரா எரிசக்தித் துறை ஊர்ஜா கிராம் திட்டத்திற்கு (மாதிரி எரிசக்தி கிராமம்) 45 கிராமங்களில் ரூ. 101.77 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டம் முடியும் தருவாயில் உள்ளது.

டாக்டர் அம்பேத்கார் நூற்றாண்டு விழாவினை கருத்தில் கொண்டு மத்திய அரசின் மரபு வழிச் சாராத் துறை ரூ. 37.64 இலட்ச செலவில் கீழ்க்கண்ட நான்கு கிராமங்களில் சிறப்பு எரிசக்தி கிராமத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத் திட்டம் முடியும் தருவாயில் உள்ளது.

1. ஆமூர் கிராமம்—சோழாவரம் வட்டாரம்—செங்கை—எம்.ஜி.ஆர். மாவட்டம்.

2. கீழநத்தூர் கிராமம்—இளையான்குடி வட்டாரம்—பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.

3. வீராணபுரம் கிராமம்—குருவிக்குளம் வட்டாரம்—நெல்லை–கட்டபொம்மன் மாவட்டம்.

4. கீழூர் கிராமம்—கே. வி. குப்பம் வட்டாரம்— வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம்.

உராய்வற்ற ஃபுட்வால்வுகள் :

1990-91ஆம் ஆண்டில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் 10,400 உராய்வற்ற ஃபுட்வால்வுகளை நிறுவியுள்ளது. ஒரு ஃபுட்வால்விற்காகத் தரப்படுகிற மானியம் ரூ. 500 ஆகும். இதுகாறும் 13,917 ஃபுட்வால்வுகள் மாற்றப்பட்டுள்ளன.

1991-92ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட இருக்கிற திட்டங்கள் :

1. இரு 1.5 மெ.வா. காற்றாலைத் தொகுப்புகள் கயத்தாறிலும், கோட்டைக் கருங்குளத்திலும் இவ்வாண்டு இறுதிக்குள் நிறுவப்பட உள்ளது.

2. தனியார் துறையிலும், பொதுத் துறையிலும் மானிய அடிப்படையில் ரூ. 66 இலட்சம் பெறுமானமுள்ள 50 சூரிய வெப்பத்தால் சுடுநீர் ஆக்கும் சாதனங்கள், தொழிற்சாலைகள் சிற்றுண்டிச்சாலைகள், உணவகங்கள், ஆலைகள் ஆகியவற்றில் நிறுவப்பட எண்ணப்பட்டுள்ளது.

3. 200 வீடுகளுக்கான சூரிய சக்தி சுடுநீர் சாதனங்கள் நிறுவப்பட எண்ணப்பட்டுள்ளது.

4. 40 இழுவை வகை நீர் இறைக்கும் காற்றாலைகள் 80 சதவீத மானியத்தில் வழங்கப்பட உள்ளது.

5. 20 சாண எரிவாயு சாதனங்கள் நிறுவப்பட இருக்கின்றன.

6. ரூ. 6 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 2 வட்டாரங்களில் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி செயல்முறைத் திட்டங்கள். அறிமுகப்படுத்தப்பட உள்ளன.

இராம வீரப்பன்,
கல்வியமைச்சர்.

இணைப்பு 1.

பள்ளிக் கல்வி பற்றிய விபரங்கள்.

(1)	1984—85 (2)	1988—89 (3)	1989—90 (4)	1990—91 (5)
		(மாணவர்கள் இலட்சத்தில்)		
அ. வெவ்வேறு வயதுத் தொகுதி சிறார் மொத்த எண்ணிக்கை.—				
வயதுத் தொகுதி 6–11.				
சிறுவர் ... ... — ..	36.11	37.94	38.39	38.81
சிறுமியர் ... — ..	35.28	37.06	37.50	37.92
மொத்தம் ...	71.39	75.00	75.89	76.73
வயதுத் தொகுதி 11–14.				
சிறுவர்	16.25	17.12	17.38	17.64
சிறுமியர் ... — ..	15.88	16.73	16.98	17.23
மொத்தம் ..	32,13	33.85	34.86	34.87

வயதுத் தொகுதி 14–16.				
சிறுவர்	9.08	9.57	9.71	9.86
சிறுமியர்	8.87	9.34	9.49	9.62
மொத்தம் ..	17.95	18.91	19.20	19.48
வயதுத் தொகுதி 16–18.				
சிறுவர்	8.56	9.02	9.16	9.30
சிறுமியர்	8.37	8.81	8.95	9.08
மொத்தம் ...	16.93	17.83	18.11	18.38

ஆ: பள்ளியில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை—

வயதுத் தொகுதி 6–11 *				
சிறுவர்	38.11	40.89	41.40	41.83
சிறுமியர்	32.33	34.86	35.38	35.81
மொத்தம் ...	70.44	75.75	76.78	77.64

	1984—85	1988—89	1989—90	1990—91
(1)	(2)	(3)	(4)	(5)
	(மாணவர்கள் இலட்சத்தில்)			
வயதுத் தொகுதி 11–14.				
சிறுவர் — — — —	13.95	16.91	17.57	18.14
சிறுமியர் — — —	9.24	12.13	12.76	13.45
மொத்தம்	23.19	29.04	30.33	31.59
வயதுத் தொகுதி 14–16.				
சிறுவர் — — — —	5,42	6.57	6.82	7.08
சிறுமியர் — — —	3.10	4.05	4.24	4.49
மொத்தம் —	8.52	10.62	11.07	11.57

	1984—85	1988—89	1989—90	1990—91
வயதுத் தொகுதி 16–18.				
சிறுவர்	1.99	2.47	2.63	2.80
சிறுமியர்	1.33	1.75	1.87	1.99
மொத்தம் ..	3.32	4.22	4.50	4.79

I முதல் V வரை வகுப்புகளில் பயிலுகின்ற நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்கு குறைவாகவும் அதிகமாக உள்ளவர்களையும் சேர்த்து

இ. பள்ளியில் சேர்க்கப்பட்டோர் சதவீதம்.

	1984—85	1988—89	1989—90	1990—91
வயது தொகுதி 6–11 *				
சிறுவர்	105.53	107.79	107.84	107.76
சிறுமியர்	91.64	94.07	94.34	94.46
சிறுவரும் சிறுமியரும்	98.66	101.01	101.16	101.99
வயதுத் தொகுதி 11–14 *				
சிறுவர்	85.82	98.77	101.09	102.86
சிறுமியர்	58.21	72.53	75.17	78.02
சிறுவரும் சிறுமியரும்	72.18	85.80	88.28	90.58

வயதுத் தொகுதி 14—16.				
சிறுவர்	59.69	68.65	70.35	71.86
சிறுமியர்	34.93	43.34	44.73	46.67
சிறுவரும் சிறுமியரும்	47.45	56.14	57.69	59.42
வயதுத் தொகுதி 16—18— ..				
சிறுவர்	23.19	27.35	28.76	30.11
சிறுமியர்	15.90	19.93	20.85	21.86
சிறுவரும் சிறுமியரும்	19.59	23.68	24.85	26.04

I முதல் VIII வகுப்புகளில் பயிலுகின்ற நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்கு குறைவாகவும் அதிகமாகவும் உள்ளவர்களையும் சேர்த்து.

(ஈ) பள்ளிகளின் எண்ணிக்கை.

தொடக்கப் பள்ளிகள்	28,847	29,359	29,491	29,979
நடுநிலைப் பள்ளிகள்	5,691	5,707	5,651	5,624
உயர்நிலைப் பள்ளிகள்	2,476	2,923	3,034	3,136
மேல்நிலைப் பள்ளிகள்	1,474	1,787	1,915	2,008
மொத்தம்	38,488	39,775	40,091	40,747

(1)	(2)	(3)	(4)	(5)
(உ) ஆசிரியர்களின் எண்ணிக்கை.				
தொடக்கப் பள்ளிகள்	1,16,305	1,18,009	1,18,922	1,19,921
நடுநிலைப் பள்ளிகள்	66,849	65,716	65,668	65,555
உயர்நிலைப் பள்ளிகள்	38,328	41,597	42,170	42,565
மேல்நிலைப் பள்ளிகள்	62,932	69,017	71,158	72,816
மொத்தம்	2,84,414	2,94,339	2,97,918	3,00,857
(ஊ) சராசரி ஒரு ஆசிரியருக்கு மாணவர் எண்ணிக்கை—				
(1) பள்ளிவாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும் ஆசிரியர் தொகையில் சேர்த்து).				
தொடக்கப்பள்ளிகள்	42	45	46	46
நடுநிலைப்பள்ளிகள்	42	45	46	46
உயர்நிலைப்பள்ளிகள்	28	33	35	37
மேல்நிலைப்பள்ளிகள்	28	32	33	33

(2) வகுப்புத் தொகுதி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும் ஆசிரியர் தொகுதியில் சேர்த்து).

தொடக்கப் பள்ளிகள்	..	41	47	47	47
நடுநிலைப் பள்ளிகள்	..	36	38	41	42
உயர்நிலைப் பள்ளிகள்	..	26	28	28	29
மேல்நிலைப் பள்ளிகள்	..	21	20	21	22

1990—91 இல் (1990 அக்டோபர் மாதம் 1 ஆம் நாள் நிலவரப்படி) தமிழ் நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் குறித்த எண்ணிக்கை.

பள்ளிகளின் வகைகள். (1)		பள்ளிகளின் எண்ணிக்கை. (2)	மாணவர்கள் (இலட்சத்தில்.) (3)	ஆசிரியர்கள். (4)
தொடக்கப் பள்ளிகள்.—				
அரசு	..	1,479		
நகராட்சி மாநகராட்சி	..	1,134	55.59	1,19,921
ஊராட்சி ஒன்றியம்	..	22,254		
தனியார்	..	5,112		
மொத்தம்	..	29,979		
நடுநிலைப் பள்ளிகள்.—				
அரசு	..	221		
நகராட்சி மாநகராட்சி	..	417	29.88	65.555
ஊராட்சி ஒன்றியம்	..	3,055		
தனியார்	..	1,931		
மொத்தம்	..	5,624		
மொத்த தொடக்கப் பள்ளிகள்		35,603	85.47	1,85,476

உயர்நிலைப் பள்ளிகள்—மாநில கல்வித் துறை பள்ளிகள்.—			
அரசு ..	1,864		
நகராட்சி மாநகராட்சி ..	83	13.42	34,917
தனியார் ..	414		
மொத்தம் ..	2,361		
ஆங்கிலோ-இந்தியன் ..	13	0.11	305
மெட்ரிகுலேசன் ..	669	1.69	5,110
சி.பி.எஸ்.ஈ. போன்ற பள்ளிகள் ..	93	0.53	2,233
மொத்த உயர்நிலைப் பள்ளிகள்	3,136	15.75	42,565
மேல்நிலைப் பள்ளிகள்—மாநிலக் கல்வித் துறை பள்ளிகள்.—			
அரசு ..	848		
நகராட்சி ..	68	21.73	62,780
தனியார் ..	744		
மொத்தம் ..	1,660		

பள்ளிகளின் வகைகள்.	பள்ளிகளின் எண்ணிக்கை.	மாணவர்கள் (இலட்சத்தில்).	ஆசிரியர்கள்.
(1)	(2)	(3)	(4)
ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகள் ..	28	0.37	1,068
மெட்ரிகுலேசன் பள்ளிகள் ..	239	1.32	5,122
சி.பி.எஸ்.ஈ. போன்ற பள்ளிகள் ..	81	0.95	3,846
மொத்தம் மேல்நிலைப் பள்ளிகள்	2,008	24.37	72,816
மொத்தம் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்	5,144	40.12	1,15,381
மொத்தம் (அனைத்து பள்ளிகளும் சேர்த்து)	40,747	125.59	3,00,857
	(இலட்சம்)		
சிறுவர் ..	68.85		
சிறுமியர் ..	55.74		
மொத்தம் ..	124.59		

நிருவாக வாரியாக பள்ளி ஆசிரியர்களின் விவரங்கள்—1990-91.

பள்ளிகளின் வகைகள்.	அரசு.		
	அரசுப் பள்ளிகள்.	ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்.	நகராட்சி மாநகராட்சி
(1)	(2)	(3)	(4)
தொடக்கப் பள்ளிகள்	8,065	72,019	9,537
நடுநிலைப் பள்ளிகள்	3,214	26,932	7,082
உயர்நிலைப் பள்ளிகள்	26,359	..	1,545
மேல்நிலைப் பள்ளிகள்	30,733	..	3,970
மொத்தம் ..	68,371	98,981	22,134

	தனியார்.	மொத்தம்.	ஆண்.	பெண்.
	(5)	(6)	(7)	(8)
தொடக்கப் பள்ளிகள் ..	30,300	1,19,921	71,336	48,585
நடுநிலைப் பள்ளிகள் ..	28,327	65,555	33,879	31,676
உயர்நிலைப் பள்ளிகள் ..	14,661	42,565	24,749	17,816
மேல்நிலைப் பள்ளிகள் ..	38,113	72,816	43,052	29,764
மொத்தம் ..	1,11,401	3,00,857	1,73,016	1,27,841

பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கை வகுப்பு வாரியாக.

வகுப்புகள்.	1990—91 ஆசிரியர்களின் எண்ணிக்கை.		
	ஆண்.	பெண்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
1—5	92,863	71,662	1,64,345
6—8	42,489	32,544	75,033
9—10	25,090	14,668	39,758
11—12	12,754	8,967	21,721
மொத்தம் ..	1,73,016	1,27,841	3,00,857

1990—91ல் பள்ளிகளில் படித்து வந்த மாணவ மாணவியர் எண்ணிக்கை வகுப்புவாரியாக.

வகுப்புகள்.	மேல் நிலைப் பள்ளிகள்.	உயர் நிலைப் பள்ளிகள்.	நடு நிலைப் பள்ளிகள்.	தொடக்கப் பள்ளிகள்.	மொத்தம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
	(மாணவர்களின் எண்ணிக்கை இலட்சத்தில்.)				
1—5					
மாணவர்	1.02	1.02	9.95	29.84	41.83
மாணவியர்	0.91	0.79	8.37	25.74	35.81
மொத்தம்	1.93	1.81	18.32	55.58	77.64
6—8					
மாணவர்	6.42	5.08	6.64		18.14
மாணவியர்	4.41	4.11	4.93		13.45
மொத்தம்	10.83	9.19	11.57		31.59

(1)	(2)	(3)	(4)	(5)	(6)
9—10					
மாணவர்	4.35	2.73			7.08
மாணவியர்	2.47	2.02			4.49
மொத்தம்	6.82	4.75			11.57
11—12					
மாணவர்	2.80				2.80
மாணவியர்	1.99				1.99
மொத்தம்	4.79				4.79
1—12					
மாணவர்	14.59	8.83	16.59	29.85	69.85
மாணவியர்	9.78	6.92	13.30	25.74	55.74
மொத்தம்	24.37	15.75	29.89	55.59	125.59

இணைப்பு–II.

கல்லூரிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்.

விவரங்கள். (1)	1984–85 (2)	1988–89 (3)	1989–90 (4)	1990–91 (5)
1. மொத்த மாணவர்களின் எண்ணிக்கை—				
(1) பி.ஏ.	61,802	58,850	60,488	56,179
(2) பி.எஸ்சி.	82,596	84,426	87,648	91,080
(3) பி.காம்.	32,028	35,086	35,390	35,417
(4) பட்ட மேற்படிப்பு	15,858	18,236	19,689	20,687
(5) பிற படிப்புகள்	—	—	—	3,687
மொத்தம் ..	1,92,284	1,96,598	2,03,215	2,07,042
2. ஆசிரியர்களின் எண்ணிக்கை—				
(1) அரசுக் கல்லூரிகள்	4,347	4,564	4,603	4,579
(2) தனியார் கல்லூரிகள் ..	9,540	10,344	10,428	10,563
(3) உதவி பெறாத மற்றும் சுயநிதிக் கல்லூரிகள்.	—	—	—	596
மொத்தம் ..	13,887	14,908	15,031	15,738

(1)	(2)	(3)	(4)	(5)
3. கல்லூரிகளின் எண்ணிக்கை (கலை மற்றும் அறிவியல்)—				
(1) அரசு — ..	53	54	54	54
(2) தனியார் :(மானியம் பெறுபவை)	134	133	132	132
(3) மானியம் பெறாதவை ..	6	23	26	27
மொத்தம் ...	193	210	212	213

இதர கல்லூரிகளின் எண்ணிக்கை.

வகை.	கல்லூரிகளின் எண்ணிக்கை. அரசு	தனியார் (மானியம் பெறுபவை).	தனியார் (மானியம் பெறாதவை).	மாணவர்களின் எண்ணிக்கை 1990—91.	ஆசிரியர்களின் எண்ணிக்கை 1990—91.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
(1) உடற்பயிற்சி கல்லூரிகள்.	..	3	..	396	40
(2) புலவர் கல்லூரிகள் ..	—	9	6	1,772	175
(3) சமுதாயப் பணிப் பள்ளி ..	..	2	..	261	24
மொத்தம் ..	..	14	6	2,429	239

இணைப்பு— 3.

நூறு சதவீத எழுத்தறிவை நோக்கிய முயற்சிகள்.

(இலட்சங்களில்)

1979–80 முதல் 1990–91 வரை பல வயது வந்தோர் கல்வித் திட்டங்கள்.

வ. எண்.	ஊரக செயல்முறை எழுத்தறிவுத் திட்டம்	மாநில வயது வந்தோர் கல்வித் திட்டம்	தொண்டு நிறுவனம்	பல்கலை கல்லூரிகள்	நேரு யுவேக் கேந்திரா	பிறர்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1. 1979–80 மொத்தம் (ஆண் பெண்)	1.22 (0.95+0.27)	..	0.48 (0.21+0.27)	0.20 (0.11+0.09)	0.07 (0.04+0.03)	..
2. 1980–81 மொத்தம்	1.24 (0.63+0.61)	2.07 (1.03+1.04)	0.14 (0.04+0.10)	0.16 (0.09+0.07)	0.05 (0.03+0.02)	..
3. 1981–82 மொத்தம்	1.22 (0.41+0.81)	1.99 (0.76+1.23)	.. ..	0.06 (0.03+0.03)	0.06 (0.03+0.03)	..
4. 1982–83 மொத்தம்	1.32 (0.47+0.85)	2.06 (0.77+1.29)	0.21 (0.06+0.15)	0.08 (0.04+0.04)	0.04 (0.03+0.01)	..
5. 1983–84 மொத்தம்	1.58 (0.36+1.22)	3.71 (1.37+2.34)	0.44 (0.16+0.28)	0.13 (0.07+0.06)	0.03 (0.02+0.01)	..
6. 1984–85 மொத்தம்	1.60 (0.05+1.55)	3.55 (0.47+3.08)	0.55 (0.12+0.43)	0.21 (0.09+0.12)	0.01 (0.007+0.004)	..
7. 1985–86 மொத்தம்	2.52 (0.25+2.27)	3.76 (0.60+3.16)	0.49 (0.11+0.38)	0.20 (0.09+0.11)	0.003 (0.001+0.002)	..

8. 1986–87 மொத்தம்	2.64 (0.23+2.4)	4.06 (0.95+3.11)	0.96 (0.21+0.75)	0.23 (0.09+0.14)	..	1.09 (0.42+ 1.57)
9. 1987–88 மொத்தம்	2.67 (0.56+2.11)	5.12 (1.51+3.61)	1.04 (0.20+0.84)	0.11 (0.05+0.06)	0.0003 (0.0002+0.0001)	1.00 (0.42+ 0.58)
10. 1988–89 மொத்தம்	2.76 (0.99+1.77)	5.16 1.60+3.56)	0.95 (0.15+0.80)	0.10 (0.04+0.06)	0.18 (0.08+0.10)	1.11 (0.84+ 0.27)
11. 1989–90 மொத்தம்	2.50 (0.97+1.53)	2.30 (0.73+1.57)	0.66 (0.16+0.50)	0.07 (0.30+0.04)	0.06 (0.03+0.03)	0.61 (0.39+ 0.22)
12. 1990–91 மொத்தம்	2.48 (0.86+1.62)	2.49 (0.16+2.33)	0.97 (0.24+0.73)	0.08 (0.03+0.05)	..	0.78 (0.46+ 0.32)

அடைப்புக் குறியுள் இருப்பவை பயன்பெற்ற ஆண்— பெண்களைக் குறிக்கும்.

கல்வித்துறை நிதி ஒதுக்கீடு
EDUCATION BUDGET
1991-92
(ரூ. 12,98,90 லட்சம்)



	ரூபாய் Rs. (லட்சத்தில் / in lakhs)
1. தொடக்கக் கல்வி Elementary Education	5,43,93
2. உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிக் கல்வி Secondary, Hr. Sec. Education	3,73,53
3. கல்லூரிக் கல்வி University Education	1,32,43
4. கலை, பண்பாடு Art & Culture	12,16
5. தொழில் நுட்பக் கல்வி Technical Education	45,11
6. வயது வந்தோர் கல்வி Adult Education	13,48
7. விளையாட்டு, இளைஞர் நலம் Sport & Youth Welfare	9,70
8. மொழி வளர்ச்சி Language Development	1,46
9. பொது - ஏனைய செலவு General-Other Expenditure	1,62,48
10. கட்டடப் பராமரிப்பு Building Maintenance	4,62

மாணவர் சேர்க்கையின் வளர்ச்சி

GROWTH OF ENROLMENT

1956–57 To 1990–91



ஆசிரியர்-மாணவர் விகிதம் / TEACHER – PUPIL RATIO



மாவட்டவாரிக் கல்வியறிவு
LITERACY RATE BY DISTRICTS
1991



1. சென்னை 2. செங்கல்பட்டு எம். ஜி. ஆர். 3. வடாற்காடு அம்பேத்கார் 4. தருமபுரி
5. திருவண்ணாமலை சம்புவராயர் 6. தென்னாற்காடு 7. சேலம் 8. பெரியார் 9. நீலகிரி
10. கோயம்புத்தூர் 11. திண்டுக்கல் அண்ணா 12. திருச்சிராப்பள்ளி 13. தஞ்சாவூர்
14. புதுக்கோட்டை 15. பசும்பொன் முத்துராமலிங்கம் 16. மதுரை 17. காமராஜர்
18. இராமநாதபுரம் 19. சிதம்பரனார் 20. திருநெல்வேலி கட்டபொம்மன்
21. கன்னியாகுமரி

1. Madras 2. Chengalpattu M.G.R. 3. North Arcot Ambedkar 4. Dharmapuri 5. Thiruvannamalai Sambuvarayar 6. South Arcot 7. Salem 8. Periyar 9. Nilgiris 10. Coimbatore 11. Dindigul Anna 12. Thiruchirapalli 13. Thanjavur 14. Pudukottai 15. Pasumpon Muthuramalingam 16. Madurai 17. Kamarajar 18. Ramanathapuram 19. Chidambaranar 20. Tirunelveli Kattabomman 21. Kanniyakumari

கல்லூரிகளின் விளக்கப்படம் (மாவட்ட வாரியாக)

DIAGRAM OF COLLEGES (DISTRICTWISE)



வருவாய் மாவட்ட வாரியாகக் கல்லூரிகளின் எண்ணிக்கை
LIST OF COLLEGES IN EACH REVENUE DISTRICT

வ. எண் S. No.	மாவட்டத்தின் பெயர் Name of the District	ஆண் Men	பெண் Women	மொத்தம் Total
1.	சென்னை Madras	15	12	27
2.	செங்கல்பட்டு எம். ஜி. ஆர். Chengalpattu M.G.R.	11	2	13
3.	வடாற்காடு அம்பேத்கார் North Arcot Ambedkar	12	2	14
4.	தருமபுரி Dharmapuri	2	1	3
5.	திருவண்ணாமலை சம்புவராயர் Thiruvannamalai Sambuvarayar	2	–	2
6.	தென்னாற்காடு South Arcot	7	2	9
7.	சேலம் Salem	6	7	13
8.	பெரியார் Periyar	5	1	6
9.	நீலகிரி Nilgiris	1	2	3
10.	கோயம்புத்தூர் Coimbatore	15	5	20
11.	திண்டுக்கல் அண்ணா Dindigul Anna	2	2	4
12.	திருச்சிராப்பள்ளி Thiruchirapalli	12	5	17
13.	தஞ்சாவூர் Thanjavur	13	5	18
14.	புதுக்கோட்டை Pudukottai	2	1	3
15.	பசும்பொன் முத்துராமலிங்கம் Pasumpon Muthuramalingam	6	2	8
16.	மதுரை Madurai	18	5	23
17.	காமராஜர் Kamarajar	6	3	9
18.	இராமநாதபுரம் Ramanathapuram	2	1	3
19.	சிதம்பரனார் Chidambaranar	9	1	10
20.	திருநெல்வேலி கட்டபொம்மன் Tirunelveli Kattabomman	11	2	13
21.	கன்னியாகுமரி Kanniyakumari	12	3	15